16-31 அக் 1996 □ ரூ. 3.50
www.padippakam.com

### தி.மு.க. ரௌடியிசத்தின் தொடக்கம்

# புதிய ஜனநாயகம்





## ஊழலில் முதலிடம் “தேசிய”வாதிகளிடையே போட்டா போட்டி

படிப்பகம்

★ கடந்த இரண்டு மூன்று இதழ்களாக மேல் அட்டை ஆரம்ப காலத்தில் வந்தது போன்று வருவதால் எடுப்பாக இல்லை. எழுத்துக்களும் தெளிவாக இல்லை. படிப்பதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எழுத்துக்கள் கரைந்து கறுப்பு அடிக்கிறது. சிறிய எழுத்துக்களாக இருப்பதாலும் சிரமமாக உள்ளது. கட்டம் கட்டிப் போடும் போது வண்ணத்தில் வெள்ளை எழுத்துக்களாக வந்தால் எடுப்பாக இருக்கும்.

— கரூர் வாசகர் வட்டம்
சார்பாக பி. தவமணி




● **இது போன்ற பல வாசகர்களிடம் இருந்தும் விமர்சனங்கள் வருகின்றன. அச்சகம் பழுதாகி, சரியான மையும் இல்லாததால் இந்தக் குறை ஏற்பட்டுள்ளது. தவறுக்கு வருந்துகிறோம். இனிப் புதிய அச்சகத்தில் தெளிவாக அச்சிட ஏற்பாடு செய்கிறோம். எழுத்துக்களைப் பெரிதாக்கி அச்சிடவும் செய்வோம். ஆ. குழு**

★ பழைய வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொடர் கட்டுரையாக வெளியிடலாம். ஊழலுக்கு எதிராக சட்டம் தன் கடமையைச் செய்யும் என்று கூறிவிட்டு, கருணாநிதி அரசு எடுத்து வரும் ஆமை வேக நடவடிக்கையை, அதனுடைய நோக்கம் (உள்ளாட்சி தேர்தலை வைத்துத் தினசரி ஒரு செய்தி என்ற வடிவத்தில்) இவைகளை உடனடியாக அம்பலப்படுத்த வேண்டும். குறிப்பாக சசிகலா, தியாகேசுவரன் போன்றவர் மீது இன்னும் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை. திமுக ஆட்சியின் மற்ற நடவடிக்கைகளான, ஜனநாயக வேடத்தையும், வெளிநாட்டு நிறுவனங்களை தமிழ்நாட்டில் தொழில் தொடங்க அனுமதிப்பது போன்றவற்றை அம்பலப்படுத்த வேண்டும். ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. ஆகியவை தலித் கிறித்துவர்களுக்கான இட ஒதுக்கீட்டை எதிர்த்து தலித் இந்துக்களுக்காக பாடுபடுவதாக நாடகமாடுவதையும், தலித்துகளுக்குள்ளேயே மோத விடுவதையும் அம்பலப்படுத்தவேண்டும்.

— கரூர் வாசகர் வட்டம்

★ ''சிவந்த கண்கள் கவனிக்கட்டும்'' ''செய்திப்பதிவுகள்'' ஆகிய இரண்டு தலைப்புகளும் பொருத்தமற்றவையாக உள்ளன. ஏற்கனவே சிவந்த கண்களுக்கு மட்டுமே அழைப்பு விடுகிற மாதிரி உள்ளதை அனைவரது கண்களும் சிவக்கும்படியாக பொருள் தரும் வகையில் ''கண்கள் சிவக்கட்டும்'' அல்லது ''கண் சிவந்தால் மண் சிவக்கட்டும்'' என்று பெயரிடலாம். ''செய்திப் பதிவுகள்'' பகுதியின் கீழ்வரும் செய்திகள் கிளர்ச்சியுறும் படியாக உள்ளன. ஆனால் அந்த மனக்குமுறலுக்குத் தகுந்த மாதிரி பெயர் இல்லாமல் ஏதோ இன்றைய நிகழ்ச்சி நிரல் என்பது போல், ''செய்திப் பதிவுகள்'' என்ற சொல்லே பண்டிதத்தனமாக உள்ளது. இரண்டு பகுதிகளையும் இணைத்து ஒரே பகுதியாக, பொருத்தமான பெயருடன் இடம் பெறலாம். ஒவ்வொரு கட்டுரையையும் முடிக்கும் போது தகுந்த அரசியல் முழக்கம் வைக்கலாம். ஒவ்வொரு கட்டுரைக்கும் சுருக்கமான முன் குறிப்பு அவசியம் தரவேண்டும்.

பெரும்பாலான பத்திரிக்கைகளில் ஆசிரியரே தலையங்கம் எழுதும் அளவுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. ஒரு அரசியல் பத்திரிக்கையை மதிப்பிட தலையங்கமே போதுமானது. எனவே தலையங்கம் எந்தப் பிரச்சினை மீது எழுதப்படுகிறதோ அதில் மனதை ஈர்க்கும்படி, வாசகரிடம் நேரிடையாக உரையாடும் உணர்வை ஏற்படுத்தும் வகையில், அவரது உள்ளத்தைத் தொடும்படி, ஆசிரியர் மீது ஒருவித பற்றுதல் ஏற்படும்படி எழுத வேண்டும். ஆசிரியரை நேரில் காண வாய்ப்பு இல்லாத காரணத்தால் அவரது பிரதிநிதியாகப் பத்திரிக்கை இருக்க வேண்டும். எனவே கட்டுரை ஆசிரியரின் மீது ஒரு பற்றுதல், அதன்பிறகு பத்திரிக்கை மீது, அதைக் கொண்டு செல்வோர் மீது, பிறகு ஒட்டுமொத்தமாக புரட்சிகர அமைப்பின் மீது பற்றுதல் ஏற்படுகிறது. இதுதான் ஒரு வாசகரை புரட்சிகர இயக்கத்தில் அணிதிரள உதவுகின்றது. அமைப்புடன் தொடர்பு கொண்டு, சித்தாந்தத் துறையில் பயின்று புரட்சியாளராக அவர் மாறுவதற்கு தூண்டுகோலாக தலையங்கம் அமையவேண்டும். அனல் பறக்கும் வகையில் எழுச்சியூட்டக் கூடிய வாசகங்களுடன் இருக்க வேண்டும்.

— சந்திரமோகன், ஒண்டிப்புதூர்.

★ பத்திரிக்கை விற்பனையைக் கூடுதலாக்கவும், பார்ப்போரை சுண்டி இழுக்கவும், முதலாளித்துவ வியாபார இதழ்களுக்கிடையில் வெற்றிகரமாக நடத்தவும், நல்ல தோற்றம் கொண்ட தரமான அட்டைத்தாளில் அச்சிடவேண்டும். கருத்துப்படங்கள் எளிமையானதாக, அடிமட்ட வாசகரும் புரிந்து கொள்ளக் கூடியதாக வரவேண்டும். கட்டுரைகளின் தலைப்புக்கேற்ப நறுக்குத் தெறித்தாற்போன்ற புள்ளிவிவரங்கள் தேவை.

**இரா. கதிரவன், நல்லம்பள்ளி**

★ அச்சு தெளிவாக இல்லை. கூடுதல் பக்கங்களுடன் அதிக செய்திகளுடன் இருந்தால் படிக்க அதிக நேரம் கிடைக்கும். தமிழ்நாட்டு செய்தி என்று தனியாக பக்கம் தனித்தலைப்பில் வந்தால் சிறப்பாக இருக்கும்.

— இ. முத்துராமன்,
இராசபாளையம்.

★ செப்'96, பு.ஜ. இதழில் கென்-சரோ-விவா பற்றிய கட்டுரை உள்ளத்தைத் தொடுவதாக உள்ளது. தேசிய உணர்வுகள் மழுங்கி வரும் இந்த நேரத்தில் நமது ஒவ்வொரு இதழிலும் இதுபோல் கட்டுரை எழுதுவது சிறப்பானதாகவும் புதிய வாசகர்களுக்கு உற்சாக மூட்டுவதாகவும் அமையும். ''இதுதான் சமூக நீதியின் வெற்றியா?'' என்ற கட்டுரை சாதி ஆதிக்கக் கொடுங்கோன்மைக்கு எதிரான கோபத்தை கிளறிவிட்டதுடன், என்னுள் ஒளிந்துள்ள இயலாமை குறித்து வருத்த மூட்டுவதாக இருந்தது. சிறப்பு. இது போன்ற கட்டுரை அவசியம் தேவை.

செ. மோகன், ஈரோடு

● **வாசகர்கள் தெரிவித்துள்ள ஆலோசனைகள், விமர்சனங்களை ஏற்கிறோம். புதிய ஜனநாயகத்தை செழுமைப் படுத்த இவற்றைப் பயன்படுத்திக் கொள்வோம். — ஆசிரியர் குழு**

**அன்புள்ள வாசகர்களுக்கு,**

**கேள்வி - பதில் தொடங்குவது பற்றிய அறிவிப்பினை கடந்த இதழின் முன் வெளியிட்டிருந்தோம். பல வாசகர்கள் இதை வரவேற்றுக் கடிதங்கள் எழுதியுள்ளனர். ஆயின், வாசகர்களிடமிருந்து கேள்விகள் வராதிருப்பதன் காரணமாக, இவ்விதழிலும் கேள்வி - பதில் பகுதி இடம் பெறவில்லை. இப்பகுதி வருவதற்கு வாசகர்களின் பங்களிப்புதான் பிரதானமானது என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்.**

**மேலும், புதிய ஜனநாயகம் இதழைத் தடங்கலின்றித் தொடர்ச்சியாகக் கொண்டு வருவதில் நிதி நெருக்கடி மிகுந்த சிக்கலை ஏற்படுத்தி வருகிறது. இச்சிக்கலைச் சமாளிக்க வாசகர்கள் தமது நண்பர்கள் - அலுவலக ஊழியர்கள் - உறவினர்களிடம் பு.ஜ.வை அறிமுகப்படுத்தி, சந்தா சேகரித்து அனுப்புமாறு வேண்டுகிறோம். அன்புடன்,**

**ஆசிரியர் குழு.**

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 11

இதழ்: 21-23

16 செப். '96 - 31 அக். '96

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
பால் பெட்டி எண்: 6015,
சோக் நகர்,
ன்னை - 600 083.


## கௌடா - ராவ் கிரிமினல் கூட்டு "தேசிய"த்தின் முகவிலாசம்

"நரசிம்ம ராவ் - சுக்ராம், ஜெயலலிதா - சசிகலா, லல்லு பிரசாத் போன்ற இலஞ்ச ஊழல், மோசடிப் பேர்வழிகளின் அரசியல் வாழ்வு அந்திமக்காலத்தை நெருங்கி விட்டது. சட்டம் தனது கடமையைச் செய்யத் துவங்கிவிட்டது. நீதி நிலை நாட்டப்படும்; குற்றவாளிகள் இனிமேலும் தப்ப முடியாது. இனி இவர்களைப் போன்றவர்களின் கொட்டம் ஒடுக்கப்படும். இறுதியில் ஜனநாயகம் வென்றுவிட்டது" - என்று பாமரத்தனமான அரசியல் நோக்கர்கள் பலரும் கருதுகின்றனர். பத்திரிகைகள் மற்றும் அரசுசார் செய்திப் பிரச்சார சாதனங்கள் இதே கருத்தை உருவாக்குகின்றன. ஆனால் நரசிம்ம ராவோ, ஜெயலலிதாவோ அவ்வளவு எளிதாக அரசியல் அரங்கில் இருந்து விலகிக் கொள்வதாக இல்லை. அவர்கள் இதுவரை கொள்ளையடித்துச் சேர்த்து வைத்த சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கே, தமது அரசியல் தகுதியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. அதற்காக அவர்கள் எல்லாவித தகிடுதித்தங்களையும் புரிகின்றனர்.

முதலாவதாக, இந்த கிரிமினல் குற்றவாளிகள் கோடி கோடியாகக் கொள்ளையடித்து வைத்திருக்கும் பணத்தைக் கொண்டு யாரையும் விலைபேசி வாங்க முயலுகிறார்கள். ஒரு மணிக்கு இலட்சக் கணக்கில் கட்டணம் வசூலிக்கும் கபில் சிபால், பராசரன் போன்ற வழக்கறிஞர்களை வைத்துக் கொள்கிறார்கள். உச்சநீதி மன்றம், உயர்நீதி மன்றம் என்று மாறிமாறி "ரிட்" வழக்குகள் போட்டு, சட்டச் சிக்கல்களை உருவாக்கி முடக்குகின்றனர்.

இரண்டாவதாக, அதிகார வர்க்கம், உளவுத்துறை போலீசு, நீதித்துறையில் தமக்குள்ள தொடர்புகளைப் பயன்படுத்தி சாட்சியங்களை அழித்தும், முதல் தகவல் அறிக்கை, குற்றப் பத்திரிகைகளைத் தமக்குச் சாதகமாக அமைத்துக் கொண்டும் விடுகின்றனர். அதற்கு முன்பாக குற்றவாளிகள் பட்டியலில் தமது பெயரை இடம்பெறச் செய்யாமல் தடுக்கின்றனர். சில நீதிபதிகளைச் சரிக்கட்டி பல வழக்குகளிலும் இடைக்காலத் தடை, அல்லது நீதிபதி இட மாற்றங்கள், பாதுகாப்பு வசதி போன்றவைகளைக் கோரிப் பெற்று வழக்குகளை முடக்குகின்றனர்.

மூன்றாவதாக, தற்போதைய ஐக்கிய முன்னணி அரசு காங்கிரசின் ஆதரவில் தொங்கிக் கொண்டிருக்கிறது. அதோடு நரசிம்ம ராவும் ஜெயலலிதாவும் பிரதமர் தேவே கவுடா, சட்ட அமைச்சர் ரமாகாந்த் காலப், ஆளுங்கட்சிப் பிரமுகர்களான லல்லு பிரசாத், பிஜு பட்நாயக், தரகு முதலாளிகளான அம்பாணி, விஜய் மல்லையா போன்றவர்களுடன் - கள்ளக் கூட்டு வைத்துக் கொண்டுள்ளனர். இவற்றை வைத்துக் கொண்டு அதிகார வர்க்கம், உளவுத் துறை போலீசு, நீதித்துறையின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றனர்.

அரசியல் கிரிமினல் குற்றவாளிகளின் இத்தகைய தகிடுதித்தங்களால் நாட்டின் அரசியல் அமைப்பு முழுவதுமே கடுமையான நெருக்கடிக்குள் சிக்கிவிட்டதாக அரசியல் விமர்சகர்கள் பதறுகின்றனர். இந்த நெருக்கடியின் தீர்வு நரசிம்ம ராவ், ஜெயலலிதா, சுக்ராம், சசிகலா போன்ற குற்றவாளிகளைத் தண்டிப்பதன் மூலம், நீதித்துறை உட்பட நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு தன்னை மேலான, சீரிய அமைப்பு முறையாக நிரூபித்து வெற்றி பெறுமா? அல்லது மேற்படி குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிவிடுவது மட்டுமல்ல; அதற்கான வழியில் நீதித்துறை உட்பட நாட்டின் நாடாளுமன்ற அரசியல் அமைப்பையே வெட்டிச் சிதைத்து, சின்னா பின்னப்படுத்தி விடுவதில் வெற்றி பெற்றுவிடுவார்களா? என்கிற கேள்விகளை எழுப்பி அலறுகிறார்கள்.

இந்தக் கேள்விகள், கூப்பாடுகளில் சாரம் இல்லை என்று யாரும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. இந்திரா, ராஜீவ் காந்தி காலத்தில் இருந்தே பல்வேறு கிரிமினல் குற்றச்சாட்டுகளில் இருந்து ஆளுவோரைத் தப்புவிப்பதும், அவர்களின் அரசியல் எதிரிகள் மீது பொய்வழக்குகள் போட்டு கொடுமைப்படுத்துவதும்தான் மத்திய உளவுப் படை - சி.பி.ஐ.யின் முக்கிப் பணியாக இருந்து வருகிறது. இதற்கு வசதியாகவே சி.பி.ஐ. இயக்குநர்கள் போன்ற உயர் அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர்; பதவி நீட்டிப்புப் பெறுகின்றனர் அல்லது பழி வாங்கப்படுகின்றனர். இந்தப் போக்கு நரசிம்ம ராவ் ஆட்சியில் உச்சகட்டத்தை அடைந்து விட்டது. நரசிம்ம ராவுக்கு விசுவாசியான விஜய ராம ராவ் மற்றும் அவரைத் தொடர்ந்து வந்த தேவே கௌடாவின் விசுவாசியான ஜொகீந்தர் சிங் ஆகிய இரு இயக்குநர்களும் பலமுறை நீதிமன்றக் கண்டனங்கள், தடைகள் பெற்றும் தமது "எஜமானர்"களைக் கண்டு "சலாம்" போட்டு உத்தரவுகள் பெற்று இயங்கி வருவது நீடித்தது.

இலக்குபாய் பாதக் மோசடி, செயின் கிட்ஸ் தீவு போலி ஆவணத் தயாரிப்பு (ஃபோர்ஜரி) வழக்குகள் பல ஆண்டுகளாகியும் விசாரணையின்றி கிடப்பில் போட்டு வைத்தது சி.பி.ஐ. தனியார்களின் பொது நல வழக்குகள் காரணமாக இவை முடுக்கி விடப்பட்டாலும், இவற்றின் குற்றவாளிகள் பட்டியலில் நரசிம்மராவ் முதலிய அரசியல் வாதிகளின் பெயர்களைச் சேர்க்க மறுத்தது சி.பி.ஐ. இதே போன்றுதான் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா எம்.பி.களுக்கு இலஞ்சம் கொடுத்த வழக்கிலும் நடந்து கொண்டது. தனியார்களின் முயற்சி, நீதிமன்றங்களின் தலையீடு - கண்டிப்பு காரணமாக அவர்கள் பெயர்கள் சேர்க்கப்பட்டன. இதேபோலத்தான் ஏராளமான ஆதாரங்கள் இருந்தும்

படிப்பகம்

www.padippakam.com

ஜெயா - சசி ஆட்சி இருந்தவரை, நரசிம்ம ராவ் கூட்டு காரணமாக இக்கும்பல் மீதான வழக்குகளை முடக்கி வைத்திருந்தது; அல்லது ஆமை வேகத்தின் நகர்த்தியது. இப்போதும் வெளிநாட்டில் இருந்து 5 கோடி ரூபாய் ஜெயா பரிசு வாங்கிய வழக்கில் அடிப்படை ஆதாரம் வலுவானதாக இல்லை என்று கூறி சி.பி.ஐ. விசாரணைக்கே எடுத்துக் கொள்ள மறுத்தது. 133 கோடி ரூபாய்க்கு துருக்கியில் இருந்து உர இறக்குமதி ஒப்பந்த மோசடி வழக்கில் நரசிம்ம ராவ் மகனைத் தப்பிக்க விடுவதோடு, காலக் கெடுவுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாது, அவரது நெருங்கிய உறவினரைப் பிணையில் செல்ல அனுமதித்தது.


ஏற்கனவே நரசிம்ம ராவுக்கு ஹர்சத் மேத்தா ஒரு கோடி ரூபாய் லஞ்சம் கொடுத்த புகார், சர்க்கரை இறக்குமதியில் கமிசன் அடித்ததாக புகார், பெங்களூர் பங்குச் சந்தை தரகுக் கம்பெனியிடமிருந்து நரசிம்ம ராவ் மகனின் ஐதராபாத் தொழில் நிறுவனம் மூலம் கோடிக்கணக்கில் இலஞ்சம் வாங்கிய புகார் என்று பல வழக்குகளிலும் ஆதாரமில்லை என்று தப்பிக்க விட்டது. இலக்குபாய் பாதக் மோசடி வழக்கில் நீதிமன்றத்தின் முன் வரும்படி பிறப்பிக்கப்பட்ட ஆணையை பாதுகாப்பு காரணங் கூறி செயல்படுவதைத் தடுத்தது. அந்த வழக்கில் நரசிம்ம ராவின் பிணை மனுவை எதிர்க்காமல் விட்டது. இதனால் கோபமுற்ற சி.பி.ஐ. வழக்கறிஞரே பதவி விலகினார்.

சி.பி.ஐ. அளவுக்குப் பகிரங்கமாக இல்லாவிட்டாலும், நீதிமன்றங்களும் குறிப்பாக உச்சநீதி மன்றமும் ராவ், கௌடா, ஜெயா போன்ற கிரிமினல் பேர்வழிகளுக்குச் சாதகமாக சட்டத்தை முறுக்கி வியாக்கியானம் செய்தும், அவித்தனமான தீர்ப்புகள் வழங்கியும் விசுவாசமாக நடந்து கொள்கிறது. ஜெயலலிதா மீதான கிரிமினல் வழக்குகளை விசாரிக்க ஆளுநர் சென்னாரெட்டி அளித்த அனுமதியையும், ஜெயாவைப் பதவி நீக்கம் செய்ய தேர்தல் கமிசன் விசாரணையையும் முடக்கி வைத்தது உச்சநீதி மன்றம். நரசிம்ம ராவ் - தேவே கௌடா கூட்டின் கண்ணசைவிற்கு ஏற்ப ''ஜெயின் - ஹவாலா'' வழக்கை நடத்திச் செல்கிறது. இலக்குபாய் பாதக் மோசடி வழக்கில் கீழ் நீதிமன்றம் நரசிம்ம ராவை குற்றவாளியாக்கி, சம்மன் அனுப்பியதற்கு எதிராக நரசிம்ம ராவின் ''ரிட்'' மனு மீது இரண்டுங்கெட்டான் தீர்ப்பு வழங்கியது. எந்தவிதக் காரணமும் கூறாமல் கீழ் நீதிமன்ற உத்திரவை நிறுத்தி வைத்தது. பின்பு நரசிம்ம ராவ் வழக்கறிஞர்களுடன் பேரம் பேசி விசாரணை நீதிபதியை மாற்றியது. புதிய நீதிபதியும் நரசிம்மராவ் மீதான குற்றவழக்கை உறுதி செய்து, சம்மன் அனுப்பியபோது பாதுகாப்புக் காரணங்களைக் கூறி அதையும் நிறுத்தி வைத்தது.

செயிண்ட் கிட்ஸ் தீவு போலி ஆணை வழக்கில் நரசிம்ம ராவுக்கு, பிணையில் போக முடியாத கைது ''வாரண்ட்'' பிறப்பித்தது கீழ் நீதிமன்றம். அதையும் நிறுத்தி வைத்துவிட்டது டெல்லி உச்சநீதி மன்றம். இந்த இரு வழக்குகளிலும் நரசிம்ம ராவுடன் இணைத்துக் குற்றஞ்சாட்டப்பட்ட சந்திராசாமியும் மாமாஜியும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஆனால் சட்டத்திற்கு முன்பு அனைவரும் சமம் என்பதை அப்பட்டமாக மீறி, நரசிம்ம ராவுக்கு மட்டும் விலக்கு அளித்துள்ளது. நரசிம்ம ராவுக்கு சாதகமாகத் தீர்ப்புச் சொல்வதற்கு முன்பு பிரதமர் கௌடாவை, தனது வீட்டில் சந்தித்துத் தலைமை நீதிபதி அகமதி பேசியுள்ளார் என்பதில் இருந்து, ராவ் - கௌடா கும்பலின் திட்டமிட்ட சதிகள் மூலமே வழக்குகள் நடத்தப்படுவது தெரிகிறது. நரசிம்ம ராவ் கைது என்று வந்தாலும், அவருக்கு ஐந்து நட்சத்திர வசதிகளுடன் கூடிய மாளிகைக் காவல்தான் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

காங்கிரசின் ஆதரவோடுதான் கௌடா அரசு தொங்கிக் கொண்டிருக்கிறது. இதையே சாதகமாக வைத்து, தம்மீதான எல்லா வழக்குகளிலும் இருந்து தப்பித்துக் கொள்ளவே அரசியல் குற்றக் கும்பல்கள் முயலுகின்றன. இதை எதிர்க்கும் தார்மீக உரிமை இல்லாததாக முக்கிய எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாவின் அத்வானியும், பிற தலைவர்களும் கூட ''ஹவாலா'' வழக்கில் சிக்கிக் கொண்டுள்ளனர். நரசிம்மராவுக்கு சாதகமாக கௌடா அரசு நடந்து கொள்வதை எதிர்த்து முனுமுனுத்தாலும், அதைக் கவிழ்க்கும் அளவுக்கு போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு துணிவு கிடையாது. ''வலது''களுக்கோ மத்திய மந்திரி பதவியை இழந்து விடக்கூடாது; ''இடது''களுக்கோ கேரளா, மே.வங்கம், திரிபுரா ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். இதனாலேதான் வேறு எந்த ஆட்சி வருவதையும் தடுப்பதே தமது கொள்கையாகக் கொண்டுள்ளனர்.

அரசு அமைப்பின் சிகப்பு நாடாவுக்குள் வழக்குளைச் சிக்க வைத்து இழுத்தடிப்பது, முடக்கி வைப்பது என்கிற உத்தியைக் கடைப்பிடிக்கும் இந்த அரசியல் கிரிமினல்கள் வேறு சில பிரச்சினையைக் கிளப்பி குட்டையைக் குழப்புகின்றனர். பல ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் மீது வழக்குகள் போட்டு சிறையிலடைப்பதால், அதிகார வர்க்கத்தினிடையே பயபீதி அவநம்பிக்கை பரவி, அதன் தார்மீக பலமே அழிந்துவிடும் என்று ஓலமிடுகின்றனர். இதன் மூலம் புகார்கள், விசாரணைகள், தண்டனைகளுக்கு அப்பாற்பட்ட தனிவகைச் சாதியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் உரிமை கோருகிறது அதிகார வர்க்கம். இதே போல, நாடாளுமன்றம், சட்டமன்றம், அரசாங்கங்களில் பங்கேற்கும் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளிலும், அரசு நிர்வாகத்திலும் நீதிமன்றம் தலையிடுவது கூடாது; இப்படிச் செய்வது மக்கள் பிரதிநிதித்துவ அமைப்புகளின் அதிகாரத்துக்கு மேலாக நீதித்துறை தன்னை நிறுத்திக் கொள்வதாகும்; எனவே இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று சபாநாயகர் முதல் பல காங்கிரசு கயவாளிகளும் பிரச்சாரம் செய்கின்றனர். இதன் மூலம் இந்திரா காலத்தில் செய்ததைப் போல வழக்குக[illegible] நீதிமன்ற விசாரணைகளுக்கு அப்[illegible] பட்ட நிலையில் அரசியல்வா[illegible] வைக்கும் சிறப்பு உரிமை பெற [illegible] என்று கோருகின்றனர். [illegible] இலஞ்ச ஊழலும் அதிகார[illegible] ளும், அவற்றுக்குக் காரண[illegible] கிரிமினல்களும் இந்த [illegible] பின் ஒரு அங்கமென்[illegible] வேண்டும் என நிர்[illegible] நிர் பந்தத்துக்கு [illegible] வழியிலேயே [illegible] ஜனநாயக அர[illegible]




நீங்கள் தூங்குவது போல நடியுங்கள்; நான் பார்த்துக் கொள்கிறேன் என்று தேவே கௌடாவிடம் தலைமை நீதிபதி கூறினாரோ?



படிப்பகம்

www.padippakam.com

# ரௌடித்தனங்களை மறைக்க தி.மு.க.வின் ஆரம்ப சூரத்தனங்கள்

ஆட்சிக்கு வந்த ஐந்து மாதங்களில்
கருணாநிதி நடத்தி வரும் ஆரம்ப சூரத்த
னங்களைக் கண்டு பத்திரிகைகளும் படிப்
பாளிகளும் அகமகிழ்ந்து போகிறார்கள்.
அவரது பரம எதிரியான "துக்ளக்" சோ
கூட, இதுவரை குறைகூறும் படியாக அவர்
நடந்து கொள்ளவில்லை என்று நற்சான்றி
தழ் தருகிறார்.

தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும்
கொலை, கொள்ளை, சூறையாடல், மிரட்
டல், ரௌடித்தனம் என்று வன்முறைகள்
ஆங்காங்கே நடந்த போதிலும், நீண்ட
காலமாக அடக்கி வைத்திருந்த உணர்ச்சி
களை கீழ்மட்ட அணிகள் வெளிப்படுத்திய
தாகச் சமாதானம் கூறிக் கொள்கிறார்கள்.
எம்.ஜி.ஆர். பெயரில் புதிய மாவட்டம்,
ராஜீவ் பெயரில் போக்குவரத்துக் கழகம்,
எம்.ஜி.ஆரின் மனைவியும் முன்னாள்
முதல்வருமான ஜானகி மறைவுக்கு அரசு
விடுமுறை அளித்தது என கருணாநிதியின்
பெருந்தன்மைகளைப் பத்திரிகைகள் பட்டி
யல் போடுகின்றன. பதவியேற்றதுமே கிரா
மப்புற வீட்டு மனை வரியை ரத்து செய்
தார்; ரௌடிகள் ராஜ்ஜியமாகத் திகழ்ந்த
தமிழகத்தில், ரௌடிகளைக் கட்டுப்படுத்த
வும் அவசியமானால் சுட்டுக் கொல்லவும்
போலீசாருக்கு சர்வ சுதந்திரம் அளித்துள்
ளார். சென்னை மாநகர மக்களின் நீண்ட
நாள் கனவாகிய கிருஷ்ணா நதி நீர்த் திட்
டத்தை விரைவுபடுத்தி மக்களின் தாகத்
தைத் தணித்துள்ளார். உள்ளூராட்சி, நக
ராட்சித் தேர்தல்களை அறிவித்து, ஜனநாய
கத்துக்குப் புத்துயிர் அளித்துள்
ளார். அவரது அமைச்சர்கள் திடீர்
சோதனை நடத்தி குறைகளைக்
கேட்டு நிர்வாக சீர்திருத்தம் செய்கி
றார்கள். ஜெயா ஆட்சியில் துதிபா
டும் கூடமாக இருந்த சட்டமன்
றத்தை, ஆக்கபூர்வமான விவாதங்
கள் நடத்தும் அரங்கமாக மாற்றி,
அதன் மாண்பை நிலை நாட்டியுள்
ளார் இப்படி கருணாநிதியின் சாத
னைகளை, அருமை பெருமை
களை அடுக்கிக் கொண்டே போகி
றார்கள்.

கருணாநிதி முன்போல
எவ்வளவோ மாறிவிட்
டது குறைகள் - தவறுக
...த்திக் கொண்டு விட்
...யின் போது சூப்பர்
...யே இதை விளக்கி
...அளித்தார். "என்
... ஏற்பட்டால்,
... போடுவது

போல பதவியை உதறி விடுவேன்" என்று
கருணாநிதியே பகிரங்கமாக ஒப்புக்
கொண்டுள்ளார். கடைசியாக, தமிழ்நாட்
டுக்கு ஒரு நல்லாட்சி கிடைத்து விட்டது
என்று புகழ்ந்து தள்ளுகிறார்கள்.

கருணாநிதி இப்படி சில நடவடிக்கை
களை மேற்கொண்டு வருவது உண்மை
தான். ஆனால் இவையெல்லாம் ஆரம்ப
சூரத்தனங்கள்! ஒவ்வொரு முறையும்
ஆட்சி மாறும் போது, இம் மாதிரியான
சூரத்தன நடவடிக்கைகளை புதிய ஆட்சி
யாளர்கள் செய்வது வாடிக்கையானது
தான். இப்படித்தான் பாசிச ஜெயா கும்பல்
ஆட்சிக்கு வந்தபோது பத்திரிகைகளும்
படிப்பாளிகளும் துதிபாடினர். அப்புறம்
கொஞ்சம் கொஞ்சமாக அந்த ஆட்சி, முந்
தைய ஆட்சியை விட படுமோசமாகி விட்
டது; இருந்தாலும் ஜெயாவை விட்டால்
வேறு நாதியில்லை" என்ற முடிவுக்கு வந்த
னர். அதே வழியில் தான் இப்போதைய
ஆட்சியையும் பத்திரிகைகள் துதிபாடுகின்
றன.

கருணாநிதியைப் பொருத்தவரை நக
ராட்சி, உள்ளூராட்சித் தேர்தல் வரையிலா
வது இத்தகைய சூரத்தனங்களைக் காட்ட
வேண்டியுள்ளது. தனது வாரிசு மு.க. ஸ்டா
லினுக்கு ஆட்சிச் சொத்தைக் காப்பாற்றி
ஒப்படைக்க வேண்டும் என்ற தந்தைக்கே
உரிய பொறுப்புணர்வோடுதான் அவர்
செயல்படுகிறார். கருணாநிதி கடந்த காலத்
தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு
விட்டார் என்கிறார்கள். உண்மைதான்!
ஆட்சியதிகாரம் என்பது பொன் முட்டை
யிடும் வாத்து; அவசரப்பட்டு, அதிகமாக
ஆசைப்பட்டு அதை அறுத்துப் பார்த்துவி
டக் கூடாது; பக்குவமாக நடந்து கொள்ள
வேண்டும் என்ற தந்திரத்துடன் அவர்
செயல்படுகிறார் என்பதுதான் உண்மை.

மற்றபடி, கோடி கோடியாய் தேர்தல்
சூதாட்டத்தில் வாரி இறைத்து விட்டு, "உத்
திரவிட்ட உங்களுக்குச் சேவை செய்வ
தைத் தவிர வேறு ஆதாயம் தேடமாட்
டேன்" என்று சந்நியாசம் போகிறவர்
அல்ல கருணாநிதி. லட்சம் லட்சமாக வாரி
யிறைத்து விட்டு லட்சியம் பேசிக் கொண்
டிருக்க அவரது உடன் பிறப்புகள் ஏமாந்த
சோனகிரிகளும் அல்லர். எத்தனை நாள்
தான் புறங்கையை நக்கிக் கொண்டிருக்க
முடியும் என்று தலைவரின் கட்டுப்பாட்
டையும் மீறி கைவைக்க ஆரம்பித்து விட்
டார்கள். அதிலும் இப்போதைய தி.மு.க
வின் இளைய தலைமுறையினரோ
போராட்டம், தியாகம், கண்ணியம், கட
டுப்பாட்டை அறிந்திராத கடைந்தெடுத்
பொறுக்கி அரசியலிலிருந்து உருவானவ
கள். ரௌடித்தனம், கட்டைப் பஞ்சாயத்
மாமூல் வசூலிப்பது என்பதையே நடை
றையாகக் கொண்ட பிழைப்புவாத கிரி
னல் அரசியலில் வளர்ந்தவர்கள். பத்தி
கைகள் என்னதான் மாயைகளைப் பரப்
னாலும் உடன்பிறப்புகள் நடத்தி வரு
அட்டகாசங்களே அவற்றைத் தகர்த்
றிந்து வருகின்றன. தி.மு.க. தலை
மு.க.வே. முகம் சுளிக்கும் அளவு

சென்னையில் தி.நகர் கூட்டுறவு சங்க இயக்குநர் தேர்தலின் பொழுது தி.(
ரௌடிகள் வன்முறையில் இறங்கியதால் பதட்டமடைந்த தி.நகர் பகுதி






படிப்பகம்

www.padippakam.com

# ‘மாண்புமிகு’ அரட்டை மடம்

பாசிச ஜெயா ஆட்சியில் தமிழக சட்டமன்றம் ஜெயா துதிபாடும் மடமாகவும், எதிர்க்கட்சியினரை உதைக் கும் வன்முறைக் கூடாரமாகவும் இருந்த நிலைமை போய், சட்டமன்ற மாண்பை நிலைநாட்டும் வகையில் தி.மு.க. ஆட்சி செயல்படுவதாகப் பத்திரிகைகள் பாராட்டுகின்றன. உண்மைதான் சட்டமன்றம் வெறும் அரட்டை மடம்தான் என்ற மாண்புமிகு உண்மையை தி.மு.க. ஆட்சி நிரூபித்து வருகிறது.

சட்டத்துறை மானியக் கோரிக்கையின் போது இந்திய தேசிய லீக் உறுப்பினரான லத்தீப், ஆங்கிலத்தில் பேசினார். அதைத் தொடர்ந்து அவருக்குத் தமிழ் தெரியுமா, தெரியாதா என்று சூடேறிய விவாதம் நடந்தது. அப்போது அ.தி.மு.க.வின் உறுப்பினரான தாமரைக்கனி “ஐ நோ இங்கிலீஷ்; நாட் டிரான்ஸ்லேஷன்” - “ஆங்கிலத்தை புரிந்து கொள்ள முடியும்; ஆனால் மொழி பெயர்க்கத் தெரியாது” என்று அரை குறை ஆங்கிலத்தில் உளறியதும் உறுப்பினர்கள் மேசையைத் தட்டிச் சிரித்தார்களாம்.

இன்னொரு நாள், பாரதீய ஜனதா உறுப்பினரான வேலாயுதம் மீன் ஒரு முழுமையான சத்துணவு என்று தனது உரையில் குறிப்பிட்டார். உடனே, சத்துணவு என்றால் நீங் கள் சுவைத்துப் பார்த்தீர்களா? மீன் சைவமா? அல்லது அசை வமா? நீங்கள் சைவமா, அசைவமா? என்று உற்சாகமாக உறுப்பினர்கள் விவாதித்தனர்.

மற்றொரு நாள், தாமரைக்கனி அவைக்குள் வரும் போது ரம்மியமான மணம் வீசுகிறதே, அவர் பூசியிருப்பது என்ன “சென்ட்”? என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வினவினார். அதற்கு தாமரைக்கனி, “அது சென்ட் மணம் அல்ல; இயற்கை மணம்தான்” என்றதும் சபையில் சிரிப் பொலி தவழ்ந்தது. உடனே கருணாநிதி, “அது இயற்கை மணமா, செயற்கை மணமா என்று மதுரை பாண்டியனிடம் கூறி, பின்னர் அந்த பரமசிவனிடம் தான் கேட்க வேண்டும்” என்று கூறியதும் சபையெங்கும் சிரிப்பு எதிரொலித்தது.

இத்தகைய கேலி - கிண்டல் - சிரிப்பு - கும்மாளத்தின் உச்சகட்டமாக, பெண்களை “ஸ்டெப்னி” என்று வக்கிரமாக வர்ணித்து ஆபாச ரசனையில் அவை உறுப்பினர்கள் மூழ்கித் திளைத்தனர்.

இப்படி 47 நாட்கள் கூத்தடித்து விட்டு, சட்டமன்ற உறுப்பினர்களின் மாத ஊதியத்தை ரூ. 5000/- ஆக இந்த உதவாக்கரைகள் உயர்த்திக் கொண்டனர். முந்தைய ஜெயா ஆட்சியின் ஊழல் - ஊதாரித்தனங்களைச் சாடிய முதல்வர் கருணாநிதி, இச்சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைவதையொட்டி எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் சட்டசபை உறுப் பினர்களுக்கும் நண்பர்களுக்கும் எளிய விருந்தளித்தார். இந்த விருந்தில் ஒரு நபருக்கான சாப்பாடு செலவு மட்டும் ரூ. 910!

உடன் பிறப்புகள் கொட்டமடித்து வரு வதை அண்மைக்கால விவகாரங்களே சான்று கூறுகின்றன.

தேர்தல் முடிவுகள் வெளியான நாளன்றே, சென்னையில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் தண்ணீர் தொட்டிகளில் ஒரு குடத்துக்கு 25 பைசா வீதம் வசூல் கொள்ளை யடிக்கும் உரிமையை அ.தி.மு.க. குண்டர்களிடமிருந்து கழக உடன் பிறப்புகள் கைப்பற்றிக் கொண்டனர். பல இடங்களில் இதையொட்டி அடிதடிகளும் கைகலப்புகளும் நடந்தன.

விழுப்புரம் மாவட்ட தி.மு.க. தொண்டர்படை அமைப்பாளராக இருந்தவன், மின்னல் ராஜா. தனது கிரிமினல் அரசிய லால் திடீர்ப் பணக் கார அரசியல் ரெள டியாக வளர்ந்து ஆட்டம் போட்ட இவனுக்கு எதிராக, அப்பகுதியிலுள்ள புரட்சிகர அமைப்புகள் பிரச்சார இயக்கம் மேற்கொண்டு அம்ப லப்படுத்தின. வி. மருதூரைச் சேர்ந்த கோவிந்தன் கோஷ்டியுடன் மின்னல் ராஜா கோஷ்டி 1992-ல் மோதியதில் கோவிந் தன் கொல்லப்பட்டான். இது தொடர்பான வழக்கு விசாரணை முடிந்து கடந்த ஆகஸ்ட் 30 அன்று மின்னல்ராஜா மற்றும் அவனது கோஷ்டியைச் சேர்ந்த 6 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த அவனது குண்டர்கள் விழுப்புரம் நகர வீதிகளில் சென்ற வாகனங்களை அடித்து நொறுக்கி, கடைகளை மூடச் சொல்லி வியாபாரிகளை மிரட்டினர். நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த நீதிபதியின் காரை உடைத்து நொறுக்கினர்.

கடை வீதிகளில் கையில் ஆயுதங்க ளுடன் வந்து அட்ட காசம் செய்த தி.மு.க. ரௌ ளின் அட்டூழி ளுக்கு எ வழக்கறிஞர் நீதிமன்றத்தை புறக்கணித் டன

சென்னைக்கு வந்த கிருஷ்ணா நதி நீரை, சந்திரபாபு நாயுடுவிடமிருந்து பெறுகிறார் கருணாநிதி: தேர்தல் கவர்ச்சி





படிப்பகம்

www.padippakam.com

நடத்துமளவுக்கு இந்த விவகாரம் சந்தி சிரித்தது.

சென்னையிலே மா∴பியா குண்டர்களாகத் திரிந்த ஆசைத்தம்பி, கபிலன் ஆகிய ரௌடிகளை போலீசார் சுட்டுக் கொன்றதும், "துப்பாக்கிச் சூடு நடந்தால் எதிர்க்கட்சியினர் கண்டனக் குரல் எழுப்புவார்கள். ஆனால் இப்போது முதன் முறையாகப் பாராட்டுகிறார்கள்" என்று பெருமைபொங்க சட்டசபையில் பேசினார் கருணாநிதி. குண்டர்கள் எப்பகுதியில் இருந்தாலும் அவர்கள் பிடிக்கப்பட்டு நிச்சயமாக அடக்கப்படுவார்கள் என்று உறுதியளித்தார்.

தி.மு.க. தலைவரின் . இந்த எச்சரிகை எல்லாம் போலீசாரின் குற்றப் பட்டியலில் உள்ள, பிரபலமான குண்டர்படை தலைவர்களுக்குத்தான்; அந்த அளவுக்கு அம்பலப்படாத தி.மு.க. ரௌடிகளுக்கு அல்ல என்பதை கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் நடந்த ரௌடித்தனங்களே நிரூபித்துக் காட்டுகின்றன.

சென்னை தியாகராய நகர் கூட்டுறவு சங்க இயக்குனர் தேர்தலின் போது, வேட்பு மனுக்களை கூட தாக்கல் செய்ய விடாமல், எதிர்க்கட்சியினரை, குறிப்பாக 'மார்க்சிஸ்டு' கட்சியினரை தி.மு.க. ரௌடிகள் துரத்தியடித்தனர். சைக்கிள் செயின், சோடா பாட்டில், கற்களுடன் கழக உடன்பிறப்புகள் நடத்திய தாக்குதலில் பேருந்துகளும் வாகனங்களும் சேதமடைந்ததோடு, 'மார்க்சிஸ்டு' கட்சி அணிகள் பலர் படுகாயமடைந்தனர். இதே போல செஞ்சி கூட்டுறவு சங்கத் தேர்தலில் தி.மு.க. ரௌடிகள் சோடா பாட்டில் வீச்சு நடத்தி, ம.தி.மு.க. வினரைத் தாக்கினர். தமிழகத்தின் எல்லா பகுதிகளிலும் கிட்டத்தட்ட இதே பாணியில் தான் கூட்டுறவு சங்கத் தேர்தல் நடந்து, உடன் பிறப்புகள் வெற்றியை நிலை நாட்டியுள்ளனர்.

கூட்டுறவு சங்கத் தேர்தல்களே இப்படியென்றால் உள்ளூராட்சி - நகராட்சித் தேர்தல்கள் எப்படியிருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. சென்னை மேயர் தேர்தலில் போட்டியிடும் மு.க. ஸ்டாலின் பிரச்சாரத்துக்கு வரும் போது 20 கார்கள், 5 ஜீப்புகள், 50 ஆட்டோக்கள், ஆளுயர மாலைகள், கட்-அவுட்கள் என இப்போதே கும்மாளமடிக்கத் தொடங்கி விட்டனர். 'இளைய தளபதி'யின் ஆசியோடு கட்டைப் பஞ்சாயத்து, மாமூல் வாங்குவது, போலீசு நிலையத்திலிருந்து கைதிகளை மீட்டு வருவது, கள்ளச் சாராயம், விபச்சாரம் என கிரிமினல் ரௌடித்தனங்கள் பெருகி வருகின்றன.

"கள்ளச்சாராய பானைகள் மீது குண்டு பாயும். கள்ளச் சாராய வியாபாரிகளைக் கைது செய்து ஒப்படைக்கும் போலீசாருக்கு காந்தி பதக்கமும் ரூபாய் பத்தாயிரமும் தரப்படும்" என்று முழங்கிய கருணாநிதியின் அறிவிப்பு அடுத்த சில நாட்களிலேயே புஸ்வாணமாகியது. சேலம் மாவட்டம் அஸ்தம்பட்டி அருகேயுள்ள சின்னப் பூதூரில் கள்ளச்சாராயம் குடித்து 11 பேர் மாண்டு போயினர்.

பரங்கிமலையில் போலீசார் கைது செய்த 10 தி.மு.க. குண்டர்களை, அத்தொகுதி எம்.எல்.ஏ. நள்ளிரவில் வந்து போலீசாரை மிரட்டி விடுவித்ததை கிசுகிசு பத்திரிகைகளே அம்பலப்படுத்துகின்றன.

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு இந்த விவகாரங்கள் தெரியாததல்ல; இருப்பினும் அவர் வாய் மூடி மௌனமாகவே இவற்றை அங்கீகரித்து வருகிறார். சட்டமன்றத் தேர்தலின் போது வீசிய ஜெயா எதிர்ப்பு அலையைச் சாதகமாக்கிக் கொண்டு உள்ளூராட்சி - நகராட்சி மற்றும் கூட்டுறவு சங்கங்களில் உடன் பிறப்புகளை வெற்றி பெறச் செய்வதன் மூலம் அவர்களது பிழைப்புக்கு ஒரு 'ஏற்பாடு' செய்து தரும் நோக்கத்தில்தான் இத்தகைய ரௌடித்தனங்களைக் கண்டும் காணாமல் இருந்து வருகிறார். இவற்றை மக்கள் கவனத்திலிருந்து திசை திருப்ப ஜெயா கும்பலின் புதிய புதிய ஊழல்களை தினமும் அவிழ்த்து விட்டு, "ரெய்டு", கைது, விசாரணை என்று பரபரப்பூட்டி வருகிறார்.

ஈழ ஆதரவு, இட ஒதுக்கீடு, மாநில சுயாட்சி, காவிரி நீர் உரிமை முதலான தி.மு.க.வின் தேர்தல் கால வட்டிய சவடால்கள் எல்லாம் இன்று காற்றோடு போய் விட்டன. பதவிக்கு வந்ததும் பச்சோந்தித் தனமாக இவற்றைக் கைவிட்டு, எதிர்க்கட்சியினரிடமிருந்து குற்றச்சாட்டு எதுவும் வந்து விடாமல் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதில் தான் மு.க. குறியாய் இருக்கிறார்.

ஈழத்தில் தொடரும் போரினால் அல்லற்படும் தமிழ் மக்கள் அகதிகளாக இராமேஸ்வரத்துக்கு வரத் தொடங்கியதும், அவர்களுடன் புலிகள் ஊடுருவி வந்துள்ளனர் என்று எதிர்க்கட்சிகள் பீதியூட்டத் தொடங்கின. முன்பு புலி பீதியூட்டி தமது ஆட்சியைக் கவிழ்த்ததைப் போல, இப்போது நடந்து விடக் கூடாது என்று அஞ்சிய மு.க. உடனடியாக புலி ஊடுருவலைத் தடுக்க தனி போலீசு படை அமைத்து, இராமேஸ்வரம் பகுதியில் ரோந்து சுற்றிக் கண்காணிக்க உத்திரவிட்டார். அதைத் தொடர்ந்து தமிழகத்திற்கு வரும் ஈழ அகதிகள் தீவிர விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு, சந்தேகத்தின் பேரில் சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு அல்லற்படுகின்றனர். அகதிகளை ஏற்றிவந்த தமிழக மீனவர்கள் கூட கைது செய்யப்பட்டு, அவர்களது படகுகளின் மீன்பிடி உரிமங்கள் ரத்து செய்யப்பட்டன. இக்கொடுமைகளை எதிர்த்து தமிழக மீனவர்கள் போராடுமளவுக்கு கருணாநிதியின் இனத்துரோகம் அம்பலப்பட்டுப் போயுள்ளது.

இதேபோல, காவிரி நீர், 69% இட ஒதுக்கீடு விவகாரங்களில் தமிழகத்தை வஞ்சித்து விட்டதாக ஜெயா கும்பலைச் சாடிய கருணாநிதி, இப்போது பதவிக்கு வந்ததும் அதே போன்ற பித்தலாட்டத்தைத்தான் தொடர்கிறார். காவிரி நீர் பிரச்சினையில் மு.க.வும் கர்நாடக முதல்வர் படேலும் மாறி மாறி பேச்சு வார்த்தை நடத்தியும் என்ன முடிவு ஏற்பட்டுள்ளது என்றே தெரியவில்லை. அதே சமயம் ஏதோ சாதித்து விட்டதாக சுய விளம்பரம் தேடிக் கொள்ள மு.க. தவறவு மில்லை.

கருணாநிதியின் ஆரம்ப சூரத்தனங்களால் - பித்தலாட்ட நாடகங்களால், அவரது கட்சிக் குண்டர்களின் ரௌடித்தனங்களை மூடி மறைத்து விட முடியாது. நல்லாட்சி தருவதாக இப்போது தி.மு.க. துதிபாடும் பத்திரிகைகளும் படிப்பாளிகளும் நாளை எல்லாவற்றையும் மறைத்துக் கொண்டு, எதிர்த்தரப்பினருடன் கூட்டுச் சேரத் தயங்க மாட்டார்கள். முன்பு ஜெயா ஆட்சியிலும் இதே நாடகம் தான் நடந்தது. இப்படியொரு விஷச் சுழற்சி தொடர்வதை இனியும் அனுமதிக்கக் கூடாது. கருணாநிதி ஆட்சியின் ஆரம்ப சூரத்தனங்களை அம்பலப்படுத்தி, அதன் ரௌடித்தனங்களுக்கு எதிராகப் போராடாமல் பத்திரிகைகள் பரப்பும் பிரமைகளைத் தகர்த்தெறியவும் முடியாது.

• மனோகரன்

## அ.தி.மு.க. வழியில் தி.மு.க.

பார்ப்பன - பாசிச ஜெயாவின் ஆட்சியில் தளி கல்பனா சுமதி, சிதம்பரம் பத்மினி, முத்தாண்டிக்குப்பம் வசந்தா மற்றும் வாச்சாத்தி, பொன்னூரில் கும்பல் 'கற்பழிப்புகள்' எனப் பாலியல் வன்முறைகள் தொடர்ந்தன. இச்சம்பவங்களைத் தேர்தல் நேரத்தில் முழுப் பக்க விளம்பரம் செய்து, ஓட்டுப்பொறுக்கிய கருணாநிதி ஆட்சியில், 'தாய்க்குலத்தின் துயர் துடைக்க வந்த உடன் பிறப்புகள்' பாலியல் வன்முறைகளில் ஈடுபடுவதிலும், ஈடுபட்டவர்களைக் காப்பதிலும், அ.தி.மு.க. கிரிமினல் கூட்டத்திற்கு தாங்கள் சற்றும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபித்து வருகிறார்கள்.

• சென்னைக்கு அருகேயுள்ள பொன்னேரியை ஒட்டியுள்ள பசியாவரம் என்ற மீனவர் கிராமத்தைச் சேர்ந்த 14 வயது சிறுமி வெண்ணிலா, கடந்த மே 21ல் சங்கர், ரமேஷ், சின்ன மூர்த்தி ஆகிய 3 வெறியர்களால் இச்சிறுமி பாலியல் வன்முறைக்கு ஆளானார். இத்தொகுதி எம்.எல்.ஏவும் பால்வளத்துறை அமைச்சருமான சுந்தரம் காமுகர்களுக்குப் பாதுகாப்பாகச் செயல்பட்டார்.

• சிவகாசி திருத்தங்கலைச் சேர்ந்த செங்கமல நாச்சியார் ஆரம்பப் பள்ளி ஆசிரியை, இவரைப் பாலியல் பலாத்காரம் செய்ய முயன்ற வெற்றிராஜனுக்கு அபயம் அளித்தார்; விருதுநகர் எம்.எல்.ஏ. சீனிவாசன்.

• திருவள்ளூர் எம்.ஜி.ஆர். மாவட்டம், செவ்வாய்பேட்டை அருகிலுள்ளது சிறு கடல் கிராமம். அவ்வூரைச் சேர்ந்த குமார், அதே ஊரில் வசித்து வரும் கௌசல்யா என்ற பெண்ணை திருமணம் செய்வதாகக் கூறி மோசம் செய்துவிட்டான். பொதுமக்கள் கௌசல்யாவுக்கும் குமாருக்கும் திருமணம் செய்துவிட எடுத்த முடிவுக்கு முட்டுக்கட்டை போட்டு, குமாரை தன் பாதுகாப்பில் வைத்துக் கொண்டு, அவன் தப்பி ஓடிவிட்டதாகப் புளுகினார் திருப்பெரும்பூதூர் எம்.பி. நாகரத்தினம்.



படிப்பகம்

www.padippakam.com

# உலக அழகிப் போட்டி:
# "எயிட்ஸ்" கலாச்சாரத்துக்கு கால்கோள் விழா!

முதலாளித்துவத்தின் ஆன்மா சரக்கு - பண்டத்தில் இருக்கிறது என்றார் மார்க்ஸ். ஆன்மாவை புதிய பொருளாதாரக் கொள்கையில் கண்ட காங்கிரசுக் கயவாளிகள், சரக்கை உலக அழகிகளாக உருவாக்கிக் காட்டினர். அழகிகளின் உதட்டுச் சிரிப்பிலும், பவள விரல்களிலும் ரெவ்லான் சாயம் மின்னியது. மேனி எழிலில் ஐரோப்பிய சோப்பும், பேஃர் அண்டு லவ்லியும் சிரித்தது. பல்லழகில் கோல்கேட்டும், முடியழகில் சுவிஸ் ஷாம்புவும் பளபளத்தது. அமெரிக்க உள்ளாடைகளையும், பாரீசின் மார்கச்சைகளையும் அணியும் தகுதியை ஏழை நாடான இந்தியா பெற்றது. அழகிப் போட்டியைக் கண்டு ரசித்தவர்களின் கைகளில் பெப்சியும் கோகோ கோலாவும் பொங்கி வழிந்தது.

அந்நியச் செலாவணிக்கு கதவுகள் அகலத் திறக்கப்பட்டன. சரக்கு வேட்டைக்கு பன்னாட்டு நிறுவனங்கள் படையெடுத்தன. அழகை - அழகிகளைத் தேடி அந்நிய சுற்றுலாப் பயணிகள் குவிந்தார்கள். விபச்சாரமும் எய்ட்சும் பெருகியது. இந்தியா 'தலை நிமிர்ந்து' நிற்கத் தொடங்கியது.

ராவ் அரசின் கேடுகெட்ட புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து வீரவசனம் பேசி ஆட்சிக்கு வந்துள்ள ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்கள், இன்று அதே கொள்கையை விசுவாசமாகச் செயல்படுத்தக் கிளம்பிவிட்டார்கள். ராவ் ஆட்சிக்காலம் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் பொற்காலம் என்றால், ஐ.மு. ஆட்சிக்காலம் அதில் முன்னணி வகிக்கும் காலம் என்பதைச் சாதிக்கக் கிளம்பியுள்ளார்கள்.

உலக அழகிகளை கடந்த ஆண்டில் உருவாக்கிய இந்தியா இந்த ஆண்டில் உலக அழகிப் போட்டியையே நடத்தக் கிளம்பிவிட்டது. பெங்களூரில் நவம்பர் மாதத்தில் நடைபெறும் இந்தப் போட்டியை - விழாவை, புதியவகை தரகு முதலாளியும் பிரபல முன்னாள் இந்தி நடிகருமான அமிதாப் பச்சனின் நிறுவனம் பல கோடி ரூபாய் செலவில் நடத்தப் பொறுப்பேற்றுள்ளது. ஏகாதிபத்திய நாடுகளில் நடந்து வந்த இந்த அருவெறுப்பான ஆபாசக் கூத்து, இப்போது ஏழைநாடான இந்தியாவில் நடக்கப் போவதைக் கண்டு ஆட்சியாளர்களும் பெருமுதலாளிகளும் பெருமையில் பூரித்துப் போகிறார்கள்.

"நவம்பர் மாதத் துவக்கத்திலேயே உலகின் பல நாடுகளிலிருந்து அழகிகள் வந்து குவிந்து விடுவார்கள். நவம்பர் 4,5 தேதிகளில் பிரதமர் தேவகௌடா அவர்களுக்கு விருந்தளித்து விழா நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைப்பார். பின்னர் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நடை, உடை, அலங்கார அணி வகுப்புகள் நடத்தப்பட்டு இவர்களில் முன்னணி அழகிகள் தேர்வு செய்யப்படுவர். நவம்பர் 23 அன்று பெங்களூரில் உள்ள சின்னசாமி விளையாட்டரங்கத்தில் இறுதிப் போட்டி நடத்தப்பட்டு, உலக அழகி தேர்வு செய்யப்படுவார். இந்நாளில் உலகின் 115 நாடுகளிலுள்ள 250 கோடி மக்கள் இந்நிகழ்ச்சியைத் தொலைக் காட்சியில் காண்பார்கள். உலகின் பார்வை இந்தியாவை நோக்கித் திரும்பும். இந்தியாவின் வர்த்தகத்தையும் சுற்றுலாத் துறையையும் வளர்க்க இந்நிகழ்ச்சி பெரிதும் உதவும்" என்கிறார் அமிதாப்பச்சன். விளம்பரம், தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமம் முதலானவற்றின் மூலம் கிடைக்கும் பல கோடி ரூபாய் லாபத்தில் பாதித் தொகையானது, பெங்களூரில் உள்ள உடல் - மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் நலச் சங்கத்துக்குத் தரப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பெண்ணினத்தையே கேவலப்படுத்தும் அசிங்கமான - ஆபாசமான இந்நிகழ்ச்சியை எதிர்த்து பல்வேறு மகளிர் அமைப்புகள் போராட்டத்தில் குதித்துள்ளன. அழகிப் போட்டி என்பது பெண்களைச் சுரண்டும் அவமானகரமான செயல்; பெண்களைப் போகப் பொருளாக்கும் ஆணாதிக்க வக்கிரச் செயல்; இது இந்தியப் பண்பாட்டிற்கே எதிரானது; மேலைநாட்டுச் சீரழிவை வளர்க்கக்கூடியது. முதலாளித்துவ லாப வெறியர்களால் பண நோக்கத்துடன் நடத்தப்படும் இக்கேவலமான நிகழ்ச்சியைத் தடைசெய்ய வேண்டும் என்ற நியாயமான காரணங்களைக் கூறி மகளிர் மற்றும் மாணவர் அமைப்புகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றன. மகிளா ஜக்ரான் எனும் அமைப்பு, அழகிப் போட்டியை எதிர்த்து தற்கொலைப் படை அமைத்துள்ளதாகவும், போட்டி நடக்கும் அரங்கில் 15 பெண்கள் தீயிட்டுக் கொண்டு மடிவார்கள் என்றும் எச்சரித்துள்ளது. அமெரிக்காவின் கார்கில் விதை நிறுவனத்துக்கு எதிராக வீரத்துடன் போராடிய நஞ்சுண்ட சாமி தலைமையிலான விவசாயிகள் சங்கம், அழகிப் போட்டியை எதிர்த்து விழாநாளில் அனைத்து நாட்டு பிரதிநிதிகளையும் "கெரோ" செய்யப் போவதாகக் கூறுகிறது.




உலக அழகிப் போட்டியை எதிர்த்து மகளிர் அமைப்பினரின் போர்க்குரல்



படிப்பகம்

www.padippakam.com

ஆனாலும் இவற்றையெல்லாம் மீறி
உலக அழகிப் போட்டி நடந்தே தீரும்
என்று கொக்கரிக்கிறார் கர்நாடக முதல்வர்
படேல். எதிர்த்தரப்பினரின் குற்றச்சாட்டுக
ளுக்குப் பதிலளிக்கும் வகையில் அமிதாப்
பச்சன் அளித்த பேட்டியானது, கர்நாடக
அரசு சார்பில் அதன் தலைமையகமான
''விதான் சௌதா''விலேயே ஏற்பாடு




அமிதாப்பச்சனின் ஏ.பி.சி.எல்.
நிறுவனம் நடத்தும் இந்தப்
போட்டி, அறிவிக்கப்படாத
அரசு விழாவாக
நடைபெறவுள்ளது. இதை
எதிர்ப்பவர்களுக்கு,
'கவர்ச்சிதான் வர்த்தக
வெற்றியின் இரகசியம்'' என
வியாபாரிகளின் மொழியில்
பதில் தருகிறது கர்நாடக மாநில
ஜனதா தள அரசு.

ப்பட்டது. அரசு சாராத ஒருவர் இப்
அரசுத் தலைமையகத்தில் பேட்டிய
இதுவே முதன்முறையாகும். சுற்று
ழற, மின்சாரம், குடிநீர், நட்சத்திர
, பாதுகாப்பு என அனைத்து ஏற்
யும் கர்நாடக அரசே தனது
ழாவைப் போலச் செய்து வருகி
ப் போட்டியை ரத்துச் செய்யக்

கோரி கொடுக்கப்பட்ட மனுக்கள் அனைத்
தையும் கர்நாடக உயர்நீதிமன்றம் தள்ளு
படி செய்து, சீரழிவுக்குச் சாமரம் வீசுகிறது.

அழகிப் போட்டிக்கு எதிராகப்
போராட்டங்களும் எதிர்ப்புகளும் பெரு
கத் தொடங்கியதும் பாரதீய ஜனதாவும்
போலிக் கம்யூனிஸ்டுகளும் தாங்களும்
அழகிப் போட்டியை எதிர்ப்பதாகக் கூறி
கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்ற
னர். கல்கத்தாவில் ''வார்னர் பிரதர்ஸ்''
எனும் ஏகாதிபத்திய சினிமா நிறுவனம்,
களிவெறியாட்ட விடுதிகளும் திரையரங்
குகளும் நடத்திக் கொள்ள அனுமதிக்கும்
'மார்க்சிஸ்டுகள்' உலக அழகிப் போட்
டியை எதிர்க்கிறார்களாம்! தனது பேத்தி,
பள்ளியில் நடக்கும் சிறுமிகள் அழகிப்
போட்டியில் பங்கேற்று பரிசு பெறுவதை
பெருமையுடன் அங்கீகரிக்கும் மே. வங்க
முதல்வர் பாசுவின் சீடர்கள் உலக அழகிப்
போட்டியை எதிர்க்கிறார்களாம்! வெட்கக்
கேடு.

அதே போல, நகர அளவிலும் மாநில
அளவிலும் நடக்கும் அழகிப் போட்டிக
ளையும், விமல் நிறுவனத்தின் சார்பில்
நடந்த அழகிகளின் அலங்கார ஆடை
அணிவகுப்புகளையும் எதிர்க்காத இந்து
வெறியர்கள் 'பாரத' கலாச்சாரத்தைக்
காக்க உலக அழகிப் போட்டியை எதிர்க்கி
றார்களாம்! மராட்டிய கலாச்சாரத் துறை
மந்திரியான பிரமோத் நாவல்கர் நடத்தும்
''பிரமந்தி'' இதழில் ஆபாச, அரைநிர்
வாண விளம்பரங்களை வெளியிட்டுக்
கொண்டும், பம்பாயை விபச்சாரத் தலைந
கராக மாற்றியுமுள்ள இந்துவெறியர்கள்
ஆபாசமான உலக அழகிப் போட்டியை
எதிர்க்கிறார்களாம்! இக்காரியக் கோமாளி
களுக்கு அழகிப் போட்டியை எதிர்க்க
என்ன அருகதை இருக்கிறது?

அழகிப் போட்டி என்பது அருவறுப்
பான ஆபாசமான - கலாச்சார சீரழிவு மட்
டுமல்ல; இது ஏகாதிபத்திய அரசியல் -
பொருளாதார ஆதிக்கத்தின் ஓர் அங்கம்;
நுகர்பொருள் சந்தையை ஏகாதிபத்தியங்க
ளுக்குத் திறந்து விடும் காலனியக் கொள்
கையின் வெளிப்பாடு; வியாபாரத்திற்கும்
விபச்சாரத்திற்கும் நாட்டை ஏலம் போடும்
அயோக்கியத்தனத்தின் அடையாளம்.
அந்நிய முதலீட்டையும் ஆதிக்கத்தையும்
ரவேற்று அமெரிக்காவுக்கும் ஐரோப்பா
க்கும் பறக்கும் அனைத்து ஓட்டுக் கட்சித்
லவர்களுக்கு, ஏகாதிபத்தியக் கொள்
யின் ஓர் அங்கமான அழகிப் போட்
டி மட்டும் எதிர்க்க என்ன யோக்கி
ய இருக்கிறது? எனவே இத்தகைய பித்
த ப் பேர்வழிகளை அம்பலப்படுத்தி
முறி த்து, அழகிப் போட்டிக்கு எதிரான
பேர் த்தைப் போர்க்குணத்துடன் முன்
னெ செல்வது தான் தன்மானமுள்ள
உழை மக்களின் கடமையாக
உள்ளு

* குமார்

# மக்கள் சேவை
# ஆட்டங் காட்டும்
# மாவட்ட ஆட்சியாளர்கள்

தி.மு.க. ஆட்சிக் கட்டிலில் ஏறி
யது தொடங்கியே, அரசு நிர்வாகம் முழு
வதும் தமிழக மக்கள் நலனுக்காகவே
உழைப்பது போன்ற ஒரு மாயத் தோற்
றம் உருவாக்கப்படுகிறது. இந்நாடகத்
தில் கருணாநிதியும் பிறரும் எட்டடி
பாய்ந்தால், காமராசர் மற்றும் பசும்
பொன் மாவட்ட ஆட்சியர்கள் பதினாறு
அடி பாய்கிறார்கள்.

மக்கள் குறை தீர்க்கும் நாளன்று சக்
கரவர்த்திகளைப் போல ஆடம்பரமாகப்
பவனி வரும் இந்த இரு மாவட்ட ஆட்சி
யாளர்களும், ''அடிமட்ட அரசு ஊழியர்
களால்தான் மக்களுக்கு அரசின் பலன்
கள் சென்றடைவதில்லை'' என்பது
போல் மக்கள் முன் நடந்து வருகின்ற
னர். பசும்பொன் மாவட்ட ஆட்சித்
தலைவர் கீழ்நிலை அதிகாரிகளையும்
அரசு ஊழியர்களையும், ''முட்டாள்'',
''அறிவில்லாதவனே'', ''வெங்காயம்''
எனக் கொச்சைத்தனமாக இழிவு படுத்து
வதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.
காமராசர் மாவட்ட ஆட்சித் தலைவர்
இராசகோபாலனும் இதில் சளைத்தவரல்
லர்.

பசும்பொன் மாவட்டத்திலுள்ள
தமிழ் மாநில வருவாய்த்துறை அலுவ
லர் சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்கள்
''மக்கள் குறை தீர்க்கும் நாளன்று பெற
படும் சாதாரண மனு கோரிக்கைகளை
கூட உடனுக்குடன் நிறைவேற்ற முடிய
ததற்குக் காரணம் நிர்வாகத்தின் சிவ
நாடா முறைதான். இதை மூடி மறை
விட்டு ஆட்சித் தலைவர் உத்தமர் பே
நாடகமாடுகிறார்'' என உண்மை
விளக்கி, மக்கள் மத்தியில் பிரசுரங்க
விநியோகித்தனர்.

காமராசர் மாவட்ட வருவா
றும் வளர்ச்சித்துறை அலுவ
மாவட்ட ஆட்சியாளர் இராச
லனை மாற்றக் கோரி அரசு அலு
கள் முன் ''தர்ணா'' போராட்டம்
னர். அம்மாவட்ட ஆட்சியாளர்
மாக, சி.பி.எம்., ம.தி.மு.க. தவி
ஓட்டுக் கட்சிகளைத் தம்பக்க
துக் கொண்டு, ''இலஞ்சத்தில்
போன வருவாய் மற்றும் ஊ
சித் துறை ஊழியர்களின்
டிக்கை எடு'' என்ற எதிர்ப் பே
தைத் தூண்டி விட்டு, அரசு
ளைத் தனிமைப்படுத்தினார்

உயர் அரசு அதி
இணையாகவே, அடிமட்ட
யர்களும் அதிகாரத்துவ
இலஞ்ச - ஊழல் முறை
ஊறிப் போயுள்ளனர். இம்
தப் போக்கை கைவிட்டு,
கள் உழைக்கும் மக்களு
டும் போது மட்டுமே,
சின் உபட வேடத்தைத்
டும்.



படிப்பகம்

www.padippakam.com

# ...பி தேர்தல் :
# சாதி-மத வெறியர்களிடை...
# கிரிமினல் பலப்பரிட்சை...

இந்தியாவின் மிகப்பெரிய மாநிலங்களில் ஒன்றான உ.பி.யில் நடக்கும் சட்டமன்றத் தேர்தலானது எந்த சாதியக் கூட்டணி வெற்றி பெறும் என்பதற்கான தேர்தலாகச் சீரழிந்து, இந்திய நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தை கசாப்புக் கடைக்குள் தள்ளி விட்டுள்ளது. இதுநாள் வரை பெயரளவுக்காவது கொள்கை - இலட்சியம் பேசி வந்த ஓட்டுக் கட்சிகள் அனைத்தும், அவையெல்லாம் தோற்றுப் போய்விட்ட நிலையில், வெளிப்படையாகவே உ.பி. மாநிலத்தில் சாதிய அரசியலில் தஞ்சமடைந்து விட்டன. எல்லா ஓட்டுக் கட்சிகளும் சாதிய அரசியலைச் சாதகமாக்கிக் கொள்வது உண்மைதான் என்றாலும், இன்னின்ன சாதிகள் - உட்பிரிவுகள் என்று வகை பிரித்து, தமக்கு ஆதரவைத் திரட்டிக் கொண்டு, பகிரங்கமாகவும் மூர்க்கமாகவும் போட்டியிடும் அளவுக்கு சாதிய அரசியல் உ.பி.யில் புதிய பரிமாணத்தை எட்டியுள்ளது. சாதிய பலமும் கிரிமினல் - குண்டர் பலமும்தான் தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்திகளாக மாறியுள்ளன.

கடந்த ஆண்டு அக்டோபரில் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவி மாயாவதியின் சிறுபான்மை ஆட்சி கவிழ்ந்ததைத் தொடர்ந்து உ.பி.யில் 'குடியரசு'த் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது. ஓராண்டில் அது முடிவுக்கு வருவதையொட்டி, உ.பி.யின் 425 தொகுதிகளுக்கான சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு, கடந்த செப்டம்பர் மாத இறுதியிலிருந்து மூன்று கட்டங்களாக இத்தேர்தல் நடந்து வருகிறது.

இத்தேர்தலில் ராவ் காங்கிரசும் பகுஜன் சமாஜ் கட்சியும் கூட்டணி சேர்ந்து ஒரு அணியாகவும், பாரதீய ஜனதாவும் ஜார்ஜ் பெர்னாண்டசின் சமதா கட்சியும் கூட்டணி சேர்ந்து மற்றொரு அணியாகவும், முலயம்சிங் யாதவின் சமாஜ்வாதி கட்சியும் ஜனதாதளம், திவாரி காங்கிரசு உள்ளிட்ட ஐக்கிய முன்னணியிலுள்ள கட்சிகளும், போலிக் கம்யூனிஸ்டுகளும், காங்கிரசிலிருந்து கட்சி மாறியுள்ள அஜித் சிங் தலைமையிலான திக்காயத்தின் விவசாய சங்கமும் கூட்டணி கட்டிக் கொண்டு ஒரு அணியாகவும் போட்டியிடுகின்றன.

ஏறத்தாழ 4 மாதங்களுக்கு முன்பு நடந்த மக்களவைத் தேர்தலில் பாரதீய ஜனதா 33% வாக்குகளைப் பெற்றது. இப்போது அதைவிடக் கூடுதலாக 5% வாக்குகளைப் பெற்று உ.பி.யில் ஆட்சி அமைப்போம் என்று மார் தட்டுகிறது. வரலாறு காணாத ஊழல் - மோசடிகளில் சிக்கி, அம்பலப்பட்டுப் போயுள்ள காங்கிரசுக் கட்சி, கடந்த மக்களவைத் தேர்தலில் வெறும் 8% வாக்குகள்தான் பெற்றது. அது போட்டியிட்ட 358 தொகுதிகளின் வேட்பாளர்கள் டெபாசிட் தொகையை இழக்குமளவுக்குத் தனிமைப்பட்டுப் போயுள்ளது. தாழ்த்தப்பட்டோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பகுஜன் சமாஜ் கட்சி மக்களவைத் தேர்தலில் 21% வாக்குகளைப் பெற்றது. மூன்றாவது அணியாகிய முலயம் சிங் யாதவின் 'சமூக நீதிக் கூட்டணி' கடந்த மக்களவைத் தேர்தலில் 29% வாக்குகளைப் பெற்றது. இப்போது ஜாட் சாதியத் தலைவர்களான அஜித் சிங்கும் திக்காயத்தும் கூட்டணியில் சேர்ந்துள்ளதால், தாங்கள் கூடுதலாக 5% வாக்குகளைப் பெற்று ஆட்சி அமைப்போம் என்று இக்கூட்டணியினர் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். ஆனால் அரசியல் நோக்கர்களோ மக்களவைத் தேர்தல் முடிவை வைத்து சட்டமன்றத் தேர்தல் வெற்றியைக் கணக்கிட முடியாது என்கின்றனர். சட்டமன்றத் தேர்தலானது உள்ளூர் பிரச்சினை அடிப்படையில் சாதியக் கூட்டணியின் தேர்தலாக உள்ளதால், சாதிய பலம் - குண்டர் பலத்தை ஒட்டியே, தேர்தல் முடிவுகள் அமையும் என்று அறுதியிடுகின்றனர்.

பாரம்பரிய ஆதரவு
பார்ப்பன - மேல் சாதியினர்,
முஸ்லிம்கள் மற்றும் தலித்துகளு...
கிரசு கூட்டணி கட்டிக் கொ...
தலித்துகளில் சாமர் சாதி முழுவ...
ஜன் சமாஜ் கட்சியை ஆதரிக்...
"இன்று உ.பி.யில் தலித்துகள் தீ...
மான சக்தியாக உள்ளனர். முந்தை...
லில் பிற்பட்ட சாதிகளுடன் சமூகந்...
டணி அமைத்து பகுஜன் சமாஜ்...
வெற்றி பெற்றது. ஆனால் "முலய...
எங்களை வஞ்சித்து விட்டார். அவ...
தேர்தலில் பழிவாங்குவோம். இப்...
மேல் சாதியினரும் எங்கள் சக்...
உணர்ந்து எங்களை ஆதரிக்கின்ற...
என்று பகுஜன் சமாஜ் கட்சித் தலை...
மாயாவதி பேட்டியளிக்கிறார். "சமூகநீ...
கூட்டணியால் ஏற்பட்ட கசப்பான அனு...
வங்களிலிருந்து தலித்துகள் பாடம் கற்று...
ளார்கள். காங்கிரசு கூட்டணியையே அவ...
கள் நம்பிக்கையுடன் ஆதரிக்கிறார்கள்...
இது தவிர டெல்லி ஜும்மா மசூதியின்...
தலைமை இமாம் எங்கள் கூட்டணியைத்...
தான் ஆதரிக்கிறார். எனவே வெற்றி எங்க...
ளுக்குத் தான்!" என்று நம்பிக்கையுடன்
காங்கிரசுத் தலைவர்கள் கூறுகிறார்கள்.
மேல்சாதியினர் - தலித்துக்கள் தவிர, பிற்
பட்ட சாதிகளில் பால், பிந்த் முதலான சாதி
களைத் தம் பக்கம் திரட்டிக் கொள்ள காங்கி
ரசு முயற்சி செய்கிறது.

முலயம் சிங் தலைமையிலான சமூ...
...திக் கூட்டணியோ, குர்மி, யாதவா, ...
...வாகா, காஷ்யப், குஜ்ஜார், பிரஜாபதி
...கள் மற்றும் முஸ்லிம்களில் ஒரு
...ரை தமக்கு ஆதரவாகத் திரட்டிக்
...டுள்ளது. இ...
...தலித்துகளில்...
...வினரையும்...
...லோஹார்...
...ஒடுக்கப்...
...னரையு...
...றது.
...சேர்...
...மற்...
...கள்...

...செய்ய...
...படி ஆ...
...ளிப்பது...
...வாத் து...
...விடுதிக...
...பாடுகளை...
...சொந்த வி...
...றது. அழகி...

**தாழ்த்தப்பட்டவர்கள்-உயர்சாதி கூட்டணி: மாயாவதி, ராவ், கன்சிராம்.**





படிப்பகம்

www.padippakam.com

தாவைப் புறக்கணித்துவிட்டு, இப்போது சமூகநீதி கூட்டணிக்கே வாக்களிப்பார்கள் என்று கருதப்படுகிறது. சமாஜ்வாதி கட்சித் தலைவர்களில் ஒருவரும் ஐ.மு. அரசின் அமைச்சருமான பேனி பிரசாத் வர்மா குர்மி சாதிக்காரர். இவர் மூலம் குர்மி சாதியினரைத் திரட்டும் முயற்சிகள் நடக்கின்றன.

இதேபோல, சமாஜ்வாதி கட்சிப் பொதுச் செயலாளர்களில் ஒருவரான அமர்சிங்தாக்கூர் சாதியைச் சேர்ந்த தொழிலதிபராவார். இவர் மூலம் தாக்கூர் சாதியினரைத் திரட்டிக் கொள்ள சமூக நீதிக் கூட்டணி முயற்சித்து வருகிறது.

இதுதவிர, பார்ப்பனர் மற்றும் மேல் சாதியினர் பெரும்பான்மையாக உள்ள உத்தர்கண்ட் பகுதியில் பாரதீய ஜனதாவை அடுத்து, திவாரி காங்கிரசு கணிசமான செல்வாக்கு பெற்றுள்ளது. இப்பகுதியில் காங்கிரசுக்கு இணையாக க்டந்த மக்களவைத் தேர்தலில் இக்கட்சி வெற்றி பெற்றுள்ளது. இப்போதைய சட்டமன்றத் தேர்தலில் அக்கட்சி கூடுதல் இடங்களில் வெற்றி பெறும் என்று அரசியல் நோக்கர்கள் மதிப்பிடுகின்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஜாட் சாதியினரின் ஆதரவு பெற்ற விவசாய சங்கத் தலைவரான திகாயத், பாரதீய கிசான் கம்கார் கட்சி என்ற புதிய கட்சியைத் தொடங்கி ஐ.மு. கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்துள்ளார். முன்னாள் பிரதமர் சரண் சிங்கின் மகனாகிய அஜித் சிங், காங்கிரசிலிருந்து விலகி, இப்புதிய கட்சியின் தலைவராகியுள்ளார். கடைசி நேரத்தில் நடந்த இக்கூட்டணியால் ஜாட் சாதியினரின் ஆதரவு பெற்று நாங்களே வெற்றி பெறுவோம் என்று சமூகநீதிக் கூட்டணி மார்தட்டுகிறது.

பிராமணர்கள், ராஜபுத்திரர்கள், சத்திரியர்கள், பனியாக்கள் முதலான மேல்சாதியினர் மொத்த வாக்காளர்களில் 23% ஆக உள்ளனர். இவர்கள் காங்கிரசு அல்லது பாரதீய ஜனதாவுக்கு தொடர்ந்து வாக்களித்து வருபவர்கள். ஆனால் ராவ் ஊழல் - மோசடிகள், சுக்ராம் ஊழல் முதலானவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு காங்கிரசை அம்பலப்படுத்தி, அதன் வாக்காளர்களைத் தம் பக்கம் இழுக்க பாரதீய ஜனதா கடுமையாக முயற்சித்து வருகிறது. இதுதவிர, லோத் என்னும் பிற்பட்ட சாதியைச் சேர்ந்த முன்னாள் பாரதீய ஜனதா முதல்வரான கல்யாண் சிங் மூலம் அச்சாதியினரையும், பைசாபாத் தொகுதியின் இந்துவெறி எம்.பி.யும் குர்மி சாதிக்காரருமான வினய் கத்தியார் மூலம் அச்சாதியினரையும் தமக்கு ஆதரவாகத் திரட்ட பாரதீய ஜனதா முயற்சிக்கிறது.



உயர்சாதி பா.ஜ.க.வின் பிற்படுத்தப்பட்ட சாதி முகம்: கல்யாண் சிங்.

இப்படி ஒவ்வொரு கூட்டணியும் தத்தமது சாதிகளைத் திரட்டிக் கொண்டு களத்தில் இறங்கியுள்ள போதிலும், சாதிய பலத்தை மட்டுமே அவை நம்பியிருக்கவில்லை. கிரிமினல் அரசியலில் ஊறிப் போயுள்ள இக்கட்சிகள் அனைத்தும் குண்டர் பலத்தையே தேர்தல் வெற்றிக்கான முக்கிய ஆயுதமாகக் கொண்டுள்ளன. முன்பெல்லாம் ஒரு சில பகுதிகளில் குண்டர்களை ஏவி தேர்தல் தில்லுமுல்லு - மோசடிகளில் ஈடுபடுவது என்பது மாறி, இப்போது முறைப்படுத்தப்பட்ட குண்டர் படைகளைப் பகிரங்கமாகவே கட்டியமைத்துக் கொண்டு ஓட்டுக் கட்சிகள் மூர்க்கமாக இறங்கிவிட்டன. பகுஜன் சமாஜ் கட்சி ''நீலப்படை'' என்ற பெயரிலும், சமாஜ்வாதி கட்சி ''செம்படை'' என்ற பெயரிலும், இவற்றுக்கு மாற்றாக பாரதீய ஜனதா ''வெண் படை'' என்ற பெயரிலும் கிரிமினல் குண்டர்படைகளைக் கட்டியமைத்துள்ளன. இதன் எதிரொலியாக முலயம்சிங்கின் தம்பி சிவபால் சிங் வேட்புமனுத் தாக்கல் செய்யச் சென்றபோது, எதிர்த்தரப்பினர் கொலை வெறித் தாக்குதல் நடத்தினர். சிவபால் சிங் உயிர்தப்பி, அவரது பாதுகாவலர் குண்டு பாய்ந்து மாண்டு போனார். இதுதவிர பல பகுதிகளில் குண்டர்கள் வேட்பாளர்களைத் தாக்குவதும், கடத்திச் சென்று மிரட்டுவதுமாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆக, உ.பி. தேர்தலானது சாதிய மோதலும் வன்முறையும் நிறைந்த தேர்தலாகவே இருக்கும் என்பது நிச்சயமாகி விட்டது.

**சாதியும் குண்டர்படையும்தான் உ.பி. தேர்தலில் ஓட்டுக்கட்சிகளின் வெற்றியைத் தீர்மானிக்க உள்ளன. தேர்தல் முடிவுகளில் தொங்கு நிலை ஏற்பட்டால், சாதிய மறு சேர்க்கையும், பிற்படுத்தப்பட்ட- தாழ்த்தப்பட்ட சாதி மோதல்களும் தவிர்க்க முடியாதவையாகிவிடும்.**

கடைசியில், பார்ப்பன - மேல் சாதியினருக்கு எதிராக தாழ்த்தப்பட்டோர் - பிற்பட்டோர் - முஸ்லிம்களின் கூட்டணியைக் கட்டியமைத்து, சமூகநீதியை நிலைநாட்டக் கிளம்பிய மண்டல் ஆதரவாளர்களின் லட்சியக் கனவு பொய்த்துப் போய், இனி அதற்கான சாத்தியமே இல்லை என்பதை இத்தேர்தல் நிருபித்துக் காட்டிவிட்டது. அப்படி ஒரு கூட்டணி முன்பு ஏற்பட்ட போதிலும் கூட, அது பதவி வெறி - பிழைப்பு வாத நோக்கங்களுக்கானதாக மாறி குறுகிய காலத்திலேயே சிதைந்து அம்பலப்பட்டுப் போய்விட்டது. தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட சாதிகளிடையே பிளவையும் மோதலையும் தூண்டிவிட்டு, தமக்கு ஆதாயம் தேடிக் கொள்வதில் இந்துவெறி பாரதீய ஜனதாவும் காங்கிரசும்தான் உண்மையில் வெற்றி பெற்றன. இப்போதைய தேர்தலில் எந்தக் கூட்டணியும் அறுதிப் பெரும்பான்மை பெற முடியாமல் தொங்கு நிலை ஏற்பட்டால் இந்தப் போக்கு மேலும் தீவிரமடையவே செய்யும். அது மீண்டும் பார்ப்பன - பாசிச சக்திகளுக்கே சாதகமாக முடியும்.

● ராசு

முலயம்சிங் யாதவ், தேவே கௌடாவும் "ஜாட்" சாதித் தலைவர்கள் திகாயத்-அஜீத் சிங்குடன்.





படிப்பகம்

www.padippakam.com

# ஈழத்தில் குண்டு தமிழகத்தில் குண்டாந்தடி

**—ஐந்தாண்டுகளுக்கும் மேலாக ஈழ மக்களின் மீது தமிழக அரசு தொடுத்துவரும் அடக்குமுறைக்கு சி. பாலச்சந்திரன் ஒரு வகை மாதிரி.**

**சி.** பாலச்சந்திரன் இலங்கை நாட்டைச் சேர்ந்த ஈழத் தமிழர். கனடா நாட்டு குடியுரிமை பெற்று, அங்கு வசித்து வரும் தனது சகோதரருடன் சென்று தங்கும் நோக்கோடு, இவர் 24.04.90 அன்று விமானம் மூலம் இந்தியா வந்தார். இந்திய அரசு வழங்கிய விசா அனுமதியோடு சென்னை வந்திறங்கிய இவர், வளசரவாக்கத்தில் தனது உறவினர் வீட்டில் தங்கினார்.

கனடா நாட்டுக்குச் செல்வதற்கு பயண ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த வேளையில், 12.03.91 அன்று நள்ளிரவில் இவரை 'க்யூ' போலீசார் பிடித்துச் சென்றனர். தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டிருந்த காலமது. தி.மு.க.விற்கு மக்கள் மத்தியில் அனுதாபம் உருவாகிவிடக் கூடாதென்பதற்காக அக்கட்சியை ஒரு வன்முறைக் கட்சியாகச் சித்திரிக்க, மத்திய உளவுப் படை (ஐ.பி.) சதித்திட்டமொன்றைத் தயாரித்திருந்தது. அச்சதித் திட்டத்திற்கு ஒத்துழைக்கும்படி உளவுப்படை அதிகாரிகளால் பாலச்சந்திரன் மிரட்டப்பட்டார். ஆனாலும் அம்மிரட்டல்களுக்கு அவர் பணியவில்லை. இதனால் அதிகாரிகள் அவரை சட்ட விரோதக் காவலில் அடைத்து வைத்திருந்தனர்.

திலீபன் மன்றத் தலைவர் தியாகு, இது தொடர்பாக, ஆட்கொணர்வு மனுவொன்றைத் தாக்கல் செய்த பின்பு தான், தமிழகப் போலீசார் பாலச்சந்திரனை 16.3.91 அன்று நிலக்கோட்டை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்தனர். பின் அந்நீதிமன்ற உத்தரவுப்படி மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். சிறை வைக்கப்பட்ட பின்னர் தான், தன் மீது கொடைக்கானல் தொலைக்காட்சி கோபுர வெடிகுண்டு வழக்கு மற்றும் சென்னை நேரு சிலை வெடிகுண்டு வழக்கு இரண்டும் தொடுக்கப்பட்டுள்ளதை, பாலச்சந்திரன் அறிய முடிந்தது. இவ்விரு சம்பவங்களுமே 1988-ஆம் ஆண்டு நடந்தவை.

இதனிடையே, பாலச்சந்திரனை 7.5.91 அன்று முதல் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்க உத்தரவிட்டது தமிழக அரசு. ''15.3.91 அன்று மாலை 5 மணியளவில் சென்னை தியாகராய நகர் பேருந்து நிலையத்தில், பொழிலன் என்பவருடன் சேர்ந்து வெடிகுண்டு வைக்கச் சதித் திட்டம் தீட்டியபொழுது பாலச்சந்திரன் கைது செய்யப்பட்டதாக'' அவ்வாணையில் குறிப்பிடப்பட்டிருந்தது. 12.3.91 அன்றே ''க்யூ'' பிரிவு போலீசாரால் பாலச்சந்திரன் கைது செய்யப்பட்டபின், அவரால் 15.3.91 அன்று எப்படி சதித்திட்டம் தீட்டியிருக்க முடியும்? இம்முரண்பாட்டைச் சுட்டிக்காட்டி, இவர் தமிழக உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனு காலம் தாழ்த்தி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பின் நிராகரிக்கப்பட்டது.

தேசிய பாதுகாப்புச் சட்டக் காவல் முடிந்ததும், பாலச்சந்திரனை வேலூர் கோட்டையில் உள்ள சிறப்பு முகாமில் வைக்க தமிழக அரசு உத்தரவிட்டது. இதனிடையே உயர்நீதி மன்றம் இவருக்கு 21.7.92 அன்று நிபந்தனையுடன் கூடிய பிணையில் விடுதலை அளித்தது. ஆனாலும் தீர்ப்புக்கு எதிராக, இவர் வேலூர் சிறப்பு முகாமில் காவல் வைக்கப்பட்டார். இதை எதிர்த்து இவர் தொடுத்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, உயர்நீதி மன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

வழக்கு விசாரணைக்காக கொடைக்கானல் நீதிமன்றத்திற்கு இவர் அதிகாரிகளால் கொண்டு செல்லப்படாததால், பாலச்சந்திரன் மீது ''பிடி வாரண்ட்'' பிறப்பிக்கப்பட்டது. கொடைக்கானல் நீதிமன்றத்தில் பாலச்சந்திரன், ''இது தனது தவறு அல்ல; அதிகாரிகளின் தவறு'' என எடுத்துக் கூறியதை காதில் வாங்கிக் கொள்ளாமல், அந்நீதிபதி இவரை மதுரை மத்திய சிறையில் அடைக்க உத்தரவிட்டார். தமிழக அரசின் பழி வாங்கும் இவ்வெறியை உயர்நீதி மன்றத்தில் முறையிட்டார், அவர். அதன்பின் உயர்நீதி மன்றம் பாலச்சந்திரனை மதுரை மத்திய சிறையில் இருந்து துறையூர் சிறப்பு முகாமுக்கு மாற்றச் சொல்லி, 24.8.93 அன்று உத்தரவிட்டது; 26.11.93 அன்று மீண்டும் இதே உத்தரவைப் பிறப்பித்தது உயர்நீதி மன்றம். ஆனால் இந்த இரு உத்தரவுகளுமே அரசு அதிகாரிகளின் கழிப்பறை காகிதமாகிப் போயின.

இந்த அடக்குமுறைகளை எதிர்த்து, பாலச்சந்திரன் உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்தார். 4.7.94 அன்று நீதிபதி குப்தா முன்பு இம்மனு தொடர்பாக பதில் அளித்த அரசச் செயலர் பாஸ்கரதாஸ், ''நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரி, இனி பாலச்சந்திரனை சட்டரீதியாக நடத்துவதாக'' வாக்குறுதி அளித்தார்.

நீதிமன்ற உத்தரவுப்படி 1.7.94 அன்று மதுரை மத்திய சிறையில் இருந்து துறையூர் சிறப்பு முகாமுக்கு மாற்றப்பட்ட பாலச்சந்திரன், தற்பொழுது மேலூர் சிறப்பு முகாமில் தடுப்புக் காவலில் அடைக்கப்பட்டுள்ளார். தமிழக அரசு இவர் மீது தொடுத்துள்ள வழக்கில், இவரோடு குற்றம் சாட்டப்பட்ட ஏனைய 14 பேருக்கும் நீதிமன்ற பிணை வழங்கப்பட்டுள்ளது. ஈழத் தமிழர் என்ற ஒரே காரணத்தால், பாலச்சந்திரனுக்கு பிணை மறுக்கப்படுவதோடு, சிறைச்சாலை, சிறப்பு முகாம் எனப் பந்தாடப்படுகிறார். மேலும், வழக்கு விசாரணைக்கு பாலச்சந்திரனை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லாமல், வழக்கை இழுத்தடிக்கும் சதியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது தமிழகப் போலீசு. ஆட்சி மாறிய பின்னும் இந்த அவல நிலை மாறவில்லை.

இந்நிலையில் பாலச்சந்திரன், ''தனது வழக்கைத் தாமதமின்றி தொடர்ந்து நடத்தக்கோரி'' 12.09.96 அன்று காலவரையறையற்ற உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். இவருக்கு ஆதரவாக, மேலூர் சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து ஈழ அகதிகளும் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டனர். 11 நாட்கள் கழித்து, 23.9.96 அன்று உண்ணாவிரதப் போராட்டம் அப்போராளிகளால் திரும்பப் பெறப்பட்டது. காஷ்மீரத்தை விட்டு ஓடி வந்த பார்ப்பனர்களின் மீது பன்னீர் தெளித்து, ஈழத் தமிழர்களின் மீது அமிலத்தை வீசுவது தானோ தேசிய ஒருமைப்பாடு?



கிளிநொச்சி தாக்குதலுக்குப் பின் அகதிகளாகத் தமிழகத்தில் தஞ்சமடையும் தமிழர்கள்: நம்பி வந்தவர்களை நட்டாற்றில் விடுவதா?



படிப்பகம்

www.padippakam.com

# ஏகாதிபத்திய எதிர்ப்பிற்கு தி.மு.க. போட்ட வாய்ப்பூட்டு

ஐ.நா.வைக் கைப்பாவையாகக் கொண்டு, கடந்த ஐந்து வருடங்களாக ஈராக் மக்களைப் பட்டினி படுகுழிக்குள் தள்ளி வரும் அமெரிக்க ஏகாதிபத்தியம், கடந்த செப்டம்பர் முதல் வாரம் அந்நாட்டின் மீது ஏவுகணைத் தாக்குதலைத் தொடுத்தது. குர்தீஷ் ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவாக, சதாம் உசேன் தனது படைகளை அனுப்பியதைய டுத்து இத்தாக்குதலைத் தொடுத்தது அமெரிக்கா. தாக்குதல் நடந்த நான்கு - ஐந்து நாட்களுக்குள்ளாகவே, கிட்டத்தட்ட 50-க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் ஈராக் மீது வீசப்பட்டன; மேலும், ஈராக் விமானங்கள் பறந்து செல்ல தடை விதிக்கப்பட்டுள்ள வான் எல்லையினையும் விரிவுபடுத்தியுள்ளது, அமெரிக்கா.

இந்த அடாவடித்தனங்களை "குர்தீஷ் இன மக்களின் பாதுகாப்பு", "ஐ.நா தடையுத்தரவு மீறல்" எனும் போர்வையில் மூடி மறைத்து விட 'சர்வ தேச அரங்கில் கிளிண்டன் நிர்வாகம் எடுத்த அனைத்து முயற்சிகளும் தோற்றுப் போயின. எனினும், மேலாதிக்க வெறி கொண்ட இத்தாக்குதலை உள்நாட்டு அதிபர் தேர்தலில் பிரச்சாரம் செய்து' வாக்குகளாக மாற்றிவிட முயலுகிறார், 'சனநாயகவாதி' கிளிண்டன்.

அமெரிக்காவின் இந்த் அடாவடித் தனத்தைக் கண்டித்து, சென்னையில் அமெரிக்கத் தூதரகம் முன்பாக மக்கள் கலை இலக்கியக் கழகமும், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியும் இணைந்து 13.09.96 அன்று ஆர்ப்பாட்டமொன்றை நடத்தின. 50-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, ம.க.இ.க. சென்னை பகுதிச் செயலர் தோழர் குமார் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டக்காரர்கள் தூதரகம் நோக்கி ஊர்வலமாக வருவதற்கும், ஆர்ப்பாட்டத்தின் பொழுது ஒலிபெருக்கியைப் பயன்படுத்துவதற்கும் அனுமதி மறுத்து, தனது ஏகாதிபத்திய விசுவாசத்தை வெளிகாட்டிக் கொண்டது, தி.மு.க. அரசு.

ஆர்ப்பாட்டத்தின் பொழுது, அமெரிக்காவின் மேலாதிக்கத்திற்கு எதிராக புரட்சிகர - ஜனநாயக சக்திகளை ஒன்று திரளக் கோரியும், உதட்டளவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு பேசும் இந்திய ஓட்டுக் கட்சிகளின் பாராமுகத்தை அம்பலப்படுத்தியும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

**தகவல்:**

**ம.க.இ.க. - பு.மா.இ.மு., சென்னை.**

**ஈராக் மீதான தாக்குதலைக் கண்டித்து சென்னையில் ம.க.இ.க.-பு.மா.இ.மு.வினரின் ஆர்ப்பாட்டம்.**




# அடிப்படை வசதி கேட்டால் அடக்குமுறையை ஏவுகிறார்கள்

மதுரையில் ஜெய்ஹிந்த்புரம், சோலை அழகுபுரம், எம்.கே. புரம், எஸ்.எம். புரம் பகுதிகளில் சாலை, சாக்கடை மற்றும் அடிப்படை சுகாதார வசதிகளைச் செய்து தரக் கோரி, பு.மா.இ.மு. தலைமையில், 11.09.96 அன்று அப்பகுதி மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். கிட்டத்தட்ட 55 பேர் கலந்து கொண்ட இந்த சாலை மறியல் காலை 10 மணிக்குத் தொடங்கி மதியம் 12.30 மணி வரை நீடித்தது. சாலை மறியலில் பகுதியைச் சேர்ந்த 35 பெண்கள் பங்கு கொண்டனர்.

போலீசார், "பேச்சு வார்த்தை நடத்திக் கொள்ளலாம்; கலைந்து செல்லுங்கள்" என மிரட்டினர். தி.மு.க. கட்சியினரும் "போராட்டத்தைக் கைவிட்டு விடும்படி" நைச்சியமாகப் பேசினர். ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்கள், "மாநகராட்சி ஆணையாளர் வந்தபின்தான் போராட்டத்தைக் கைவிடுவோம்" என உறுதியாகக் கூறிவிட்டு, முழக்கமிட்டபடியே சாலை மறியலைத் தொடர்ந்தனர்.

பேச்சு வார்த்தைக்கு அழைத்து வரப்பட்ட மின்சாரத் துறை அதிகாரி, தெரு விளக்குகளை உடனடியாகச் சரி செய்து தருவதாக வாக்குறுதி அளித்தார். இறுதிவரை மாநகராட்சி ஆணையாளர் போராட்டம் நடந்த பகுதியினை எட்டிக்கூடப் பார்க்கவில்லை. இதைச் சாக்கிட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் அனைவரையும் கைது செய்வதாக அறிவித்தது போலீசு.

மறியலில் ஈடுபட்ட பெண்கள் போலீசு நிலையம் வரை அழைத்து வரப்பட்டு, பின் விடுவிக்கப்பட்டனர். பிறகு மாலை 6 மணிக்கு மேல், வழக்கு எதுவும் பதிவு செய்யாமல் விடுவித்தது போலீசு. போலீசின் இந்த அடக்குமுறையைக் கண்டித்துப் பகுதியெங்கு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

**தகவல்:**

**பு.மா.இ.மு., ஜெய்ஹிந்த்புரம், மதுரை.**



படிப்பகம்

www.padippakam.com



## ஆந்திர விவசாயிகள் போர்க்கோலம்

மின்கட்டணம் - பாசன நீர் கட்டண உயர்வை எதிர்த்து ஆந்திர விவசாயிகள் நடத்திவரும் போராட்டத்தைக் கண்டு, சந்திரபாபு நாயுடு அரசு விழிபிதுங்கி நிற்கிறது. மாநில அரசின் பற்றாக்குறையை ஈடுகட்ட உலக வங்கி உத்திரவுப்படி நாயுடு அரசு மின் கட்டணத்தை ஆறு மடங்கு உயர்த்தியது. இதோடு பாசன நீர் தீர்வையும் உயர்த்தப்பட்டது. இரு மாதங்களுக்கு முன்பு இக்கட்டண உயர்வை எதிர்த்து கடற்கரையோர மேற்கு கோதாவரி மாவட்ட விவசாயிகள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். அது மாநிலம் முழுவதும் பற்றிப் படரத் தொடங்கியதும், மின் கட்டணத்தை ரூ. 300-லிருந்து ரூ. 200 ஆகக் குறைப்பதாக விவசாயப் பிரதிநிதிகளிடம் முதல்வர் சமரசம் பேசிப் பார்த்தார். ஆனால் இதை ஏற்க மறுத்து கடந்த செப்.1 முதலாக விவசாயிகள் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர்.

கடந்த செப். 3-ம் நாளன்று சென்னை-கல்கத்தா நெடுஞ்சாலையில் விவசாயிகள் மிகப்பெரியதொரு சாலை மறியல் போராட்டத்தை நடத்தினர். கடற்கரை மாவட்டங்கள் முழுவதும் விவசாயிகள் கிராமங்களுக்கு செல்லும் சாலைகளை மறித்து போக்குவரத்தை நிலைகுலைய வைத்தனர். பல கிராமங்களில் போலீசார் நடத்திய தடியடியை எதிர்த்து வீதிகளில் விவசாயிகள் போலீசாருடன் வீரப் போர் புரிந்தனர். சென்னை - காகிநாடா சர்க்கார் விரைவு ரயிலை மறித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம் செய்த போது, போலீசார் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 3 பேர் மாண்டனர். 18 பேர் படுகாயமடைந்தனர். விரைவு ரயில் வண்டிக்கு விவசாயிகள் தீயிட முயற்சித்ததைத் தடுக்கவே துப்பாக்கிச் சூடு நடத்தியதாக போலீசு பூசி மெழுகியது.

மறுநாள், செப். 4-ந் தேதியன்று துப்பாக்கிச் சூட்டில் பலியானோரின் இறுதி ஊர்வலம் தானுகு கிராமத்தில் நடந்தபோது, அது நாயுடு அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டமாக மாறியது. போலீசார் கண்ணீர் புகைக் குண்டு வீசியும், வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டும் விவசாயிகளை விரட்டியடித்து முன்னணியாளர்களைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். இந்நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு, அரசியல் ஆதாயம் தேடும் நோக்கத்துடன், எதிர்க்கட்சிகள் விவசாயிகளின் போராட்டத்தை ஆதரிக்கின்றன. செப்.5 அன்று எதிர்க்கட்சிகளின் அறைகூவலின்படி நடந்த கடையடைப்புப் போராட்டம் கடற்கரையோர மாவட்டங்களில் முழு வெற்றியைப் பெற்றது.

அதைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு பற்றி நீதி விசாரணை நடத்துவதாகவும், பலியானோர் குடும்பங்களுக்கு ரூ. 1 லட்சம் நிவாரணமளிப்பதாகவும், கட்டண உயர்வு பற்றி விவசாயப் பிரதிநிதிகள் மற்றும் எதிர்க் கட்சிகளுடன் கலந்து பேசி முடிவு செய்வதாகவும் நாயுடு அரசு மாய்மாலம் செய்து வருகிறது. ஆனால் போர்க்குணமிக்க ஆந்திர விவசாயிகள், இந்தப் பசப்பல்களைக் கண்டு மயங்கிவிடாமல் போராட்டத்தைத் தொடர்ந்து வருகின்றனர். கடற்கரை மாவட்டங்கள் மட்டுமின்றி பிற மாவட்டங்களிலும் போராட்டம் பற்றிப் பரவி வருகிறது. முன்னறிவிப்பின்றி தினமும் திடீரென ஏதாவது ஒரு பகுதியில் சாலை மறியல் போராட்டம் நடத்தி, ஆட்சியாளர்களின் முகத்தில் விவசாயிகள் கரிபூசி வருகின்றனர்.

## பட்டினிப் பட்டாளத்தின் உணவுக் கலகம்

மேற்கு ஆசியாவில் உள்ள ஜோர்டான் நாட்டில் அண்மையில் நடந்துள்ள உணவுக் கலகங்கள், அந்நாட்டையே உலுக்கி எடுத்துள்ளது. தெற்கே கராக் நகரில் பட்டினிப் பட்டாளமாகிய ஏழை மக்களால் தொடரப்பட்ட இக்கலகம், தலைநகர் அம்மான் வரை பற்றிப் பரவியது. அரசுக் கட்டிடங்கள் தாக்கப்பட்டு தீயிடப்பட்டன. ராணுவத்தைக் குவித்து அடக்குமுறையை ஏவிய போதிலும் இப்போராட்டம் இன்னமும் நீறுபூத்த நெருப்பாகவே உள்ளது.



ஜோர்டான் நாடெங்கும் பற்றிப் பரவும் உணவுக் கலகம்: உலக வங்கித் திட்டத்தின் எதிர் விளைவு.

ஜோர்டானில் மொத்த மக்கட்தொகையில் ஏறத்தாழ கால் பங்கினர் - 45 லட்சம் ஏழைகள் - தமது அத்தியாவசிய உணவுப் பொருட்களை மானிய விலையில் ரேஷன் கடைகள் மூலமே பெறுகின்றனர். உலக வங்கி - ஐ.எம்.எப்.ன் உத்திரவுப்படி அந்நாட்டின் ஆட்சியாளர்கள், கடந்த ஆகஸ்ட் மாத மத்தியில் புதிய உணவு தானியக் கொள்கையை அறிவித்தனர். இதன்படி, உணவுக்கான மானியங்கள் குறைக்கப்பட்டு, தனியார் நிறுவனங்கள் மேலைநாடுகளிலிருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய்து கொள்ள தாராள அனுமதி தரப்பட்டது. இதன் விளைவாக ரேஷன் கடை உணவுப் பொருட்களின் விலைகள் தாறுமாறாக உயர்ந்தது. 85 பில்ஸ் (ஜோர்டான் நாணயம்) விலையுள்ள சாதாரண ரொட்டி 220 பில்சாக ஏறியது. போதாக்குறைக்கு, உணவு மானியக் குறைப்பு நாட்டுக்கு அவசியமானது என்றும், இத்தகைய பொருளாதார சீர்திருத்தத்தால் நாடு நாலு கால் பாய்ச்சலில் முன்னேறும் என்றும் ஆட்சியாளர்கள் காதில் பூ சுற்றினர்.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு நடத்தியதுதான் இந்த உணவுக் கலகங்கள்! மக்கள் விரோத, நாட்டு விரோத உலக வங்கி-ஐ.எம்.எப் கொள்கைகளின் எதிர் விளைவுதான் இப்போராட்டங்கள்!

## கன்னித்தன்மை சோதனை: பெண்ணினத்துக்கு எதிராக இன்னுமொரு காட்டுமிராண்டித்தனம்

அரசு மருத்துவத் தாதியர் பயிற்சிப் பள்ளியில் சேருவதற்கான தேர்வில் பெண்களின் கன்னித் தன்மையைப் பரிசோதிக்கும் மிகக்



படிப்பகம்

www.padippakam.com



கேவலமான செயல் அண்மையில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்திலுள்ள மன்னர் ஜார்ஜ் அரசு மருத்துவமனையில், மருத்துவ தாதியர் பயிற்சிக்கான தேர்வின் போது, 42 பெண்களுக்கு கன்னித்தன்மை சோதனையை இரு பெண் மருத்துவர்கள் நடத்தியுள்ளனர்.

தேர்வுக்கு வந்த ஒரு பெண்ணின் அடிவயிற்றில் தழும்புகள் காணப்பட்டதால் பிரசவித்த பெண்களுக்குத்தான் இப்படி தழும்புகள் இருக்கும் என்று சந்தேகித்த மருத்துவர்கள் அவருக்கு கன்னித்தன்மை சோதனை நடத்த முற்பட்டனர். ஏனெனில் தேர்வு விதிகளின்படி மணமாகாத - குழந்தை பெற்றிராத பெண்களை மட்டுமே தாதியர் பயிற்சிக்குச் சேர்க்க வேண்டுமாம்.

தான் மணமாகாதவர் என்பதற்கு வருவாய் துறை அதிகாரிகளிடமிருந்து சான்றிதழைக் காட்டிய பின்னரும், தேர்வு நடத்திய மருத்துவர்கள் மிகக் கீழ்த்தரமான கன்னித்தன்மை சோதனை நடத்தக் கோரியதை எதிர்த்து அப்பெண் போலீசில் புகார் செய்தார். இச்சோதனையை நடத்தாவிட்டால், அவரைப் பயிற்சியில் சேர்த்துக் கொள்ள முடியாது என்று மருத்துவர்கள் மிரட்டியதையும் அவர் புகாரில் குறிப்பிட்டார். இதுதவிர அநாகரீகமான இச்சோதனை பற்றியும் பத்திரிகையாளர்களிடம் முறையிட்டார். இந்த விவகாரம் பத்திரிகைகளில் வெளிவந்து நாறத் தொடங்கியதும், கோரியது. ஆனாலும் இக்கோரிக்கையை அரசு இன்னமும் பரிசீலிக்கக்கூட இல்லை.

மருத்துவத் தாதியர் பணி மட்டுமல்ல; விமானப் பணிப் பெண்கள், ஐந்து நட்சத்திர விடுதிகளின் வரவேற்பாளர்கள் என அரசு நிறுவனங்களிலேயே, மணமாகாத கன்னிப் பெண்களை மட்டுமே வேலைக்கு எடுக்க வேண்டும் என்ற விதி உள்ளது. எனில், தனியார் நிறுவனங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. தேசிய மகளிர் கமிஷன், மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள், பஞ்சாயத்துகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு என பெண்கள் முன்னேற்றத்துக்கான சட்டங்களும் வாய்ப்புகளும் உள்ளதாக ஆட்சியாளர்கள் தம்பட்டம் அடிக்கின்றனர். ஆனால் நடைமுறையில் பெண்களை அழகுப் பதுமைகளாக, கவர்ச்சிக் கன்னிகளாகப் பார்க்கும் ஆணாதிக்க வக்கிரம்தான் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

## டாடா ஆலைக்கெதிராக எஃகுறுதிமிக்க போராட்டம்

ஒரிசாவில் நெற்களஞ்சியப் பகுதியான கோபல்பூரில் அமையவுள்ள டாடா இரும்பு - எஃகு ஆலைக்கெதிராக அப்பகுதிவாழ் விவசாயிகள் நடத்திவரும் உறுதிமிக்க போராட்டத்தைக் கண்டு



டாடா ஆலை அமைவதை எதிர்த்து கோபல்பூர் பகுதி விவசாயிகளின் சாலை மறியல்.

பலர் போலிச் சான்றிதழ்களைக் காட்டி தாதியர் பயிற்சியில் சேருவதாலேயே, இத்தகைய சோதனையை நாங்கள் வலியுறுத்தினோம் என்று தேர்வு நடத்திய மருத்துவர்கள் நியாய வாதம் பேசினர். மேலும், சம்பந்தப்பட்ட அந்தப் பெண் மணமாகி குழந்தை பெற்றவர்தான் என்று தாங்கள் நிரூபிக்கத் தயார் என்று சவால் விட்டனர்.

இதைத் தொடர்ந்து பல்வேறு மகளிர் அமைப்புகள் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியதோடு, அம் மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரின. இதுதவிர தாதியர் சங்கங்களும் போராட்டத்தை நீட்டித்தன. அதன் பிறகே ஆந்திர அரசு அம்மருத்துவர்களைத் தற்காலிக பணிநீக்கம் செய்துள்ளது. ஆனாலும் மணமாகாத - குழந்தை பெற்றிராத பெண்களை மட்டுமே தாதியர் பயிற்சியில் சேர்க்க வேண்டும் என்ற வக்கிரமான விதியை நீக்குவதைப் பற்றி அது மௌனம் சாதிக்கவே செய்கிறது.

''ஜீ - டி.வி'' எனும் தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான ''தில் கா டாக்டர்'' எனும் தொடரில் வரும் தாதியர் பாத்திரங்கள், உள்ளாடை தெரியும்படி குட்டைப் பாவாடை அணிந்து வருவதை எதிர்த்து கடந்த ஆண்டில் தாதியர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். தற்போதைய ஆபாசமான குட்டைப் பாவாடை சீருடைக்குப் பதிலாக ''சல்வார் - கம்மீஸ்'' சீருடை வேண்டும் என்று அனைத்திந்திய தாதியர் சங்கக் கூட்டமைப்பு

ஆளும் காங்கிரசுப் பெருச்சாளிகள் பீதியில் அலறுகின்றனர். ஒரிசாவில் கன்ஜம் மாவட்டம் சாத்ரபூர் வட்டத்தில் கடற்கரையை ஒட்டியுள்ள நன்செய் நிலப் பகுதியில் டாடா நிறுவனம் 35,000 கோடி ரூபாய் முதலீட்டில் எஃகு ஆலையை நிறுவ உள்ளது. இதன் விளைவாக இப்பகுதியிலுள்ள 25 கிராமங்களும், 7500 ஏக்கர் வளமான நன்செய் நிலங்களும் அழிக்கப்படும். வாழை, மா, தென்னந்தோப்புகளும், புதர் காடுகளும் பாழாகும். இப்பகுதியில் வாழும் 30,000-க்கும் மேற்பட்ட மக்கள் பிழைக்க வழியின்றி துரத்தப்படுவர். இப்பகுதியில்தான் ''கேவ்டா'' எனப்படும் ஒரு வகை தாழம்பூ ஏராளமாக வளர்கிறது. இப்பூவைச் சேகரித்தல், மற்றும் வாசனை திரவிய தொழிலில் 5000-க்கும் மேற்பட்ட பழங்குடியினர் ஈடுபட்டுள்ளனர். டாடா எஃகு ஆலையால், இனி அவர்களது வாழ்வே கேள்விக்குறியாகி விட்டது.

ஆனால் இந்த ஆலையை வேறிடத்துக்கு மாற்றுவதற்கு கூட டாடா நிறுவனம் பரிசீலிக்க மறுக்கிறது. ஏனெனில் கோபல்பூரானது, சென்னை - கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. ரயில் நிலையமும் உள்ளது. கடற்கரையிலிருந்து 5 கி.மீ. தொலைவிலேயே இருப்பதால், செலவு குறைவான கப்பல் போக்குவரத்தின் மூலம் சரக்கு ஏற்றுமதி - இறக்குமதி செய்ய பொருத்தமான இடமாக உள்ளது. எனவேதான், மக்களது எதிர்ப்பையும்



படிப்பகம்

www.padippakam.com



மீறி இப்பகுதியில் ஆலையை நிறுவ டாடா நிறுவனம் துடிக்கிறது. இப்பகுதியிலிருந்து வெளியேற்றப்படும் விவசாயிகளுக்கு நிவாரணமாக ரூ. 30,000 தருவதாக ஆசை காட்டுகிறது. காங்கிரசு ஆட்சியாளர்களோ டாடா ஆலையை நிறுவ ஒப்புதல் அளித்துள்ளதோடு, கடந்த ஆகஸ்ட் 11 அன்று எஃகு ஆலை ஆதரவுப் பேரணியை ஜெகன்னாத்பூரிலிருந்து சாத்ரபூர் வரை நடத்தியுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த விவசாயிகள், டாடா ஆலையின் கால்கோள் விழா நினைவுக் கல்லை பிடுங்கி எறிந்து, சாலை மறியல் போராட்டம் நடத்தினர். நில அளவீட்டு குழுவினரையும் போலீசாரையும் ''கெரோ'' செய்து விரட்டியடித்ததோடு, அவர்களது வாகனங்களையும் சேதப்படுத்தினர். வலது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நாராயணன் ரெட்டி என்பவர் தலைமையில் மக்கள் போராட்டக் கமிட்டியை நிறுவியுள்ள விவசாயிகள், நாராயண் ரெட்டியை காங்கிரசுக் கயவாளிகள் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்ததை எதிர்த்து, மிகப் பெரிய சாலை மறியல் - ரயில் மறியல் போராட்டத்தை நடத்தினர். இது தவிர சட்டசபை முன்பு ஆர்ப்பாட்டமும் நடத்தியுள்ளனர். கோவா மக்கள் டூபான்ட் நைலான் ஆலையை விரட்டியடித்ததைப் போல, ஒரிசா விவசாயிகள் டாடா எஃகு ஆலையை நிச்சயம் விரட்டியடிப்பார்கள் என்பதையே அவர்களது எஃகுறுதிமிக்க போராட்டம் உணர்த்துகிறது.



பச்சிளங் குழந்தைகளைப் பறிகொடுத்த துயரத்தில் சந்தால் பழங்குடி இன மக்கள்.

## பழங்குடியினரின் துயரம் 'சமூகநீதி' ஆட்சியின் பாராமுகம்

அசாம் மாநிலத்தில் போடோ-சந்தால் இனக் கலவரத்தைத் தொடர்ந்து ஏறத்தாழ 1,50,000 சந்தால் பழங்குடியின மக்கள் அகதி முகாம்களில் அல்லற்படுகிறார்கள். இவர்களில் 20,000-க்கும் மேற்பட்டோர் பச்சிளம் குழந்தைகள் ஆவர். ஏறத்தாழ 3 மாதங்களுக்கு முன்பு நடந்த கலவரத்தில் 145 பேர் மாண்டனர். ஆனால் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் அகதி முகாம்களில் போதிய உணவின்றியும் நோய் தாக்கியும் 500-க்கும் மேற்பட்டோர் மாண்டு போயுள்ளனர். இதில் பாதிக்கும் மேற்பட்டோர் குழந்தைகளாவர். இன்னும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் காய்ச்சலில் விழுந்து, உரிய மருத்துவ உதவியில்லாததால் சாவின் விளிம்பில் தத்தளிக்கின்றனர்.

போக் - அம்குரி முகாமில் உள்ள 420 குழந்தைகளில் 65 பேர் சத்துணவின்றி மாண்டு போயுள்ளனர். சலாகதா முகாமில் 25 பேர் வயிற்றுப் போக்கினாலும், கச்கோ முகாமில் 83 குழந்தைகள் காய்ச்சலினாலும் மாண்டுள்ளதாக குழந்தை நல அதிகாரிகள் கூறுகின்றனர்.

அகதி முகாம் என்பது மூங்கில் கொம்புகளில் பாலீதீன் பாயினால் மூடப்பட்ட கொட்டகைதான்! இத்தகைய திறந்தவெளி கொட்டகைகளில் 13,000 அகதிகள் அல்லற்படுகின்றனர். மொத்தமுள்ள ஒன்றரை லட்சம் அகதிகளுக்கு 25 மருத்துவர்கள் தான் உள்ளனர். இவர்களும் அரசு மருத்துவமனையில் பணிகளை முடித்த பின், பகுதிநேர வேலையாகத்தான் முகாம்களுக்கு அனுப்பப்படுகின்றனர். நகரங்களிலிருந்து இவர்கள் வந்து செல்ல வாகன வசதியை அரசு ஏற்பாடு செய்யாததால் பலர் வருவதே கிடையாது.

அசாம் மாநில அரசு சந்தால் அகதிகளுக்கு மாதமொன்றுக்கு ரூ. 70 லட்சம்தான் செலவிடுகிறது. ஒன்றரை லட்சம் பேராக உள்ள அகதிகளுக்கு இதன் மூலம் மாதமொன்றுக்கு ஒருவருக்கு ரூ. 45 தான் செலவிடமுடியும். மத்திய அரசோ இதுவரை ஒரு பைசா கூட ஒதுக்காத நிலையில் இத்தொகையைக் கொண்டு அகதிகளை எப்படி பராமரிக்க முடியும் என்று அதிகாரிகளே வேதனையுடன் குறிப்பிடுகின்றனர்.

வாரக் கணக்கில் பட்டினி கிடக்கும் தாய்மார்கள், அதிகாரிகள் வரும்போது காலிப் பானைகளுடன் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். சில முகாம்களில் அதிகாரிகளைச் சூழ்ந்து கொண்டு ''கெரோ'' செய்கின்றனர். நிலைமை இப்படியே நீடித்தால் பல அகதி முகாம்கள் மயான பூமியாகிவிடும் என்று பல சமூக சேவை அமைப்புகள் எச்சரித்தும் கூட, மத்திய - மாநில அரசுகள் அகதிகளை அலட்சியப்படுத்தியே வருகின்றன. மாநில முதல்வரோ, பிரதமரோ இதுவரை ஆறுதல் கூறுவதற்குக்கூட அகதி முகாம்களுக்கு வரவில்லை.

அதே சமயத்தில், மராட்டிய இந்துவெறி - இனவெறி பாசிசத் தலைவன் பால்தாக்கரேயின் மனைவி செத்ததற்கு ஓராண்டுக்குப் பிறகு அண்மையில் பிரதமர் தேவகௌடா அவரைச் சந்தித்து



படிப்பகம்

www.padippakam.com



துக்கம் விசாரித்தாராம். ஒரு பாசிஸ்டின் மனைவி செத்ததற்கு துக்கம் தொண்டையை அடைக்க ஓடோடிச் சென்ற பிரதமருக்கு, பலநூறு பழங்குடியினக் குழந்தைகள் மாண்டுபோன துயரச் சம்பவமானது, அவர் நெஞ்சிலே எந்த சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. நாட்டு மக்கள் மீது 'சமூக நீதி' ஆட்சியாளர்கள் கொண்டுள்ள அக்கறை இவ்வளவுதான்!

## பெருகிவரும் கொட்டடிக் கொலைகள்

பாசிச இட்லருக்கே பாடம் சொல்லித் தரும் வகையில், கொட்டடிக் கொலைகளிலும் உதிரத்தை உறைய வைக்கும் மிருகத்தனமான சித்திரவதைகளிலும் இந்தியப் போலீசும் ராணுவமும் முன்னேறி விட்டது. அண்மையில் வெளியான தேசிய மனித உரிமைக் கமிஷனின் (NHRC) ஆண்டறிக்கையே இந்த உண்மையை நிரூபித்துக் காட்டுகிறது.

தேசிய மனித உரிமைக் கமிஷன் என்பது 1992-ல் இந்திய அரசு உருவாக்கிய அதன் சார்பு அமைப்புதான். இந்தியப் போலீசு, புலனாய்வுத் துறையின் மூலமாகவே மனித உரிமை மீறல்களைக் கண்டறிந்து விசாரிக்கும் அமைப்புதான். ஆனாலும் அதன் 1995-96-ஆம் ஆண்டின் அறிக்கையே இந்தியப் போலீசு - ராணுவத்தின் பாசிசக் கோர முகத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது.

1994 - 95-ம் ஆண்டில் இந்தியாவெங்கும் போலீசு கொட்டடியில் 65 பேர் மாண்டனர். 1995-96-ல் அது 105 ஆக உயர்ந்துள்ளது. இதேபோல, 1994-95-ல் சிறைச்சாலைகளில் 34 பேர் கொல்லப்பட்டனர். 95-96-ல் சிறைக் கொட்டடிக் கொலைகள் 207 ஆக அதிகரித்துள்ளது.



கடித குண்டு வீசித் தாக்கும் ஓமர் அலி (இடது): கலங்கி நிற்கும் வலது கம்யூ. அமைச்சர் நந்தகோபால் பட்டாச்சார்யா

'சமூகநீதிக் காவலர்கள்' ஆளும் பீகார் மாநிலம்தான் கொட்டடிக் கொலைகளில் முதலிடம் வகிக்கிறது. கடந்த ஈராண்டுகளில் மட்டும் அங்கு 75 கொலைகள் நடந்துள்ளன. அதையடுத்து, இந்து வெறியர்கள் ஆளும் டெல்லி மாநிலம் 74 கொலைகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. அதையடுத்து ஆந்திரம், போலிக்கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்கம் ஆகிய மாநிலங்கள் வருகின்றன.

கடந்த ஓராண்டில் மட்டும் 10, 195 மனித உரிமை மீறல் புகார்கள் வந்துள்ளதாகவும், முந்தைய ஆண்டைக் காட்டிலும் இது ஏறத்தாழ ஒரு மடங்கு அதிகம் என்றும் தேசிய மனித உரிமைக் கமிஷன் கூறுகிறது. கொட்டடிக் கொலைகள் மட்டுமின்றி, மிருகத்தனமான சித்திரவதைகள், போலீசு கும்பலின் பாலியல் வன்முறை, போலீசுடன் மோதல் என்ற பெயரில் நடக்கும் கொலைகள், கைது செய்த பின்னர் 'காணாமல்' போவோர், சொத்துக்களை சூறையாடுதல், கொடூரமாக தண்டித்தல் முதலான போலீசு அட்டூழியங்களைப் பற்றிய புகார்களே குவிந்துள்ளதாக இக்கமிஷன் அறிக்கை கூறுகிறது. ''தடா'' சட்டம் ரத்து செய்யப்பட்டுள்ள போதிலும், இன்னமும் 6000-க்கும் மேற்பட்டோர் ''தடா'' சிறைகளில் வாடுவதாகவும் அறிக்கை கூறுகிறது.

மனித உரிமைக் கமிஷனின் பரிந்துரைகள், வழிகாட்டும் நெறிமுறைகளை பல மாநில அரசுகள் பின்பற்றுவதில்லை என்றும் இவற்றை முறையாகப் பின்பற்றுமாறும், துப்பாக்கியின் ஆட்சியையும் பயங்கரவாதப் படுகொலைகளையும் உடனடியாக நிறுத்துமாறும் அது வேண்டுகோள் விடுத்துள்ளது.

இரத்தவெறி பிடித்த புலிகளைக் கூட சைவப்புலிகளாக மாற்றிவிடலாம். ஆனால் பாசிச - பயங்கரவாத முறையில் பயிற்றுவிக்கப்பட்ட இந்திய போலீசு மனித உரிமைகளை ஒரு போதும் மதித்து நடக்காது. இதை நன்கறிந்த போதிலும் கொலைகார போலீசுக்கு உபதேசம் செய்து, அதைத் திருத்த முற்படுவதாக தேசிய மனித உரிமைக் கமிஷன் பித்தலாட்ட நாடகமாடுவது நல்ல வேடிக்கைதான்!

## கட்சியும் ஆட்சியும் ஒப்பந்தக்காரர்களின் பையில்

''ஒப்பந்தக்காரர்களின் அரசு'' என்று ஏற்கனவே அம்பலப்பட்டுப் போயுள்ள மே. வங்க 'இடது முன்னணி' அரசு, இப்போது ஒரு கடித விவகாரத்தில் சிக்கி சந்தி சிரிக்கிறது. 'இடது முன்னணி'யில் அங்கம் வகிக்கும் வலது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஓமர் அலி என்பவர் மூன்று முறை தொடர்ந்து அமைச்சராக இருந்தவர். கடந்த தேர்தலின் போது இவருக்கு தேர்தல் டிக்கெட் தரப்படவில்லை. இதனால் ஆத்திரமடைந்த அவர் வலது கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகி, வெளியிலிருந்து கட்சியின் யோக்கியதையை அம்பலப்படுத்தி கலகம் செய்து வருகிறார்.

இவர், முன்பு அமைச்சராக இருந்தபோது மே. வங்க வலது கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளரான நந்தகோபால் பட்டாச்சார்யாவுக்கு எழுதிய ஒரு கடிதத்தின் நகலை அண்மையில் வெளியிட்டுள்ளார். 1995 மே மாதத்தில் எழுதப்பட்ட அக்கடிதத்தில், ''சில ஒப்பந்தக்காரர்கள் எனது துறையிலுள்ள பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகள் மூலம் நிதி வசூலித்துத் தர முன் வந்துள்ளார்கள்'' என்று எழுதப்பட்டுள்ளது. ''இப்படித்தான் நாங்கள் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கட்சிக்கு நன்கொடை பெற்றோம்'' என்று ஓமர் அலி கூறுகிறார். மேலும் அதிகாரிகளின் இடமாற்றம், நியமனம் முதலானவற்றுக்காகவும் நிதி வசூலிக்கப்பட்டதாக கூறியுள்ளார். அவரது கடிதம் மற்றும் குற்றச்சாட்டுகளை வங்க நாளேடுகள் வெளியிட்டு நாறடித்து வருகின்றன.

இப்போது அமைச்சராகியுள்ள வலது கம்யூனிஸ்ட் செயலாளரான நந்தகோபால் பட்டாச்சார்யா, இக்கடிதம் போர்ஜரியானது என்று எகிறிக் குதிக்கிறார். ஆனால் வலது கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளேயே நந்தகோபால் எதிர்ப்பு கோஷ்டிகள் இக்கடிதத்தை வைத்து கலகம் செய்கின்றன. ஓமர் அலியின் கடிதம் உண்மையானதா, போலியானதா என்பதை விட ஒப்பந்தக்காரர்களிடம் எவ்வளவு கோடி நன்கொடையாக பெறப்பட்டது என்ற விவகாரமே வலது கம்யூனிஸ்ட் கட்சியில் முக்கிய பிரச்சினையாகிவிட்டது.

முன்பு மே. வங்க 'மார்க்சிஸ்டு' அமைச்சரான பினாய் சவுத்திரி ''இது ஒப்பந்தக்காரர்களின் அரசுதான்'' என்று வெளிப்படையாக சாடிவிட்டு, பின்னர் தான் பேசியதை பத்திரிகைகள் தவறாக திரித்து எழுதி விட்டன என்று பூசி மெழுகினார். ஆனால் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற கதையாக ஓமர் அலியின் கடித விவகாரம் 'இடது முன்னணி' அரசின் யோக்கியதையைத் திரைகிழித்துக் காட்டிவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# அமர்நாத் சாவுகள் தேசிய எழவா?

## இந்து வெறியர்களின் ஒப்பாரிக்கு ஒத்துப்பாடிய ''மதசார்பற்ற''கட்சிகள்

இந்து மதம் சம்பந்தப்பட்ட எந்தவொரு சம்பவத்தையும் - விவகாரத்தையும் ''தேசியப் பிரச்சினை''யாக அடையாளப் படுத்தி, போலி கம்யூனிஸ்டுகள் உட்பட மதச்சார்பற்றவை என்று கூறிக் கொள்ளும் கட்சிகள் கூட அதை ஏற்கும்படி செய்வதுதான் ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா பாசிச பரிவாரங்களின் அரசியல் தந்திரம். எதிர்பாராத கடுமழை, பனிப்பொழிவு, கடுங்குளிர், நிலச்சரிவு. காரணமாக அமர்நாத் யாத்திரிகர்களில் ஏறக்குறைய 300 பேர் மாண்டு போன விவகாரத்தையும் ''தேசியப் பிரச்சினை''யாகச் சித்தரித்து, நாடாளுமன்றத்தின் முன்பிருந்த எல்லா முக்கிய அலுவல்களையும் நிறுத்தி வைத்து, சர்வ கட்சியினரும் கூட்டு ஒப்பாரி வைக்கச் செய்வதிலும் இந்து பாசிசப் பரிவாரங்கள் வெற்றி பெற்றுவிட்டன.

அமர்நாத் யாத்திரிகர்களின் சாவு ''ஒரு தேசியத் துயரம்'' என்று கூட்டுமுழக்கமிட்டனர் முன்னாள் பிரதமர்களான வாஜ்பாயும் சந்திரசேகரும். ''நடந்தவை இயற்கைப் பேரழிவு என்பதாக அரசு சித்தரிப்பது கேலிக்குரியது. மத்திய - மாநில அரசுகளே சமப் பொறுப்புள்ளவை'' என்று சாடினர். ''அரசு நிர்வாகத்தின் கிரிமினல் அலட்சியம்தான் காரணம்'' என்று பாரதீய ஜனதா குற்றஞ் சாட்டியது.

செத்தவர்களின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு இலட்சம் ஈட்டுத் தொகை தரும்படி பாரதீய ஜனதா கோரியது; அதையும் மிஞ்சிவிட எண்ணிய காங்கிரசோ, தலா ஐந்து இலட்சம் தரும்படி சிபாரிசு செய்தது. அதுவும் போதாதென்று ''நாடாளுமன்ற விசாரணைக் குழு அமைத்து, கடமை தவறிய குற்றம் புரிந்தவர்களைத் தண்டிக்கவும்'' கோரியது. ''அமர்நாத் சாவுகள் இயற்கையில் ஏற்பட்ட விபத்தே அல்ல; அரசின் அலட்சியம், கையாலாகத் தனம், நிர்வாகக் குறைபாடுகளால்தான் நேர்ந்தது. முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுத்திருந்தால் இப்படி நேர்ந்திருக்காது'' என்று ஐக்கிய முன்னணிக்கு வெளியிலுள்ள கட்சிகள் குற்றஞ் சாட்டின. ''நடந்துவிட்ட துயரத்துக்காக'' வருத்தம் தெரிவித்த போலிக் கம்யூனிஸ்டுகள், ''விசாரணைக் கமிசன் வேண்டும் நட்ட ஈடுதர வேண்டும்'' என்று கோரினர்.

ஏதோ குற்றம் செய்துவிட்டு விழிப்பவனைப் போன்ற பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டது ஐக்கிய முன்னணி அரசு. மன்னிப்பு கேட்கும் பாவனையில் பிரதமர் பதில் சொன்னார். முதல்நாள் ஒரு இலட்சம் ரூபாய் நட்ட ஈடு தருவதாக வாக்களித்துவிட்டு, அடுத்த நாள் இரண்டு இலட்சம் தருவதாகவும், விசாரணைக் கமிசன் போட்டு அமர்நாத் சாவுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்கப் போவதாக உறுதி கூறினார். உள்துறை உளறுவாய் மன்னிப்பு புகழ் போலிக் கம்யூனிஸ்டு இந்திரஜித் குப்தா அமர்நாத்துக்குப் பறந்து போய் விட்டு வந்து, தன் பங்கிற்கு நீலிக் கண்ணீர் வடித்தார். ஆனால் ''பகுத்தறிவு வழி வந்த'' திராவிடக் கட்சிகளோ, ''அம்பேத்கர் வாரிசுகளான'' பகுஜனக்காரர்களோ, சோசலிசம் பேசும் லோகியாவாதிகளோ, போலிக் கம்யூனிஸ்டுகளோ எவருமே ''மதவிவகாரம் - இயற்கை விபத்து'' என்று கூறத் துணியவே இல்லை.



இயற்கையின் சீற்றத்தால் இறந்துபோன யாத்திரிகர்கள். இந்து மத சேவையில் இந்திய இராணுவம்

அந்த அளவுக்கு ஓட்டுப் பொற கட்சிகள் எல்லாம் இந்துமயமாகிய இங்கே விநாயகர் ஊர்வலம் ந போன்றுதான் அங்கே அமா



படிப்பகம்

www.padippakam.com

திரை. அரசியல் நோக்கத்துக்காக நடத்தப்படுகிறது. காஷ்மீரின் சிரீநகருக்குக் கிழக்கே நூறுகிலோ மீட்டர் தொலைவில் 12,729 அடி உயரத்தில் பனிப்பாறைகளுக்கு இடையில் உள்ளது அமர்நாத் குகை. அங்கே ஆண்டுதோறும் பனிப்பொழிவின் போது சிவலிங்கம் போன்ற ஒரு பனிக்குன்று உருவாகும். காணாமல் போன தனது கால்நடைகளைத் தேடி பனிக்காடுகளில் பத்து நாள் அலைந்து திரிந்த ஒரு முசுலீம்தான் அந்த பனிக் குன்றை முதலில் பார்த்தவர். அவர் வந்து சொல்லித்தான் தெரிந்து கொண்ட இந்துக்கள், அந்த அதிசயத்துக்கு தானே தோன்றிய ''பனி லிங்கம்'' - எனப் பெயரிட்டு, அதற்கு ஏதோ மகிமை இருப்பதாகக் கருதி, ஆண்டுதோறும் யாத்திரை போய் தரிசித்து வந்தனர். இதுவும் ஓரிரு நூற்றாண்டுகளாகத்தான். எளிதில் சென்றடைய முடியாத இடத்திலிருக்கும் ஒரு உருவத்தை விரதமிருந்து, சிரமப்பட்டுப் போய்த் தரிசிப்பதில் ஒரு கவர்ச்சிகரமான பக்தி எல்லா நாடுகளிலும் உண்டுதான். சபரிமலை, மகாலிங்க மலை, மாதேசுவரமலை, வெள்ளியங்கிரி மலைக்குப் போய்வருவது போன்றுதான். அப்படிச் சாதாரண வழிபாட்டுக்குரியதாக இருந்ததுதான் அமர்நாத் யாத்திரை. அதையே, காஷ்மீரின் சுயநிர்ணய உரிமைப் போருக்கு எதிரான இந்துவெறியைக் கிளப்புவதற்காக அரசியல் சாயம் பூசி, அரசே ஏற்பாடு செய்து நடத்தும் யாத்திரையாக்கப்பட்டு விட்டது.

வழக்கமாக ஆண்டுதோறும் எட்டடி உயரத்துக்கு இந்தப் பனிலிங்கம் உருவாகும்; பின்னர் உருகிவிடும். இந்த ஆண்டு வெப்பநிலை உயர்ந்து மூன்றடிதான் உருவானது. இதனால் பக்தர்களிடையே போதிய கவர்ச்சி இல்லாமல் போய்விடும் என்று கருதிய அரசே 10 அடி உயர பனிலிங்கப் படச் சுவரொட்டிகளை ஒட்டினர் என்கிறது ''ஒரு தேசிய''ப் பத்திரிகை. கடந்த ஆண்டுகளைப் போல தீவிரவாதிகளின் தடை - மிரட்டலும் கிடையாது. 1200 முகாம்களும், குளிருக்குப் பாதுகாப்பான போர்வைகளும், உணவும் அரசே இலவசமாக வழங்கும் என்று பிரச்சாரமும் செய்தனர். நெருக்கடி ஏற்படுத்த வேண்டுமென்றே ஆட்களைத் திரட்டிக் கொண்டு போனது ஆர்.எஸ்.எஸ். அமைப்பு. வழக்கத்தைவிட அதிகமான அளவு — அதாவது ஒன்றேகால் இலட்சம் யாத்திரிகர்கள் திரட்டப்பட்டனர். அவர்கள் பயணம் முழுவதையும் இந்திய இராணுவமே பொறுப்பேற்று ஏற்பாடு செய்தது. ''காசுமீரில் தீவிரவாத - பிரிவினைவாத - பாகிஸ்தான் கூலிப்படையினர் ஒடுக்கப்பட்டுவிட்டனர்'' என்று காட்டிக் கொள்வதற்காகவே அரசே முன்னின்று நடத்தியதுதான் இந்த யாத்திரை.

சிரீநகர் அல்லது ஜம்முவில் இருந்து 53 கி.மீ-ல் உள்ள பெகல்காம் வரைதான் வாகனங்கள் போகும். பிறகு 47 கி.மீ நடந்தும், மட்டக் குதிரையிலும், ஆறு ஆட்கள் சுமக்கும் ''பாடை''யிலும்தான் போக வேண்டும். அப்படிப் போய் வரும்போது யாரும் எதிர்பாராத வகையில் பருவநிலை மாறுதல் அடைந்து கடும்மழை, கடுங்குளிர், பனிப்பொழிவு, நிலச்சரிவில் சிக்கி பலர் மாண்டனர். அவர்களில் பலர் குளிரும், அழுத்தமும் தாளமாட்டாமல், மூச்சுத் திணறி, இரத்தக் குழாய் வெடித்து மாண்ட வயோதிகர்கள். யாத்திரிகர்களையும் பொருட்களையும் சுமந்து சென்ற முசுலீம் உழைப்பாளிகள் பலரும் கூட மாண்டு போயினர். உண்மையில் நாம் அக்கறைப்படுவதற்கும், நட்ட ஈடு பெறுவதற்கும் உரிமையும் தகுதியும் உடையவர்கள் இந்த உழைப்பாளிகள்தாம்.

யாத்திரிகர்களைப் பொறுத்தவரை முதியோரும் நோயாளிகளும் ஆபத்தானது என்று தெரிந்தே பயணம் மேற்கொண்டனர். ஒரு மத வழிப்பாட்டிற்கான சொந்தப் பொறுப்பில் போய், இயற்கையின் அழிவினால் மாண்டவர்களுக்கு மதச்சார்பற்ற அரசு ஏன் நட்ட ஈடு தரவேண்டும்? ஒரு மதவழிபாட்டுச் செயலுக்கு அரசியல் கட்சிகள் இவ்வளவு தூரம் ஏன் அக்கறைப்படவேண்டும்.

இதே அரசும், இதே அரசியல் கட்சிகளும், இவற்றின் கொள்கையாலும், திட்டங்களாலும் அவலநிலைக்குத் தள்ளப்பட்ட கோடானு கோடி மக்களின் வாழ்க்கை பற்றி இதில் சிறிதளவேனும் அக்கறை காட்டுகின்றனவா? ஒரிசாவிலும், பீகாரிலும், மராட்டியத்திலும் மக்கள் பட்டினி சாவுகளுக்குப் பலியாகின்றனர். கர்நாடகாவிலும் ஆந்திராவிலும் விவசாயிகளும் தொழிலாளர்களும் தமது தொழில்களைத் தொடர முடியாமல் தற்கொலை செய்து கொள்கின்றனர். 1984-இல் இந்திரா சாவைத் தொடர்ந்து நடந்த சீக்கியர் படுகொலைகள், போபால் விஷ வாயுப் படுகொலைகள் இவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இன்னமும் நட்ட ஈடு கிட்டவில்லை. இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். நியாயமான இத்தகைய வழக்குகளுக்கு அக்கறை காட்டுவதை விடுத்து, இந்து மதவெறியூட்டி காஷ்மீர் மக்களை மேலும் அடக்கி ஒடுக்குவதற்கான ஒரு காரணத்தைத் தேடும் முயற்சிக்கு உடந்தையாகப் போனவர்களுக்கு அக்கறைப்படுவது அரசும் கட்சிகளும் எந்தஅளவு இந்துத்துவத்துக்கு வால் பிடிப்பவையாக உள்ளன என்பதைக் காட்டுகின்றன.

அதே சமயம் காஷ்மீரி இசுலாமிய மக்கள் மதவேறுபாடும் வெறுப்பும் பாராட்டாது மனிதாபிமான உணர்வோடு, பாதிக்கப்பட்ட யாத்திரிகர்களுக்கு உணவு, தங்குமிடம், குளிருக்கான போர்வைகள் கொடுத்துப் பேருதவி செய்துள்ளனர். இந்துத்துவப் பிரச்சாரத்துக்கு பலியாகியிருந்த யாத்திரிகர்களே காஷ்மீர் இசுலாமிய மக்களின் மனிதாபிமான அணுகுமுறை கண்டு நெகிழ்ந்து போய்விட்டனர். • ஆர்.கே.

## ''சாலைகளிலும் அநாதைகள் உண்டு!'' — அதிகாரிகளின் ஒப்புதல் வாக்குமூலம்

விருத்தாசலம் - தொழுதூர் பிரதான சாலையில் இருந்து பிரிந்து, ஆலிச்சிக்குடி, க. இளமங்கலம், சாத்துக்கூடல், உச்சிமேடு போன்ற கிராமங்களுக்குச் செல்லும் சாலையில் 250 மீ (இரண்டு பர்லாங்) தொலைவுள்ள பகுதி கடந்த இருபது வருடங்களாக தமிழக அரசின் எந்தத் துறையைச் சேர்ந்தது என்பது தெரியாமலேயே இருந்து வந்தது. இதன் காரணமாக இச்சாலை பராமரிக்கப்படாமல், குண்டும் குழியுமாக, போக்குவரத்திற்கு இலாயக்கற்றதாக இருந்து வந்தது.

கடந்த 3.9.96 அன்று அச்சாலையை பராமரிக்கவும் - குடிநீர் வசதி கோரியும், பு.மா.இ.மு. தலைமையில் மேற்சொன்ன நான்கு கிராம மக்களும் விருத்தாசலம் - தொழுதூர் சாலையில் அமர்ந்து மறியல் செய்தனர். ஊராட்சி, நகராட்சி நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் ஒவ்வொருவரும், ''இந்த ரோடு எங்களோடது இல்லை; நாங்க எழுதியே தருகிறோம்'' எனக் கூறி, சாலையை அநாதையாக்கி, தங்களது பொறுப்பை கை கழுவ முயன்றனர்.

ஆனாலும் சாலை மறியல் தொடர்ந்து நடைபெறவே, போலீசைக் கொண்டு ஆர்ப்பாட்டக்காரர்களை மிரட்டி, போராட்டத்தை முறியடித்துவிட முயன்றனர், அதிகாரிகள். உழைக்கும் மக்களின் போர்க் குணத்தைக் கண்ட போலீசோ, தனது மிரட்டலை கைவிட்டு, 500 அடிக்கும் அப்பால் ஓடிப் போய் ஒதுங்கிக் கொண்டது. போராட்டத்தின் தீவிரத்தைக் கண்டு ஓடி வந்த உதவி மாவட்ட ஆட்சியாளர், ''இந்தச் சாலையை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்வதாகவும், இரவுக்குள் குண்டு குழிகளில் மண் போட்டு நிரப்புவதாகவும், குடிநீர், மின்விளக்கு பிரச்சினைகளை மூன்று நாட்களுக்குள் தீர்ப்பதாகவும்'' வாக்குறுதி அளித்த பின்னர் சாலை மறியல் விலக்கிக் கொள்ளப்பட்டது.

கிராம மக்கள் மத்தியில் ''பு.மா.இ.மு.வினர் நக்சலைட்டுகள்'' என பயபீதியூட்டி இப்போராட்டத்தை பிசுபிசுக்கச் செய்துவிட முயன்றன ஓட்டுக் கட்சிகள். ஆனால், போராட்டத்தில் நான்கு கிராமங்களைச் சேர்ந்த பெருவாரியான மக்கள் கலந்து கொண்டதும், போராட்டத்தின் வெற்றியும் எதிரிகளின் முகங்களில் கரிபூசி விட்டன.

தகவல்:
பு.மா.இ.மு., விருத்தாசலம்.



படிப்பகம்

# இந்தியன் வங்கி திவால்

## அம்பலமானது மூப்பனார் கும்பலின் யோக்கியதை

'யோக்கியர்கள் வருகிறார்கள், சொம்பை எடுத்து உள்ளே வை' என கிராமத்தில் சொலவடை சொல்வார்கள். மூப்பனார் கதையும் இது போல்தான் உள்ளது. பத்திரிக்கைகளில் பத்தரை மாற்றுத் தங்கம் என கூவி விற்காத குறையாக தமிழ் மாநில காங்கிரசு பற்றி எழுதினார்கள்.

இன்றைக்கு இந்தியன் வங்கி திவாலாகி விட்ட விவகாரத்தில் த.மா.கா.வின் யோக்கியதை சந்தி சிரிக்கிறது. 'ஊரான் வீட்டு நெய்யே என் பொண்டாட்டி கையே' என்ற கதையாக இந்தியன் வங்கியை அதன் தலைவரும் நிர்வாக இயக்குனருமாக இருந்த கோபால கிருஷ்ணனும், மூப்பனாரும் சூறையாடிவிட்டனர் என்றால் மிகையாகாது.

திவாலான இந்தியன் வங்கியை 'ஸ்டேட் வங்கி'யுடன் இணைக்கப் போவதாக ஒரு வதந்தி உலா வந்தது. இந்தியன் வங்கியில் நடந்த முறைகேடுகள் பற்றி விசாரிக்க சி.பி.ஐ. களத்திலிறங்கியுள்ளது.

சுமார் 27,000 ஊழியர்களுடன் நாடு முழுவதும் கிளைகளைக் கொண்ட பெரிய வங்கிகளுள் ஒன்று இந்தியன் வங்கி. தவிர வெளிநாடுகளிலும் கூட கிளைகள் உண்டு. இன்றைய வங்கியின் நிலைமை இதுதான்.

• வங்கியின் மூலதனம் ரூ. 1062 கோடி. '95-96-ம் ஆண்டு கணக்குப் படி வங்கியின் நட்டம் ரூ. 1336.4 கோடி. அதாவது நட்டம் மூலதனப் பணத்தையும் விட மிக அதிகம். வங்கியில் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட நட்டத்தைக் கூட்டினால் ஒட்டுமொத்த நட்டம் ரூ. 1712.79 கோடி.

• 94-95-ம் ஆண்டில் மொத்த லாபம் ரூ. 83.43 கோடி. ஆனால் கடந்த ஆண்டுகளில் வங்கி கொடுத்த கடனில் திரும்ப வசூலிக்க முடியாத கடன் என ரூ. 69.17 கோடி கணக்கிடப்பட்டு, லாபத் தொகையிலிருந்து கடன் ஈடு செய்யப்பட்டது. எனவே நிகர லாபம் ரூ. 14.26 கோடி.

• முதல் ஆண்டு லாபம் ரூ. 14.26 கோடி. அடுத்த ஆண்டு நட்டம் ரூ. 1336 கோடி. அதாவது நட்டம் சுமார் 100 மடங்கு அதிகம். இது திடீரென வந்த நட்டமல்ல. கோபாலகிருஷ்ணனின் லீலைகளால் ஏற்பட்டது. உடந்தை மூப்பனார். சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என சுப்ரமணியசாமியும், வாழப்பாடியும் ஏக கூச்சல்களைக் கிளப்பினர். 'கவுடா அரசு என்ன செய்யப் போகிறது? மத்திய மந்திரிகளான த.மா.கா. கட்சிக்காரர்களான சிதம்பரமும், எஸ்.ஆர்.பியும் இதில் தலையிடக் கூடாது' என்று பேட்டியளித்தனர்.


• மூப்பனாரோ 'கடன் கேட்டு வந்தவர்களுக்கு உதவும்படி எல்லா வங்கிகளுக்கும் அனுப்பினேன். அதுபோல இந்தியன் வங்கிக்கும் அனுப்பினேன். விதிமுறைகளின்படி கடன் தந்திருக்கவேண்டும். விதிமுறை மீறப்பட்டிருந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல' என கை கழுவுகிறார்.

நிதியமைச்சர் சிதம்பரமோ 'பாரபட்சமற்ற விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. முறைகேடுகளுக்கு யார் பொறுப்போ அவர்கள் மீது கட்டாயம் நடவடிக்கை உண்டு' என உறுதி கூறுகிறார்.

• இதற்கிடையில் கோபாலகிருஷ்ணன் த.மா.கா. உறுப்பினரானார். வங்கி முறைகேடுகள் அம்பலமாகவே கட்சி உறுப்பினரிலிருந்து ராஜினாமா செய்தார். தன் மீதுள்ள பொய்க் குற்றச் சாட்டை நீக்கியபின் மீண்டும் உறுப்பினராவேன் எனக் கூறியுள்ளார் கோபாலகிருஷ்ணன்.

விசயம் இதுதான். மத்தியில் ஆளுங் கட்சியாயிருந்தது காங்கிரசு கட்சி. அன்றைக்கு ஓய்வு பெற இருந்த கோபால கிருஷ்ணனுக்கு 1993-லிருந்து 1995 டிசம்பர் 31 வரை சுமார் 7 முறை பதவி நீட்டிப்பு தரப்பட்டது. பதவி நீட்டிப்புகள் வாங்கித் தந்தவர் மூப்பனார். அக்காலகட்டத்தில் வங்கியிலிருந்து கடன் முறையற்ற வகையில் வழங்கப்பட்டுள்ளது.

இப்போது கூச்சலிடும் சுப்ரமணிய சாமியும், வாழப்பாடியும் அன்றைக்கு மூப்பனாருடன் இருந்தவர்கள் தான். கட்சிக்கு ஆள் பிடிக்க அரசு வங்கியை ஆட்சியாளர்கள் பயன்படுத்துவது ஒன்றும் புதிய விசயமல்ல. ஏற்கனவே 'லோன் மேளா' புகழ் ஜனார்த்தனன் பூஜாரியின் அடிச்சுவட்டை மூப்பனார் கடைப்பிடித்துள்ளார் என்பதுதான் உண்மை. மூப்பனார் மந்திரியாயில்லை. எனவே அதிகாரி கோபாலகிருஷ்ணனே செயல்பட்டுள்ளார், மூப்பனாரின் விருப்பப்படி.



இந்தியன் வங்கியைத் திவாலாக்கிய கூட்டாளிகள்: மூப்பனார்-கோபாலகிருஷ்ணன்.

• மூப்பனார் எப்போது டில்லிக்கு பறந்தாலும் பயன்படுத்துவது 'ஈஸ்ட்-வெஸ்ட் ஏர்லைன்ஸ்' என்ற தனியார் விமான நிறுவன சேவையில்தான். இந்த தனியார் விமான நிறுவனம் கடன் பெறுவது மட்டும் இந்தியன் வங்கியில். தனது அன்றாட வரவு - செலவு கணக்கை வேறு வங்கியில் வைத்துள்ளது.

இந்த தனியார் விமான நிறுவனம் கூடுதலாக ரூ. 17.26 கோடி வரை பணம் எடுக்க இந்தியன் வங்கி போர்டு அனுமதித்தது. ஆனால் இந்திய வங்கியோ ரூ. 107 கோடி வரை பணம் எடுக்க அனுமதித்துள்ளது. உபயம் மூப்பனார் என்று சொல்லித்தான் தெரிய வேண்டுமா என்ன!

• சுமார் 10 நிறுவனங்கள் சுமார் 1000 கோடி ரூபாய் வரை கடன் பெற்றுள்ளன. இவை 'எம்.வி.ஆர். எக்ஸ்போர்ட்ஸ்', 'கணபதி எக்ஸ்போர்ட்ஸ்', 'பிரசாத் ஸ்டுடியோஸ்', 'ஏக்நாத் வீடியோஸ்', 'ஈஸ்ட் வெஸ்ட் ஏர்லைன்ஸ்' முதலியன. இதில் எம்.வி.ஆர். எக்ஸ்போர்ட்ஸ்' நிறுவனம் மட்டுமே ரூ. 350 கோடி கடன் வசதி பெற்றுள்ளது. இவை முழுவதிலும் அரசியல் காரணங்களால் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன.

• ஒரு நிறுவனம் ரூ. 20 கோடி கடன் கேட்டு விண்ணப்பிக்க, அந்நிறுவனத்திற்கு ரூ. 100 கோடி கடன் தந்துள்ளனர்.

• வங்கியிடம் பணம் இல்லாத போது, தனது வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்ய வெளியில் 25% முதல் 60% சதம் வரை அதிக வட்டிக்கு கடன் பெற்று, 18% என குறைந்த வட்டியில் கடன் வழங்கும். இந்த வகையில் 1992-93விலிருந்து 94-95-க்குள் 407% கடன் அதிகரித்துள்ளது. இதில் பயனடைந்தவர்கள் மேற்குறிப்பிட்ட 10 நிறுவனங்கள். இவை பெரும்பாலும் மூப்பனாருடன் தொடர்புடையவை.

• கோபாலகிருஷ்ணனும் தனிப்பட்ட முறையிலும் விதிமுறைகளை மீறி கடன் வழங்கியுள்ளார். இவர் கலந்து கொள்ளாத



படிப்பகம்

www.padippakam.com

பொது நிகழ்ச்சி ஏதுமில்லை எனுமளவிற்கு அனைவருக்கும் வாரி வழங்கியுள்ளார். கடன் தொகைக்கு ஈடாக, சொத்து மதிப்பு உள்ளதா என்று கூட பார்ப்பதில்லை. இப்படி சொத்து மதிப்போ வட்டி வருமானமோ இல்லாத மோசமான கடன் தொகை மட்டும் சுமார் 976 கோடி ரூபாய். ஆனால் வட்டி வருமானம் எதுவுமே இல்லாத போதும் வட்டி வருமானம் வந்ததாக பொய்க் கணக்கு எழுதியுள்ளனர். ஏனெனில் தான் ஓய்வு பெறும் போது வங்கி சிறந்த முறையில் இயங்கியுள்ளது என்ற புகழுடன் ஓய்வு பெறவே கோபாலகிருஷ்ணன் இப்படி செய்துள்ளார்.

ஒரு சில நிறுவனங்கள் பலநூறு கோடி ரூபாய் பெற்று மேலும் கொள்ளையடிக்க வழிவகை செய்துள்ளார். இதுதான் உண்மை. யானை தின்னும்போது சிதறியவைகளை பல ஆயிரம் எறும்புகள் உண்ணுவது போல, சிறு நிறுவனங்கள் சில பயனடைந்திருக்கலாம். ஆனால் பொது மக்களின் சேமிப்பிலிருந்து விரல்விட்டு எண்ணும் சிலர் பலகோடி விழுங்கியுள்ளதை நியாயப்படுத்த முடியாது.

கடன் வசூலாகிவிடும். வங்கியில் நட்டம் என்பதெல்லாம் இல்லை என ஓங்கியடிக்கிறார் கோபாலகிருஷ்ணன். அங்குள்ள தற்போதைய நிர்வாகமும் விசயங்களை




அரசு வங்கிகள் வழங்கியுள்ள மொத்த கடன் தொகையில் 80 சதவீதத்தை, கடன் பெற்றவர்களில் ஆறு சதவீதத்தினர் அனுபவித்து வருகின்றனர். பலகோடி பொதுமக்களுக்குச் சொந்தமான 1,29,673 கோடி ரூபாய் இன்று இவர்களின் கரங்களில் சிக்குண்டுள்ளது. இந்தியன் வங்கிக்கு ஏற்பட்டதைப் போன்ற நெருக்கடி, மற்ற பிற அரசு வங்கிகளுக்கும் நேர வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

• மேலும் இரண்டு ஆண்டுகளாக வட்டியோ, தவணையோ செலுத்தாத கடனுக்கு வங்கியானது அரசிடம் முறையிட்டு, பணம் பெற்று ஈடுசெய்ய வேண்டும். 94-95-ஆம் ஆண்டில் உண்மையில் நட்டம் வந்தபோதும், பொய்க்கணக்கு எழுதி லாபம் என கணக்கு காட்டி 'நன்றி, பணம் வேண்டாம்' என இந்தியன் வங்கி மறுத்துவிட்டது. வங்கி நிலைமை தெரிந்தவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

• வங்கியில் பணம் போடுபவர்கள் சதவீதம் மிகவும் குறைந்து கொண்டே வந்துள்ளது.

இவ்வாறாக வங்கியின் நிதி நிலை மோசமாக இருந்த போதும், வங்கியின் நிர்வாக கமிட்டி (போர்டு) இவற்றை முறையாக பரிசீலிக்கவில்லை. இக்கமிட்டியில் ரிசர்வ் வங்கியிலிருந்தும், நிதி அமைச்சகத்திலிருந்தும் பிரதிநிதிகள் உள்ளனர்.

தற்போது கோபால கிருஷ்ணன் 'வங்கியின் அனைத்து நடவடிக்கைகளும் கமிட்டியில் பரிசீலிக்கப்பட்டே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. ஏதாவது முறைகேடு நடந்திருப்பின் நான் தனிப்பட்ட பொறுப்பு ஏற்க இயலாது என நழுவுகிறார்.

மேலும் தொழில்களும் விவசாயமும் …ருக்குத் தான் உதவியதாக பெருமைப்படுகி… வங்கி தேசியமயமாக்கப்பட்டதின் …க்கப்படியே செயல்பட்டதாக நியாயப்…துகிறார்.

வெளிப்படுத்தாமல் மூடி மறைக்கிறது. தொழிற்சங்கங்களும் உடந்தையாகத்தானுள்ளன.

ஹர்சத் மேத்தா குற்றவாளி என்ற போதும் தனது செயலை நியாயப்படுத்தினான். 'தன்னை மேலும் தொடர்ந்து செயல்பட அனுமதித்தால், இந்தியாவின் அன்னிய கடனையே அடைத்து விடுவேன்' என்று பெருமை பேசினான்.

கோபால கிருஷ்ணனும் தொழிலை, விவசாயத்தை வளர்த்ததாக நியாயப்படுத்துகிறார். ஓட்டுப் பொறுக்கிகள் வங்கிகளை சூறையாடுவது தொடர்ந்தால் பல 'இந்திய வங்கிகள்' திவாலாகி, பொதுமக்களுக்கு 'பட்டை' போடும் காலம் வெகு தொலைவிலில்லை.

• பாரி

எமது விற்பனையில் புதிய வெளியீடுகள்

**இந்தியப் பெருமுதலாளி வர்க்கம் – ரூ. 80.00**

**மாவோவின் சிந்தனைகள் – ரூ. 20.00**

**கீழைக்காற்று,**
10, ஔலியா சாகிபு சந்து, எல்லீசு சாலை, சென்னை-600 002.

## ஆபாசத்தை எதிர்த்த பெண்கள் கைது - சித்திரவதை கருணாநிதியின் கபட வேடம்

பார்த்தீனியம் போல் பரவிவரும் ஏகாதிபத்திய ஆபாச - பண்பாட்டுச் சீரழிவை எதிர்த்துப் போராடி வரும் தமிழ்நாடு பெண்ணுரிமைக் கழகம், கடந்த 26.8.96 அன்று தமிழக சட்டசபையில் ஆபாச எதிர்ப்பு துண்டறிக்கைகளை வீசியெறிந்தனர். சென்னையில் ஆபாச புத்தக எரிப்பு, மதுரையில் ஆபாச திரைப்படச் சுருள் எரிப்பு, ஆபாச புத்தகங்கள் - திரைப்படங்களைத் தடை செய்யக் கோரி அரசு அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் - என்ற போராட்டங்களின் தொடர்ச்சியாகவே, சட்டசபையில் துண்டறிக்கைகள் வீசியெறியப்பட்டன.

இத்துண்டறிக்கைகளால் சூடுபட்டுப் போன சட்டசபை உறுப்பினர்கள், ''சட்ட சபையின் புனிதத் தன்மையைக் கெடுத்துவிட்டதாக'' ஓலமிட்டனர். ''சட்டசபையின் பெண் காவலாளிகளைக் கடித்து விட்டனர்; கர்ப்பிணிப் பெண்களைத் தள்ளி விட்டனர்'' எனப் பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, பிரசுரங்களை வீசியெறிந்த 8 பெண் தோழர்களுக்கு இரண்டு நாள் சிறை தண்டனை விதித்தது. தமிழக சட்டசபை. ஆனால் இப்புனிதப் பேர்வழிகள் வக்கிர புத்தியோடு, சட்டசபையில் பெண்களை ''ஸ்டெப்னி'' என இழிவுபடுத்தி பேசிய பொழுது, இந்தப் புனிதம் எங்கு போய் மறைந்து கொண்டதோ?

இரண்டு நாட்கள் சிறை தண்டனை முடிந்து வெளி வந்த இந்த எட்டு பெண் தோழர்களும் சிறை வாசலிலேயே வைத்து போலீசாரால் கடத்திச் செல்லப்பட்டனர்; சட்டவிரோதமாக இப்பெண்களை அடைத்து வைத்து, அடித்துச் சித்திரவதை செய்து, பொய் வழக்கு பதிவு செய்து வேலூர் மத்திய சிறைக்கு கொண்டு சென்றது போலீசு. இப்பெண்களின் வீடுகளில் நள்ளிரவு நேரத்தில் அத்துமீறி நுழைந்து, உறவினர்களையும், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களையும் மிரட்டிச் சென்றனர் ''க்யூ'' பிரிவு போலீசார். சிறையில் அடைக்கப்பட்ட பெண்களை மனு போட்டு பார்ப்பதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது. வேலூர் சிறையில் இருந்து பிணையில் வெளி வந்த இப்போராளிகளை, மதுரையில் நீலத் திரைப்படச் சுருளை எரித்த வழக்கை காரணம் காட்டி, மதுரைக்கு கடத்திச் சென்று மீண்டும் சிறையில் அடைத்தது தமிழகப் போலீசு. ''இப்பெண்களை தீவிரவாதிகள் அனுப்பி வைத்துள்ளனர்'' என சட்டசபையில் அவதூறு செய்து, சதித்தனம் நிறைந்த இந்த அடக்குமுறைகளை மூடி மறைத்துவிட முயலுகிறார், கருணாநிதி.

**தகவல்:**
**தமிழ்நாடு பெண்ணுரிமைக் கழகம், தமிழ்நாடு.**



படிப்பகம்

www.padippakam.com

# அலமாதி அணை: மற்றுமொரு காவேரியா?

மகாராட்டிரம், கர்நாடகம், ஆந்திர மாநிலங்களின் வழியே ஓடும் கிருஷ்ணா நதியிலும் கர்நாடகம் கைவைத்துள்ளது. ஏற்கனவே காவிரியில் கை வைத்தது கர்நாடகம். நெற்கதிர்கள் தலைசாயும் தஞ்சைத் தரணியில் இன்றைக்கு இறால் மீன்கள் துள்ளுகின்றன. தஞ்சை பாலையாகி வருகிறது.

கிருஷ்ணா நதியின் குறுக்கே ஏற்கனவே ஆல்மட்டியில் ஒரு அணை கட்டப்பட்டுள்ளது. அந்த அணையின் மட்டத்தை உயர்த்திக் கட்ட கர்நாடக அரசு முடிவெடுத்துக் கட்டத் தொடங்கி விட்டது. மார்ச் '96 லேயே அணை மட்டம் உயர்த்தப்படுவதற்கு எதிராக ஆந்திர மாநில சட்டமன்றத்தில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதைப் பிரதமருக்கும் ஆந்திர மாநிலம் அனுப்பி வைத்தது.

ஆந்திர மாநிலம் அணை மட்டம் உயர்த்தப்படுவதற்கு எதிராக மூன்று காரணங்களை முன் வைக்கிறது.

1. ஆந்திர மாநிலத்திலுள்ள ஏழு மாவட்டங்களில் சுமார் 35 லட்சம் ஏக்கர் விவசாய விளை நிலங்கள் பாதிக்கப்படும்.
2. ஸ்ரீசைலம், நாகார்ஜுனசாகர் அணைகளிலுள்ள நீர்மின் நிலையங்களின் உற்பத்தி பாதிக்கப்படும்.
3. முதல்போக விவசாயம் முற்றாக அழிந்து போகும்.

இந்தக் காரணங்களை கர்நாடகம் மறுக்கிறது. ஆல்மட்டி அணை உயர்த்தப்படுவது நீர்மின் உற்பத்திக்காக மட்டுமே. நீரைத் தேக்கி திறந்துவிட்டு விடுவோம். எப்போதும் போல் ஆந்திரத்திற்கு நீர் கிடைக்கும். ஆந்திர மாநிலம் அணை மட்டம் உயர்த்தப்படுவதால் பயப்பட வேண்டாம் என கர்நாடக அரசு சமாதானம் கூறுகிறது.

இதை நேர்மையாகக் கூறி, உத்தரவாதமளித்து, ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றினால் பிரச்சினை இருக்காது. ஆனால் தொடர்ந்து கர்நாடகத்தின் செயல்கள் சந்தேகப்பட வைக்கின்றன.

தேவேகவுடா முதல்வராக கர்நாடகத்தில் பொறுப்பு ஏற்றவுடன் ஆல்மட்டி அணையை உயர்த்திக் கட்டுவது என முடிவு செய்தார். இதற்கு எதிராக ஆந்திர சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. கர்நாடகமோ ஆந்திர மாநில எதிர்ப்பைப் புறக்கணித்து, அணை மட்டத்தை உயர்த்தும் கட்டுமானப் பணிகளைத் தொடங்கியது.

ஆந்திர மாநிலம் அங்குள்ள உயர்நீதி மன்றத்தில் கட்டுமானப் பணிகளுக்கு தடையுத்தரவு போட வேண்டும் என மனுச் செய்தது. ஆந்திர உயர்நீதி மன்றமும் உடனே தடை விதித்தது. ஆனால் மாநிலங்களுக்கிடையே சட்ட சிக்கல் எழும் என்பதால் தனது முந்தைய உத்தரவைத் திருத்தி '509 மீ. உயரம் வரை மட்டுமே அணை கட்டவேண்டும், எனத் தீர்ப்பளித்தது.

ஆனாலும் கர்நாடகம் கட்டுமான வேலைகளை நிறுத்தாமல் தொடர்ந்தது. இப்போது தேவே கவுடா பிரதமர். எனவே அணை வேலைகள் முடுக்கிவிடப்பட்டன. ஆந்திராவில் காங்கிரஸ், பா.ஜ.க., தெலுங்கு தேசம் (பார்வதி) உட்பட எதிர்க் கட்சிகள் அனைத்தும் அணை மட்டம் உயர்த்துவதை கடுமையாக எதிர்த்தன. சந்திரபாபு நாயுடு ஐ.மு. அரசுக்கான ஆதரவைத் திரும்பப் பெற வேண்டும், மத்திய அமைச்சரவையிலிருந்து ஆந்திர மந்திகள் பதவி விலக வேண்டும் என்றன.

அணை கட்டுமானப் பணிகள் நிறுத்தப்படாததால் ஆந்திர முதல்வர் பிரதமர் மீது குற்றம் சாட்டினார். கர்நாடக மாநிலத்திற்கு ஆதரவாக மறைமுகமாக சதிசெய்கிறார் தேவேகவுடா என்றார். இதற்கு பதிலடியாக கர்நாடக முதல்வர் படேல், 'சந்திரபாபு நாயுடு மிரட்டிப் பணிய வைக்க முயல்கிறார்' எனக் குற்றம் சாட்டினார். பிரதமரோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்நிலையில் ஆந்திர முதல்வர் ''மத்திய அரசுக்கான ஆதரவை திரும்பப் பெற வேண்டியிருக்கும்'' என பத்திரிகையாளர்களிடையே பேசினார்.

அதன் பின்தான் பிரதமர் தேவே கவுடா இரு முதல்வர்களையும் கூட்டி ஆகஸ்ட் 6-ல் பேச்சு வார்த்தை நடத்த முடிவு செய்தார். இதற்கிடையே பிரதமரின் தாயார் இறந்ததால் முதல்வர்கள் பேச்சு நடக்கவில்லை.

ஆனால் ஆகஸ்ட் 5-ம் தேதி இரு மாநில தலைமைச் செயலர்கள் பேச்சு வார்த்தை நடத்தினர். மத்திய நீர் கமிசன் தலைவரும் உடனிருந்தார். இவர் கர்நாடக மாநிலத்தின் செயலை நியாயப்படுத்தி, பச்சாவத் கமிசனின் பரிந்துரை மீறப்படவில்லை என்றார்.

இந்நிலையில்



**அணை உயர்த்தப்படுவதை நேரில் சென்று அம்பலப்படுத்தும் ஆந்திர சட்டமன்ற உறுப்பினர்கள்.**

1. மத்திய நீர் கமிசன் தலைவரின் செயல் ஆந்திர முதல்வரை மேலும் ஆத்திரமடைய வைத்தது.

2. ஏற்கனவே ஆந்திர உயர்நீதி மன்றத்தில் போட்ட வழக்கில் கர்நாடகம் எதிர்மனு தாக்கல் செய்த போது 'ஜூலை 4-ம் தேதியே இரண்டாம் கட்டப் பணிகளுக்கு மத்திய நீர் கமிசன் அனுமதியளித்ததாக'க் கூறியது. ஆனால் ஜூலை 11-ம் தேதி ஆந்திர முதல்வருக்கு கடிதம் எழுதிய ஜானேஸ்வர் மிஸ்ரா (மத்திய நீர்வ[illegible] அமைச்சர்) ''இரண்டாம் கட்டப் ப[illegible]ளுக்காக அனுமதியளிப்பது இன்னு[illegible] திய நீர் கமிசன் பரிசீலனையில் [illegible] கிறது'' எனக் குறிப்பிட்டிருந்தார் [illegible]

3. அணை மட்டம் உயர் [illegible] அரசு ரூ. 200/- கோடி [illegible]



படிப்பகம்

www.padippakam.com

தாக கர்நாடக நீர்ப்பாசன அமைச்சர் நாக கவுடா ஒரு அறிக்கையில் கூறியது சிக்கலை மேலும் அதிகரித்தது.

முரண்பட்ட செய்திகள், எதிர்க்கட்சிகளின் நிர்ப்பந்தம் ஆந்திர முதல்வரை ஆத்திரமூட்டவே, திரும்பவும் மத்திய அரசுக்கான ஆதரவை திரும்பப் பெறுவது பற்றி பேசினார்.

ஆகஸ்ட் 10-ல் மூன்று மாநில முதல்வர்களின் கூட்டத்தால் எவ்வித முடிவும் கிட்டவில்லை.

ஐ.மு. அரசின் வழிகாட்டும் கமிட்டியிடம் சந்திரபாபு நாயுடு முறையிட்டார். தமிழ்நாடு, பீகார், அசாம், மே.வங்க மாநில முதல்வர்களைக் கொண்ட ஒரு கமிட்டியிடம் பிரச்சினைக்கு முடிவு காண விடப்பட்டது. அக்கமிட்டி 9 பேர் கொண்ட நிபுணர் குழுவை நியமித்து, பிரச்சினை பற்றி ஆய்வறிக்கை தரக் கோரியது. அக்

என வெறியைத் தூண்டி அரசியல் ஆதாயம் தேட முயல்கின்றன.

முன்னாள் காங்கிரஸ் முதல்வர் வீரப்ப மொய்லி 'மத்தியிலோ, மாநிலத்திலோ ஜனதா தளம் ஆட்சியிலிருந்தால் கர்நாடக நதி நலன் பாதுகாக்கப்படுவதில்லை' என வெறியைத் தூண்டி விடுகிறார். படேலோ "கட்டுமானப் பணிகளை நிறுத்தும்படி யாரும் எம்மைக் கோர முடியாது" எனக் கட்டுமானப் பணிகளை முடுக்கி விடுகிறார்.

பிரச்சினை தீர்க்க என்ன செய்யப் போகிறார் பிரதமர் என்ற பத்திரிகையாளர்கள் பேட்டியில் "ஆல்மட்டி அணை கட்டும் வேலை நான் பிரதமராகும் முன் முடிவு செய்யப்பட்டு தொடங்கப்பட்ட ஒன்று" என கவுடா கூறுகிறார். அம்முடிவெடுத்ததே முதல்வராயிருந்த கவுடாதான்.



**ஆல்மட்டி அணையின் உயரம் அதிகரிக்கப்படுவதை எதிர்த்து பாராளுமன்றம் முன் ஆந்திர எம்.பி.க்கள் நடத்திய "தர்ணா".**

கமிட்டியில் திட்டக் கமிசன் மற்றும் மத்திய நீர் கமிசன் உறுப்பினர்களும் இருந்தனர்.

இந்த உறுப்பினர்களை நிபுணர் குழுவிலிருந்து திரும்பப் பெற்றது மத்திய அரசு. ஏற்கனவே இதுபற்றிய வழக்கு நீதிமன்றத்திலிருப்பதால், மத்திய அரசு அதிகாரிகள் ஆய்வுக் கமிட்டியிலிருப்பது சட்டசிக்கலை ஏற்படுத்தும் என சட்ட அமைச்சகத்திலிருந்து வந்த ஆலோசனையின் பேரில் இந்நடவடிக்கை என மத்திய அரசு கூறியது. ஆனால் சட்டத்துறையோ 'எம்மிடம் ஆலோசனை கேட்கப்படவில்லை. எவ்வித ஆலோசனையும் தாம் வழங்கவில்லை' என மறுப்பு அறிக்கை வெளியிட்டது. இது சந்தேகத்தை மேலும் அதிகரிக்கிறது.

இதற்கிடையில் நிபுணர் குழு ஆய்வு செய்ய கர்நாடக மாநிலம் சென்ற போது மாநில அரசு அனுமதி மறுத்துவிட்டது. அம்மாநில காங்கிரசு, பாரதீய ஜனதா கட்சிகள் இரண்டும் அணை உயர்த்த வேண்டும்

• ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தை மீறி, கர்நாடகா கூடுதல் நீரைத் தேக்கி வைக்க அணை மட்டத்தை உயர்த்துகிறது. பிரச்சினையத் தீர்ப்பதற்கு பதில் சதி செய்வது போல செயல்படுகிறது.

• சமீபத்தில் ஆந்திர உயர்நீதி மன்றம் மற்றொரு தீர்ப்பு வழங்கியுள்ளது. மத்திய அரசு உடனே தலையிட்டு பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதே அத்தீர்ப்பு. இதுவும் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

• ஆந்திராவின் நியாயமான கோரிக்கை புறக்கணிக்கப்படுகிறது. காவிரியில் செய்தது போல கர்நாடகா இதிலும் அடாவடித்தனம் செய்கிறது.

ஆக காவிரியில் தமிழனின் செந்நீரை ஓடவிட்ட 'தேசிய' கட்சிகள், ஆல்மட்டி அணை பிரச்சினையிலும் எதிரெதிர் முகாம்களில் நின்று 'தேசிய ஒற்றுமை'க்கு போராடி வருகின்றன.

• மாரி

## காமவெறியன் - கொலைகாரன் பிரகாஷ் — சோமரசம்பேட்டை போலீசு கள்ளக் கூட்டு

திருச்சி உய்யங்கொண்டான் பகுதியில் காமாட்சி அம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த எலீசா என்ற இளம் பெண் 17.08.96 அன்று சந்தேகத்திற்கிடமான சூழலில் மரணமடைந்தார். இவர் கடந்த மூன்று வருடங்களாக, அப்பகுதியில் இயங்கி வரும் பிரஜா பழரச நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். சம்பவ தினத்தன்று அந்நிறுவனத்தின் முதலாளி பிரகாஷ் வீட்டில் எலீசா சமையல் செய்து கொண்டிருந்தபொழுது, தீப்பிடித்து இறந்துபோனதாக செய்திகள் வெளிவந்தன.

இச்சம்பவம் பற்றி அப்பகுதி மக்களிடத்திலும், பிரகாஷ் வீட்டிற்கு கீழ்



**கால்கள் கட்டப்பட்ட நிலையில் தீக்கிரையான எலீசா**

வீட்டிலும், எதிரேயும் குடியிருப்பவர்களிடத்தில் பெண்கள் விடுதலை முன்னணியினர் விசாரித்ததில், எலீசா தீப்பிடித்து இறந்து போனதாகத் தெரியவில்லை. மாறாக, காமவெறியன் பிரகாஷ், எலீசாவைப் பாலியல் பலாத்காரப்படுத்திக் கொலை செய்துவிட்டு, தடயங்களை மறைப்பதற்காக எலீசாவின் சடலத்தை எரித்திருக்கலாம் என நம்புவதற்கான காரணங்களையே காண முடிகிறது. விசாரணை நடத்தி வரும் சோமரசம்பேட்டை போலீசு அதிகாரி இராசேந்திரன், கொலைகாரன் பிரகாஷுக்கும், எலீசா குடும்பத்தாருக்குமிடையே சமரசம் செய்து வைப்பதிலேயே குறியாக இருக்கிறார்.

பெண்கள் விடுதலை முன்னணியினர் இப்படுகொலை பற்றிய உண்மைகளையும், பிரகாஷுக்கும் சோமரசம் பேட்டை போலீசாருக்கும் இடையே உள்ள கள்ளத் தொடர்பை அம்பலப்படுத்தியும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்; உய்யங்கொண்டான் பகுதியில் 50-க்கும் அதிகமான சுவரொட்டிகளை ஒட்டினர். தகவல்: பெண்கள் விடுதலை முன்னணி, திருச்சி.



படிப்பகம்

# ஈழத் தமிழரின் அழிவில் நிம்மதி கொள்வது யார்?

www.padippakam.com

**தமிழ் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த நண்பர் நாத்திகம் நந்தனார் பு.ஜ. மீது தொடுத்துள்ள விமர்சனத்திற்கு மறுப்பு.**

ச. நாத்திக நந்தனார்,
தமிழ் தமிழர் இயக்கம்,
சென்னை - 600 048.

அன்பின் தோழருக்கு,

'புதிய ஜனநாயகம்' ஆகஸ்டு இதழ் வந்தது. நன்றி! நம் மக்கட்கு நல்லதை சொல்லும் பல நல்ல இதழ்கள் நின்று நின்று வெளி வருவது வழக்கமாகி விட்டது.

தங்கள் இதழ் கேள்வி - பதில்களோடு மாறுதலுடன் வரப்போகும் குறிப்பு படித்தேன். உங்கள் இதழில் முதலில் கட்டுரைகள் நீள நீளமாக வருவதை உடனே நிறுத்துங்கள். எவ்வளவு நல்ல செய்தியும் பல பக்கங்கள் வெளி வருவது பெரும் சோர்வை தருகின்றது! ஈழப் பிரச்சனையை நீங்கள் எழுதாமலேயே இருந்தால் நன்றாக இருக்கும்! தமிழர்களுக்கு தமிழர்களே எதிரிகள். புலிகள் அழிந்தால் பலருக்கு நிம்மதி! உங்களுக்கும் தான்.

செய்திகளை ஒரு பக்கம் அரைபக்கம் என்ற அளவோடு நிறுத்துங்கள்.

அன்போடு
ச. நாத்திக நந்தனார்
22.8.96

நண்பர் நாத்திக நந்தனார் அவர்களே,

தங்கள் கடிதத்திற்கும் அறிவுரைகளுக்கும் நன்றி! பாலிலே நஞ்சு கலந்து ஊட்டுவது போல, ஆக்கபூர்வமான தங்கள் அறிவுரைகளுக்கிடையே, அவதூறான ஒரு நிந்தனையும் செய்துள்ளீர்கள். அது குறித்து எங்கள் கருத்தை, விளக்கத்தைத் தர வேண்டிய கடமைப்பட்டுள்ளோம்.

''தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு வன்கொடுமை - பாசிச இயக்கம். அதன் தலைமையை ஈழ மக்கள் நிராகரிக்க வேண்டும். புலிகளின் இயக்கம் ஈழத் தமிழர்களுக்கு உண்மையான விடுதலையைப் பெற்றுத் தராது. அந்த இயக்கத்தின் தலைமையில் தமிழீழம் அமைந்தால் அது மக்கள் நாயக உரிமையுடன் கூடியதாக இருக்காது. பாசிசக் கொடுங்கோன்மை அரசாகவே இருக்கும். சிங்கள பேரின பாசிச ஒடுக்குமுறைக்கெதிரான ஈழத்தமிழரின் போராட்டமும் தியாகமும் உண்மையான விடுதலையையும் மக்கள் நாயகத்தையும் இலட்சியமாகக் கொண்டிருக்க வேண்டுமே தவிர இன்னொரு பாசிச வன்கொடுமைக்கு வழிவகுப்பதாக இருக்கக்கூடாது. ஆகவே, ஈழத் தமிழர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈ.பி.டி.பி., பிளாட், டி.யு.எல்.எஃப் போன்ற துரோகிகளை நிராகரித்ததைப் போலவே புலிகள் இயக்கத்தையும் நிராகரித்து, மக்கள் நாயகத் தன்மையுடைய புதிய தலைமையை உருவாக்கிக் கொண்டு தமது தேசிய விடுதலைப் போரைத் தொடர வேண்டும். ஒரு நீண்ட கால அரசியல் போக்கில் சிங்களப் பாட்டாளி மக்களுடன் இணைந்த புதிய ஜனநாயகப் புரட்சியே சரியான இறுதியான தீர்வாக இருக்கும். ஆனால் அந்த சாத்தியம் ஈடேறும் வரை ஈழத் தமிழரின் தேசிய இன விடுதலை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. குறைந்தபட்ச, உடனடி தீர்வாக இனவிடுதலைப் போரைத் தொடர வேண்டும் - '' இதுதான் எங்களுடைய நிலைப்பாடு.

எங்களது நிலைப்பாடு எப்படித் தவறு என்று தகுந்த காரணகாரியங்களுடன், யாராலும் சொல்லப்படவில்லை. மாறாக ''கையை முறுக்கிக் காரியத்தை சாதிக்க முயலுவதைப் போல'' எங்களுக்கு எதிராக அவதூறுகளைப் பேசியே புலிகளுக்கு ஆதரவு தேடுவதற்கான முயற்சியே தொடர்கிறது.

''விடுதலைப்புலிகளை ஆதரிக்கவில்லை, விமர்சிக்கிறார்கள். ஆகவே, இவர்கள் ஈழவிடுதலைக்கு எதிரானவர்கள்'' என்று ஒரு அவதூறு. ஒரு தலைவனை, ஒரு இயக்கத்தை ஒரு தேசத்துக்கு இணையாக வைப்பதும் துதிபாடுவதும் ''இந்திராவே இந்தியா, இந்தியாவே இந்திரா'' என்றதைப் போன்று பாசிசப் பண்பு என்பது நீங்கள் அறியாததல்ல.

நாங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத்தான் ஆதரிக்கவில்லையே தவிர, ஈழவிடுதலையை ஆதரிப்பதில் இந்நாட்டிலுள்ள வேறு எந்த அமைப்புகளையும் விட குறைவான உறுதி காட்டிச் சற்றும் பின்வாங்கியதில்லை. அதற்காக எங்களது அமைப்பு எதிர் கொண்ட அடக்குமுறையும் குறைவானதில்லை. கொஞ்சம் நினைவுபடுத்திப் பாருங்கள். ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து வந்த நாட்களில் ஈழ அகதிகளுக்கும் - ஈழப் போராளிகளுக்கும் குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கும் எதிராக ர்ாவ் - ஜெயா கும்பல் பாசிசத் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டனர். அப்போது நீங்கள் பங்கேற்ற சாலை இளந்திரையன் தலைமையிலான குழு உட்பட அனைத்துப் புலிகள் ஆதரவு தமிழினவாதக் குழுக்களும் கடைப்பிடித்த கொள்கை தான் என்ன? அது வரையிலான வீரதீரச் சவடால்கள் போன இடம் எங்கே? இப்போது மாபெரும் தியாகிகள் என்று இக்குழுக்களால் நேரடியாகவும் மறைமுகமாகவும் போற்றப்படும் சிவராசனும், தாணுவும், சுபாவும் சி.ஐ.ஏ. ''ஏஜெண்டுகளாக'' அல்லது வேறு ஏதோ கூலிப்படை என்று அவதூறு பேசி தமது தோலைக் காத்துக் கொள்வதில் முனைப்புக் காட்டவில்லையா? புலிகளின் தளபதி கிட்டு இதற்கு மேலே ஒரு படி போய் ராஜீவைக் கொன்றவர்கள் ''புதிய ஜனநாயகம்'', ''புதிய கலாச்சாரம்'' இயக்கத்தவராக இருக்கும் என்று இலண்டனில் இருந்து பார்ப்பன தினமணிக்கு பேட்டி கொடுத்தார். ''விடுதலை'' உட்பட ''தமிழர்'' ஏடுகள் அதைப் பிரசுரித்து மகிழ்ந்தன.

நாங்களோ, விடுதலைப் புலிகள் உட்பட ஈழப்போராளிகளுக்கும் ஈழ அகதிகளுக்கும் எதிரான எல்லா அடக்குமுறைகளையும் எதிர்த்து தொடர்ந்து இயக்கமெடுத்து ''தடா'', தேசியப் பாதுகாப்புச் சட்டம், அரசு துரோக வழக்குகளில் சிறையிலடைக்கப்பட்டோம். இன்னும் அந்த வழக்குகள் நீடிக்கின்றன. ஆனால் புலிகளின் தமிழ்நாட்டு விசுவாசிகளோ அப்படி இயக்கமெடுத்து அடக்குமுறையைச் சந்திப்பது ''பாறையில் தலையை மோதிக் கொள்வது போன்றது. இப்போதைக்கு சும்மா இருப்பதுதான் புத்திசாலித்தனம்'' என்று உபதேசித்தனர்.

''தமிழீழ விடுதலைப் புலிகளையும் சிங்கள பேரினவாத பாசிச அரசையும் சமமாகப் பாவிக்கிறார்கள்'' என்பது எங்கள் மீதான வேறொரு அவதூறு. ஈழமக்களுக்கும் புலிகளுக்கும் எதிரான சிங்கள, இந்திய இராணுவத்தாக்குதல்களை எப்போதும் எதிர்த்து வந்திருக்கும் அதே சமயம், இவற்றுக்கு எதிராகவும், இவற்றின் அரசியல் தலைமைக்கும் எதிராக புலிகள் நடத்தும் இராணுவ எதிர் தாக்குதல்களையும் அழித்தொழிப்புகளையும் நாங்கள் எதிர்த்தது கிடையாது. மாறாக இத்தகைய நடவடிக்கைகளின் நியாயத்துக்காக வாதாடி வந்திருக்கிறோம். சிங்கள சிவிலியன்களையும், இசுலாமியர்களையும், ஈழத்தமிழர்களிலேயே துரோகிகள் அல்லாதவர்களையும் தம்மோடு கருத்து வேறு பாடு கொண்டவர்களையும் விடுதலைப் புலிகள் படுகொலை செய்வது, தடை செய்வது உட்பட அவர்களின் மக்கள் நாயக விரோத பாசிசத்தை மட்டுமே எதிர்த்து வந்திருக்கிறோம்.

''பார்ப்பன துக்ளக் 'சோ'வின் நிலைப்பாடும், புதிய ஜனநாயகத்தினரு



படிப்பகம்

www.padippakam.com

டையதும் ஒன்றுதான்'' என்று மேலும் ஒரு அவதூறு. ஈழத்தமிழினத்தின் அடிப்படைக் கோரிக்கையான சுயநிர்ணய உரிமையை எதிர்ப்பதும், சிங்கள பேரின ஒடுக்குமுறையையும் இந்தியத் துணைவல்லரசு பிராந்திய விரிவாக்க ஆதிக்கத்தையும் ஆதரிப்பது தான் சோவின் நிலைப்பாடு. எங்களுடைய நிலைப்பாடு அதுவா? ''ஈழத் துரோகிகள் தவிர புலிகள் உட்பட எல்லா போராளிக் குழுக்களுக்கும் ஈழ அகதிகளுக்கும் இந்திய மண்ணில் புகலிடம் கொள்ள உரிமை கிடையாது. போராளிகளை ஒழித்துக் கட்டுவதோடு அகதிகளையும் நாட்டைவிட்டு விரட்ட வேண்டும்'' என்பதுதான் சோவின் நிலைப்பாடு. எங்களுடைய நிலைப்பாடு அதுவா? புலிகள் உட்பட ஈழப் போராளிகளையும் ஈழ அகதிகளையும் வேட்டையாடியதற்காகவே பாசிச ஜெயாவை ஆதரிப்பதும், அப்படிச் செய்யும்படி கருணாநிதியை நிர்ப்பந்திப்பதும், இல்லை என்றால் நிந்திப்பதும் தான் சோவின் நிலைப்பாடு. எங்களுடைய நிலைப்பாடு அதுவா? பிரேமதாசா, காமினி, லலித் அத்துலத் முதலி, பத்மநாபா, ராஜீவ் ஆகியோரின் சாவுக்கு கண்ணீர் சிந்துவதும் கிட்டு, சிவராஜன், சுபா ஆகியோரின் கொலைக்கு குதூகலமடைவதும் தான் சோவின் நிலைப்பாடு. எங்களுடைய நிலைப்பாடு அதுவா? இப்படியே அடுக்கிக் கொண்டே போகலாம்.

திராவிட, தமிழினவாத வரலாறை அறிந்த நீங்கள் சற்றுப் பின்னால் திரும்பிப் பார்த்தால் இதுவொன்றும் புதிதல்ல என்பதை அறிவீர்கள். தங்கள் கருத்தோடு உடன்படாதவர்களை எதிரிகளுடன் இணை வைத்து அவதூறு செய்வதும், பார்ப்பன முத்திரை குத்தி தம்மீதான விமர்சனங்களில் இருந்து திசை திருப்பி விடுவதும் ஒரு எளிய வழி முறையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கருணாநிதிக்குக் துதிபாடி ''டாக்டர்'' பட்டம் வழங்குவதை எதிர்த்து அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் போராடியபோது, எவ்வளவு பெரிய பகுத்தறிவுவாதி பெரியார் ஈ.வெ.ரா என்ன சொன்னார்? ''நக்சல்பாரிகள் என்பவர்கள் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் திரட்டிய ஆயுதப் பயிற்சி பெறும் வன்முறையாளர்கள்'' என்று முத்திரை குத்தவில்லையா?

அதைப்போன்றுதான், ''தமிழர் நலன்களுக்கு தமிழர்களே எதிரிகள். புலிகள் அழிந்தால் பலருக்கு நிம்மதி! உங்களுக்கும்தான்'' என்று எழுதியுள்ளீர்கள். இப்படி யாருக்கு யார் எதிரி என்பதை அடையாளங் காட்டுவதன் விபரீதத்தை நீங்கள் உணர்ந்துதான் எழுதினீர்களா, இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால் ஒன்றை மட்டுமே சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். ராஜீவின் கொலைகாரர்களாக இருக்கலாம் என்று எங்களுக்கெதிராக ''ஆட்காட்டிவேலை செய்த'' கிட்டுவின் மரணத்துக்குக் காரணமான இந்தியக் கடற்படைத் தாக்குதலை அறிந்து ஆத்திரங் கொண்டு எழுதியவர்கள் நாங்கள். இப்படிப் பல எடுத்துக் காட்டுகள் கூற முடியும். இருந்தாலும் புலிகள் அழிந்தால் எங்களுக்கு நிம்மதி என்று எழுதியுள்ளீர்கள்.



ஈழத்தின் தனிப்பெரும் தலைவனாக முடிசூடிக் கொள்வதே பிரபாகரனின் இலட்சியம்.

உண்மையில் நீங்கள் கூறும் மேற்படி வாசகம் புலிகளுக்குத்தான் பொருந்தும். அமிர்தலிங்கம், பத்மநாபா போன்ற ஈழ துரோகிகள் அல்லாத ராஜினி திரணகம, யாழ் புத்தக நிலையம் மணி அண்ணாச்சி, கந்தசாமி போன்று புலிகளால் கொல்லப்பட்ட பலரும் தமிழர்கள் தாம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இவர்கள் செய்த ''குற்றமெல்லாம்'' புலிகளின் கருத்துகளுடன் உடன்படாது அவர்களின் பாசிச நடவடிக்கையை விமர்சித்ததுதான். தங்களை விமர்சிப்பவர்களுக்கு எதிராகப் பாசிசத் தாக்குதல் நடத்துவதை புலிகள் ஈழத்தோடு நிறுத்தவில்லை. அகதிகளாக ஈழத் தமிழர்கள் தஞ்சம் புகுந்துள்ள பல நாடுகளிலும் தொடருகிறார்கள். இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு பார்த்தால் தெரியும், தமிழர்களின் நலன்களுக்கு எதிரானவர்கள், தமிழர்களின் அழிவில் நிம்மதி கொள்பவர்கள் யாரென்பது.

இறுதியாக மீண்டும் ஒரு முறை தொகுத்துச் சொல்கிறோம் - புலிகளுக்கு எதிரான எங்கள் விமர்சனத்தை!

★ தம்மோடு கருத்து மாறுபாடு கொண்டுள்ள, ஈழத் துரோகிகளல்லாத ஈழப் போராளி அமைப்புகளைத் தடை செய்து, மக்கள் நாயகவாதிகள் பலரும் புலிகளால் கொல்லப்படுகின்றனர். ஏறத்தாழ 6000 பேர் புலிகளின் வதை முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர்.

★ இந்திய உளவுப்படை ''ரா''வின் தூண்டுதலால் சிறுகுழந்தைகள், நிராயுதபாணிகளான பெண்கள், முதியோர்களான சிங்கள சிவிலியன்களும், நூற்றுகணக்கில் புலிகளால் கொல்லப்பட்டனர். இது இன்னமும் தொடரும் அதே சமயம் ஈழத்தை விட்டு இசுலாமியர் அனைவரும் கெடு வைத்து விரட்டப்பட்டதோடு தொழுகை நடத்திக் கொண்டிருந்த இசுலாமியர்களை மசூதிக்குள் புகுந்து சுட்டுக் கொன்றனர்.

★ இந்திய, இஸ்ரேலிய உளவுப்படைகளிடம் பயிற்சி பெறுவது, ராஜீவ், பிரேமதாசா, சந்திரிகா ஆகியோருடன் இரகசிய பேரங்கள் நடத்திப் பல கோடி ரூபாய் ஈட்டுத் தொகையாகப் பெறுவது ஆகிய ஈழதுரோக வேலைகளில் புலிகள் ஈடுபட்டனர்.

★ இந்திரா, ராஜீவ் ஆகியோரின் துணை வல்லரசு தெற்கு ஆசிய வட்டார ஆதிக்க - விரிவாக்கக் கொள்கையை இன்னமும் ஆதரிப்பது, இந்தியப் பிழைப்புவாத அரசியல்வாதிகளுடன் கூடிக் குலாவுவது ஆகியவற்றின் மூலம் புரட்சிகர சக்திகளையும் இயக்கங்களையும் பலவீனப்படுத்தி வருகிறார்கள், புலிகள்.

★ ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கும், விடுதலைக்கும் மேலாக பிரபாகரன் தலைமையிலான ஒரு கும்பல் நலனை முன்னிறுத்தி, ஈழ மக்களின் முழு பலத்தையும் ஒன்று திரளவிடாது சிதறடிக்கின்றனர்.

எங்களுடைய மேற்கண்ட விமர்சனங்களுக்கு, ''போரில் சில மிகை நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதவை'', ''புலிகள் மட்டுமே போர்க்களத்தில் இருக்கின்றனர்'', ''புலிகளால் மட்டுமே ஈழத்தமிழருக்குப் பாதுகாப்புத் தர முடியும்'' என்பது போன்ற வழக்கமான மழுப்பல்கள் இல்லாமல் தகுந்த பதில் கிடைக்குமானால் அவற்றை நாங்கள் பரிசீலிப்போம்.

• ஆசிரியர் குழு



படிப்பகம்

# புரட்சியாளர்களின் எதிர்ப்பால் இலஞ்சப் பேய்கள் ஓட்டம்

பெரம்பலூர் - திருவள்ளுவர் மாவட்டம் செயங்கொண்டம் காந்தி நகர் பகுதியில், மனைவரி தோராயப் பட்டாவுக்கான சர்வே நோட்டீசும், பதிவுகளை மாற்றம் செய்வதற்கான அறிவிப்பு நோட்டீசும் பெரம்பலூர் தனி வட்டாட்சியர் அலுவலகம் மூலம் கடந்த 25.8.96 (ஞாயிற்றுக்கிழமை) அன்று விநியோகிக்கப்பட்டன. இந்த நோட்டீசுகளைக் கொடுப்பதற்கு, அந்த அலுவலகத்தைச் சேர்ந்த சர்வேயர் துரைசாமி நோட்டீசு ஒன்றிற்கு ஐந்து ரூபாய் இலஞ்சமாகப் பெற்றுள்ளார்.

இது குறித்து செயங்கொண்ட சோழபுரம் பகுதி பு.மா.இ.மு. தோழர்கள், தனி வட்டாட்சியர் அலுவலகம் சென்று புகார் செய்தனர். இதனால் ஆத்திரமடைந்த சர்வேயர் துரைசாமி, தனது கூட்டாளிகளான த.மா.கா. நகரத் தலைவர் நாராயணன், துணைத் தலைவர் ஜெயப்பிரகாஷ், தி.மு.க.வைச் சேர்ந்த கணேசன், குமாரவேல் என்ற நால்வரையும் அனுப்பி, புகார் மனுவை திரும்பப் பெறக் கோரி பு.மா.இ.மு. தோழர்களை மிரட்டினார். இம்மிரட்டல் பலனளிக்காது போகவே, சர்வேயர் துரைசாமி பகுதி பு.மா.இ.மு. செயலர் சுப்பிரமணியத்தைத் தேடி வந்து, காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டார். தோழர். சுப்பிரமணியம் துரைசாமியிடம், "இலஞ்சப் பணத்தை திருப்பிக் கொடுத்து விடு" என உறுதியாகக் கூறினார்.

இதன்பின் துரைசாமி மீதமிருந்த நோட்டீசுகளை, இலஞ்சம் கேட்காமல் சம்பந்தப்பட்டவர்களிடம் கொடுத்தார். அதே சமயம் ஏற்கனவே இலஞ்சம் கொடுத்து நோட்டீசு பெற்றவர்கள், தங்கள் பணத்தை திரும்பக் கொடுக்கக் கோரி, துரைசாமியை நிர்பந்திக்கத் தொடங்கினர். அவர்களிடம் மன்னிப்புக் கோருமளவு துரைசாமியின் நிலை பரிதாபமாகிப் போனது.

இதனையடுத்து, 28.8.96 அன்று செயங்கொண்டம் தேவாங்க நடுத்தெருவில் தமிழக அரசின் இலவச வேட்டி - சேலையினை வழங்கும் பொழுது, கிராம நிர்வாக அலுவலர் இராசாராமும், அவரது உதவியாளர்கள் தங்கராஜ், சிதம்பரம், ஜோதிவேலு ஆகிய நால்வரும் வேட்டி - சேலை ஒன்றிற்கு ஐந்து ரூபாய் இலஞ்சமாகப் பெற்றனர். தி.மு.க.வைச் சேர்ந்த காசிநாதன் இப்பகற்கொள்ளைக்குத் தரகராகச் செயல்பட்டார்.

இதையறிந்த பு.மா.இ.மு. தோழர்கள் குரு நமச்சிவாயம், முருகேசன், மணிகண்டன் ஆகியோர் வேட்டி - சேலை வழங்குமிடத்திற்கே சென்று, "இலவச வேட்டி சேலையை இலவசமாகவே வழங்கு" என முழக்கம் எழுப்பிப் போராடத் தொடங்கினர். இதனால் அரண்டு (?) போன அந்த அரசு ஊழியர்கள், இலஞ்சமாகப் பெற்ற பணத்தை திருப்பிக் கொடுத்ததோடு, டோக்கன் பெற்ற அனைவருக்கும் இலவச வேட்டி - சேலைகளை இரு நாட்களுக்குள் வழங்கிவிட்டனர்.

தகவல்:
பு.மா.இ.மு., செயங்கொண்ட சோழபுரம்

# பால் தாக்கரேக்கு எதிர்ப்பு பம்பாய் படத்துக்கு விருது!

'மார்க்சிஸ்டு'களின் இலக்கிய அமைப்பான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் (த.மு.எ.ச.) 17.08.96 அன்று சென்னையிலுள்ள இராணி சீதை அரங்கில், 95-ம் ஆண்டு சிறந்த திரைப்பட விருது வழங்கும் விழாவினை நடத்தியது. பரிசு பெற்ற மூன்று தமிழ் திரைப்படங்களுள், மணி ரத்னத்தின் பம்பாயும் ஒன்று.

இந்து மதவெறியை எதிர்ப்பதாக [illegible]டும் மார்க்சிஸ்டுகளின் இந்தப் போலித்தனத்தை அம்பலப்படுத்தி, சென்னை - ம.க.இ.க. தோழர்கள் "கொலைகாரன் பால் தாக்கரே ஆசி பெற்ற பம்பாய் படம், சி.பி.எம். காம்ரேடுகளுக்குச் சிறந்த படமா?" என்ற வினாவை எழுப்பி, விழா நடந்த அரங்கத்தைச் சுற்றி சுவரொட்டிகளை ஒட்டியிருந்தனர்.

ம.க.இ.க. தோழர்களின் நியாயமான இக்கேள்விக்கு அவதூறுகளையே பதில்களாக அள்ளி வீசினர், விழா நாயகர்கள். விழாவில் தலைமையுரையாற்றிய த.மு.எ.ச. மாநிலத் தலைவர் செந்தில்நாதன், "நகைமுகன் பால் தாக்கரேயோடு கூட்டுச் சேர்ந்ததைப் போல, இவர்களும் (ம.க.இ.க.) தாக்கரேயோடு சேர்ந்து விடுவார்கள்" என ஆருடம் கூறி, ஆறுதல் தேடிக் கொண்டார். வாழ்த்துரை வழங்கிய நாவல் - சிறுகதை எழுத்தாளர் மேலாண்மை பொன்னுசாமி, "சுவரொட்டி ஒட்டியவர்கள் மட்டும் 100% சுத்தமானவர்களா?" என்ற அசட்டுத்தனமான கேள்வியை எழுப்பினார். "பம்பாய்" படம் பற்றி விமர்சன உரையாற்றிய நந்தலாலா, "யாரும் பாடம் சொல்ல வேண்டாம்" எனத் திமிரை வெளிகாட்டிக் கொண்டார். தேவர் சாதியினரின் 'பெருமை'களைப் பற்றியே படமெடுத்து வரும் பாரதிராஜா, தனது பசும்பொன் படத்துக்கும் விருது கிடைத்திட்ட போதையில், "இராணி சீதை ஹாலில் விழா நடத்துமளவு நீங்கள் வளர்ந்து விட்ட பொறாமையால், போஸ்டர் ஒட்டுகிறார்கள்.. அஞ்ச வேண்டாம்; நான் என்றும் உங்களுடன் இருப்பேன்" என அபயக்கரம் அளித்தார்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழுவில், பம்பாய் படம் பரிசுக்கு ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாம். இந்த 'வளர்ச்சி'யில் சென்றால் இராணி சீதை அரங்கத்திலென்ன, தாஜ் கோரமண்டல் ஐந்து நட்சத்திர விடுதியில் த.மு.எ.ச. கூட்டங்களை நடத்தும் நாள் வரலாம்.

தகவல்: ம.க.இ.க., சென்னை.

**பாரதிராஜாவுக்கு விருது வழங்கும் த.மு.எ.ச. தலைவர் செந்தில்நாதன்: சாதிப் பெருமைக்கு அங்கீகாரம்.**



www.padippakam.com

# சிவந்த கண்கள்  கவனிக்கட்டும்

★ முன்னாள் தென் கொரிய ஜனாதிபதி சன் டூ ஹ்வான்னுக்கு மரண தண்டனையும், அவரது வாரிசாக ஜனாதிபதி பொறுப் பேற்ற ரோ டே வூக்கு 22 ஆண்டு கால சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. 1979-ல் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தியதி லும், 1980 ஜனநாயகத்திற்காக ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் திரளினரைப் படுகொலை செய்ததிலும் முக்கிய பங்கு வகித்த குற்றத்திற்குதான் மேற்கூறிய தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

★ கடந்த ஆண்டு தொலைபேசித் துறையின் அடிப்படை சேவைகளை ஏலம் விட்டதில் பெரும் பலன் அடைந்த நிறுவனம் ஹிமாசல் ஃபியூச்சரிஸ்டிக் கம்யூனிகேஷன்ஸ் லிமிடெட். இந்நிறு வனத்திற்கு ஏலம் விட்டதில் பல முறைகேடுகள் நடந்ததை பாரா ளுமன்றத்தில் மூர்க்கமாக அம்பலப்படுத்தியது பா.ஜ.க. அந்த ஹெச்.எஃப்.சி.எல். நிறுவனத்தின் துணை பொது மேலாளர் சஞ் சய் பல்லா, இன்று உத்திரப் பிரதேச பா.ஜ.க.வின் தேர்தல் பிரச்சார நிர்வாகியாக லக்னோவிலிருந்து வேலை செய்து வருகிறார். இவ ரின் தந்தை மதிப்புமிக்க ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரகர்., கடந்த பொதுத் தேர்தலின் போது டெல்லியில் கட்சி தலைமையிடத்திலி ருந்து பா.ஜ.க.வின் பிரச்சார வேலைகளை நிர்வகித்து வந்தவரும் இதே பல்லா தான்.

★ பயங்கரவாதத்தை ஒடுக்குகிறோம் என்ற பெயரில் அப் பாவிகள் பஞ்சாபில் படுகொலை செய்யப்பட்டனர். கேட்க நாதி யில்லாமலிருந்தது. குர்தாஸ்பூர் மாவட்டத்திலுள்ள தர்யார் கிரா மத்திலுள்ள பிரிதம் கவுர் என்ற பெண்மணி போராடி ரூ. 10 லட்சம் நட்ட ஈடு பெற்றுள்ளார். கடந்த 1992-ல் இவரது சகோதரர்கள் மூவர் போலீசால் கடத்திச் செல் லப்பட்டு, சில மாதங்கள் கழித்து கொலை செய்யப்பட்ட னர். அவர்களைக் காண வில்லை என போலீசு கதை கட்டியது. பிரிதம் கவுர் வழக்குத் தொட ரவே சி.பி.ஐ. விசார ணைக்கு உத்தரவிடப் பட்டது. விசாரணைக் குப் பின் உச்சநீதி மன்றம் கடந்த மாதம் ஆகஸ்ட் 5-ல் நட்ட ஈடு தர உத்தர விட்டது. சகோதரர்கள் கொலை செய்யப்பட் டதை நேரில் பார்த்துவிட்ட ரஃபிக் மாசி என்பவரையும் போலீசார் 'காணாமற்' செய்து விட்டனர். இதையும் விசாரிக்க உச்சநீதி மன் றம் சி.பி.ஐ.க்கு உத்தரவிட்டுள்ளது.




அமெரிக்க ஏகாதிபத்தியமே வெளியேறு!
ஒகினவான் தீவு மக்களின் போராட்டம்

★ ஜப்பானின் ஒகினவான் பகுதியில் அமெரிக்க இராணுவத் தளம் உள்ளது. கடந்த ஆண்டில் மூன்று அமெரிக்க இராணுவ வீரர்கள் பள்ளிச் சிறுமியைப் பாலியல் பலாத்காரம் செய்தனர். எனவே அப்பகுதி மக்கள் அமெரிக்க இராணுவம் வெளியேற வேண்டும் எனக் கோரிக்கை வைத்துப் போராடி வருகின்றனர். ஏற்கனவே திட்டமிட்டபடி அமெரிக்க இராணுவம் தொடர்ந்து இருப்பதா, கூடாதா என மக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. மக்கள் பெருமளவில் ஓட்டளித்துள்ளனர். அமெ ரிக்கப் படையினரின் எண்ணிக்கை பெருமளவு குறைக்கப்படும் என்பது மட்டும் நிச்சயம்.

★ பவான் சிங் பாய் ரதோட் குஜராத் பாரதீய ஜனதா கட்சி எம்.எல்.ஏ. 1989-ல் ரூ. 1000 கோடி மதிப்புள்ள 1165 கிலோ கஷீஷ் என்ற போதைப் பொருள் கடத்தலில் பிடிபட்டவர். ஆனால் 1990-ல் சந்தேகத்திற்கிடமான முறையில் கேரளா அர சால் விடுதலை செய்யப்பட்டார். பின் 1992 முதல் வழக்கிற்கு ஆஜராகும்படி பலமுறை சம்மன் அனுப்பியும் வரவில்லை. கடந்த ஜூலை 31-ல் பிணையில் வரமுடியாத கைது உத்தரவு பிறப்பித்த பின், எர்ணாகுளம் மாவட்ட நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

★ ஆஸ்திரேலியப் பாராளுமன்றம் சமீபத்தில் தொழிலாளர் உரிமையைப் பறிக்கும் புதிய தொழிலாளர் சட்டத்தை இயற்றி யது. தேசிய வரவு-செலவில் சேவைத் துறைகளைப் புறக்கணித் தது. இவற்றைக் கண்டித்து 15,000 தொழிலாளர்கள் ஊர்வலமாக வந்து பாராளுமன்றம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். பாராளு மன்றத்தினுள் நுழைய முயன்ற அவர்களை போலீசு கட்டுப்படுத்த முனைந்த போது மோதல் ஏற்பட்டது. இதில் 60-க்கும் மேற்பட்ட போலீசார் காயமடைந்தனர். சில ஆர்ப்பாட்டக்காரர்கள் பாராளு மன்றக் கட்டடத்தின் உச்சியில் ஏறி ஆர்ப்பாட்ட கொடிகளைப் பறக்க விட்டனர். ஆட்சியாளர்கள் பீதியில் உறைந்து போயுள்ள னர்.

★ சமீபத்தில் பெண்களுக்கான தேசிய கமிசனின் தலைவர் மோகினி கிரி அமிர்தசரசிலுள்ள மத்திய சிறைக்குச் சென்றார். அங்குள்ள 60 பெண்களில் 5 பேர் மட்டுமே குற்றவாளிகள் எனத் தண்டிக்கப்பட்டவர்கள். மற்ற அனைவருமே விசாரணைக் கைதிக ளாக 2,3 ஆண்டுகளாக சிறைக் கொட்டடிகளில் அடைபட்டுள்ள னர். விசாரணை நடந்து நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையற்ற இவர்கள் கண்ணீருடன் மோகினியிடம் முறை யிட்டுள்ளனர். மருத் துவ வசதியோ, சுகாதார வசதியோ கிடையாது. குளிர் காலத்தில் விரைத் துச் சாகும்படியுள்ளது. அந்த அதிகாரி இவற் றைக் குறித்துக் கொண்டு சென்றுள்ளார்.

★ எதற்கெடுத்தா லும் சி.பி.எம். கட்சியி னர் மேற்கு வங்கத்தைப் பார், கேரளாவைப் பார் என்று பீற்றிக் கொள் வார்கள். நாமும் மேற்கு வங்கத்தைப் பார்ப் போம். கையால் மனி தரை இழுத்துச் செல்லும் கை ரிக்ஷா வண்டிகள் இன்னும் கல்கத்தா தெருக்களில் ஓடிக் கொண்டுள்ளன. மனிதனை மனிதனே இழுத்துச் செல்லும் நிலவு டைமைக் கொடூரம் இன்றுவரை தொடர்கிறது. தமிழ்நாட்டில் திமுக செய்த சீர்திருத்தத்தைக் கூட, 20 ஆண்டு கால சிபிஎம் ஆட்சி செய்யவில்லை. இப்போதும்கூட போக்குவரத்திற்கு கை ரிக்ஷா இடைஞ்சலாக இருக்கிறது என்றுதான் ஒழிக்கப் போகிறார் கள். அத்தொழிலாளிகளுக்கு மாற்று ஏற்பாடுகள் ஏதுமில்லை. ஒரு வேளை சிறு நகரங்களுக்கு மூட்டை கட்டி அனுப்பி வைப்பார் கள் போலும்!

★ 56 அந்நிய நிறுவனங்கள் நேரடியாக மூலதனமிட்டு தொழில் தொடங்க, மத்திய தொழில்துறை அமைச்சர் முரசொலி மாறன் அனுமதி தந்துள்ளார். இந்நிறுவனங்களின் மொத்த மூல தன மதிப்பு ரூ.925 கோடி. இந்நிறுவனங்கள் சூயிங்கம், மிட்டாய் கள் தயாரிப்பதிலிருந்து கணிப்பொறி ஆணைத் தொடர்கள் (சாஃப்ட்வேர்) தயாரிப்பது வரை சகல துறைகளிலும் ஊடுருவுகி றார்கள்.

Published and Owned by A. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Madras - 600 083.
Printed by him at EZHIL PAINTS, 110, II Floor, 63, Arcot Rd., Madras - 600 024. Editor: A. SHANMUGA RAJ

படிப்பகம்



சென்னையில் நடந்த ஓர் இசை நிகழ்ச்சிதான் அருகிலுள்ள இந்தப் படம். லக்ஷ்மண் ஸ்ருதி என்ற இசைக் குழுவும், தனியார் நிறுவனமொன்றும் இணைந்து நடத்திய இந்த திரையிசை நிகழ்ச்சி, சமூக சேவைக்கு நிதி திரட்ட நடத்துவ தாக விளம்பரப்படுத்தப்பட்டது. அதே சமயம் தங்கள் கல்லாவை நிரப்பிக் கொள்ள, ''பெண்கள் மட்டுமே நிகழ்ச் சிக்கு அனுமதிக்கப்படுவர்'' என்ற வியா பாரத் தந்திரத்தைப் புகுத்தினர்; ''பெண் மாலைப் பொழுது'' எனப் பெயரிடப் பட்ட இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தி னர் 'புதுமைப் பெண்' நடிகை ரேவதி. நிகழ்ச்சியின் துவக்கத்தில், ''பெண்ணுக் குப் பெண்தான் எதிரி'' என அவர் திரு வாய் மலர்ந்த பொழுது அமைதி காத்த பெண்கள், பாடல்கள் இசைக்கப்பட்ட பொழுது, அரங்கமே அதிர கூச்சலெ முப்பி நடனமாடினர். அருவருக்கத்தக்க இந்தக் கூத்து, அரங்கத்துக்கு வெளியே ஒளிநாடாவின் மூலம் ஒளிபரப்பப்பட, திரண்டு நின்ற ஆண்கள் கூட்டம் கண்டு ரசித்தது. வியாபாரிகளின் சமூக சேவையில் வக்கிரம்தான் நிரம்பி வழிந் தது.

இதோ இந்தப் போலீசுக்காரர் உற் றுப் பார்த்துக் கொண்டிருக்கிறாரே, அங்கே உடைந்து சிதறிக் கிடப்பதெல் லாம் மதுபான பாட்டில்கள். ஆந்திரா, குஜராத், ம.பி. மாநிலங்களையடுத்து உத்திரப் பிரதேச மாநிலத்தில் காசியா பாத் பகுதியில் உள்ள கிராமப்புற அடித் தட்டுப் பெண்கள் மதுபான விற்ப னைக்கு எதிராகப் பூண்டு வரும் போர்க் கோலத்தின் விளைவுதான் இது. ''ஜாக் ருதி சமாஜ்'' என்ற இயக்கத்தைச் சேர்ந்த இப்பெண்கள் கடந்த ஓரிரு மாதங்களில் அடித்து நொறுக்கிய / தீக்கிரையாக்கிய மதுபானக் கடைகளின் எண்ணிக்கை பனிரெண்டு. இப்பெண்கள் தொடுத்து வரும் தாக்குதலின் புயல் வேகம் கண்டு மலைத்துப் போய் நிற்கிறது சமூக விரோ திகளின் கூட்டம். குடி . கெடுக்கும் குடியை ஒழிக்கப் போராடும் இவர்களை, ''அமைதிக்கு ஆபத்தானவர்கள்'' என முத்திரை குத்தி, சிறையினுள் தள்ளி விட முயலுகிறது அதிகார வர்க்கம்.

'சமூக சேவையை' பொழுது போக் காக, விளம்பரம் தேடித் தரும் சாதனமா கக் காணும் நகர்ப்புற மேட்டுக்குடி பெண்கள் ஒருபுறம்; தங்களின் வாழ் வைச் சூறையாடி வரும் சமூக அநீதி களை, சங்கமாய்ச் சேர்ந்து எதிர்த்துப் போராடி வெற்றி பெற்று வரும் கிராமப் புற அடித்தட்டு பெண்கள் மறுபுறம். இவர்களுள் யார் புதுமைப் பெண்கள்?

# இதுதான் இன்றைய இந்தியா

